
கல்கி
ALKI
3.9.1962
30 காசு


LIFEBUOY
SOAP
LIFEBUOY SOAP
புதுமலர்ச்சி, புதுமலர்ச்சி என்று 'ஆடுவோமே,
பள்ளுப் பாடுவோமே,' ஆனந்தமாய் லைப்பாய் தேய்த்து நீராடுவோமே!
அழுக்கிலுள்ள கிருமிகளைக் கழுவிக் களைவது லைப்பாய் சோப்!
நம் குடும்ப முழுமைக்கும் நல்வாழ்வு நல்குவது
லைப்பாய் நல்லுறவு ... 'எல்லாம் இன்பமயம்!'
லைப்பாய் இருக்குமிடம், அதுவே ஆரோக்கியம் இருக்குமிடம்!
L.33-X52 TM
இந்துஸ்தான் லீவர் தயாரிப்பு

சுபகிருது, புரட்டாசி 7உ

கல்கி

செப்டம்பர் 23, 1962

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே ; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 22

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

இதழ் 8

நீதிபதியின் எச்சரிக்கை

சென்னை சர்வகலாசாலைப் பட்டமளிப்பு விழாவில் இந்திய உயர் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீ கே. சுப்பராவ் கூறிய அறிவுரைகள் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை. பட்டம் பெற்று வெளியேறும் மாணவர்களுக்குச் சொல்லப்பட்டவை என்றாலும் நாட்டு மக்கள் எல்லோருமே, முக்கியமாக ஆட்சி புரிந்து வரும் காங்கிரஸ் கட்சி ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய கருத்துக்கள் அவை.

அரசியல் சட்டத்தில் பிரஜைகளுக்குத் தங்கள் சுதந்திரத்தைக் காத்துக் கொள்வதற்குப் பல உரிமைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன ; ஆனால் நடைமுறையில் சட்டசபை நடவடிக்கைகளிலிருந்து தங்களையும் தங்களது சொத்துக்களையும் பாதுகாத்துக் கொள்ளும் ஆதார உரிமைகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை என்றே கூற வேண்டும் — இவ்வாறு ஆணித்தரமாகச் சொல்லி நீதிபதி அவர்கள், இப்போதுள்ள நிலைமையை மிகத் தெளிவாக விளக்கி வைத்தார்.

தனி மனிதனுடைய சொத்தை அரசாங்கம் எப்போது வேண்டுமானாலும் கைப்பற்றிக் கொள்ளலாம். ஆனால் அதற்குக் கொடுக்கப்படும் நஷ்டஈடு நியாயமானதுதானா என்பதை நீதி மன்றங்களின் மூலம் நிர்ணயித்துக் கொள்ள முடியாது.

புதுப்புதுச் சட்டம் செய்து அரசாங்கம் ஒருவனுக்குத் தன் சொத்துமீதுள்ள உரிமையை அதன் இஷ்டப்படி குறைத்தும் ஒழித்தும் விடலாம். ஆனால் அத்தகைய நடவடிக்கை தனது ஆதார உரிமையைப் பாதிக்கிறது என்று எந்தப் பிரஜையும் நீதிமன்றத்தில் வாதாட முடியாது.

அரசாங்கம் பிரஜைகளுக்குப் போட்டியாக எந்தத் தொழிலை வேண்டுமானாலும் ஆரம்பித்து நடத்தலாம். பிரஜைகள் தலையிடக் கூடாது என்று தடுத்து ஏகபோகமாகக் கூட அரசாங்கம் தொழில் நடத்தும். இவற்றைக் கண்டிக்க ஒருவருக்கும் உரிமை கிடையாது.

சட்டசபைகளின் சலுகைகளுக்கும், அதிகாரத்துக்கும் எதிராகப் பேச சாதாரண மக்களுக்குப் பேச்சுச் சுதந்திரம் கிடையாது. நிர்வாகத்தை எதிர்த்துத் தங்களுடைய உரிமைகளை நிலைநாட்டிக் கொள்ளலாம் என்று கருத்தளவில் வாதித்தாலும் இரு கட்சிமுறை என்ற ஜனநாயகம் நிலைக்காத வரையில், இந்த உரிமை நீர்மேல் எழுத்துப் போன்றதே. சட்டசபையின் உதவியில்லாமல் நிர்வாக உத்தரவுகள் மூலமே இந்த உரிமைகளைப் பறித்துவிடுவதும் சாத்தியமாகும்.

சட்டத்தின் முன்னிலையில் எல்லாப் பிரஜைகளும் சமம் என்றும் எல்லோருக்கும் சம உரிமை உண்டு என்றும் அரசியல் சட்டத்தில் கூறப்பட்டிருந்தாலும், இந்த உரிமைகள் எல்லாம் பெருமளவு குறைக்கப்பட்டுவிட்டன. நீதிமன்றங்களால் கூட, மேலெழுந்தவாரியாகத் தென்படும் சில குறைகளைமட்டும் தவிர்க்க முடிகிறதேயொழிய ஆழப்பதிந்துள்ள குறைகளை நிவர்த்திக்க முடிவதில்லை.

இந்தப் போக்கு இப்படியே செல்லும்படி விட்டுவைத்தால் என்ன ஆகும்? அதையும் நீதிபதி சுப்பராவ் அவர்கள் கூறுகிறார் :

"நாம் மிகவும் விழிப்புடன் இராவிட்டால், ஒரு காலத்தில் சர்வாதிகாரப் போக்குள்ள ஒரு பலவான் தோன்றி, ஜனநாயக முறையிலேயே அதிகாரத்துக்கு வந்து சட்டசபையைத் தனது விருப்பங்களுக்கிசைந்தபடி செய்து கொண்டு, நாட்டு மக்கள் எந்த

அடிமை வாழ்க்கையிலிருந்து விடுபட்டனரோ அதே போன்ற அடிமை நிலைமைக்கு அவர்களை மறுபடியும் ஆழ்த்திவிடக் கூடும். இது சாத்தியம்.''


இந்த நிலைமை இப்போதே தோன்றிவிட்டது என்று சிலர் எண்ணுகிறார்கள். இல்லாவிட்டாலும் அந்தப் பயங்கர நிலைமையை நோக்கியே நாடு போய்க் கொண்டிருக்கிறது என்பதைச் சிந்திக்கும் ஆற்றல் படைத்த எவரும் ஒப்புக் கொள்ளவே செய்வார்.

இதைத் தவிர்க்க விழிப்புடன் மட்டும் இருந்தால் போதாது. இந்த அபாயத்தை நாட்டு மக்களுக்கு விரிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். கல்வி அறிவில்லாத மக்களுக்கும், கிராமப்புற மக்களுக்கும் முக்கியமாக விளக்கி வைக்க வேண்டும். மக்களின் வோட்டுக்களை ஏமாற்றிப் பெறுவது இனிமேல் சுலபமல்ல என்ற நிலைமையை நாட்டில் உண்டாக்க வேண்டும். இதைச் செய்ய வேண்டிய பொறுப்பு படித்தவர்களைச் சேர்ந்தது. எனவே நீதிபதி சுப்பாராவ் பட்டதாரிகளுக்கு இவ்வறிவுரையை வழங்கியது மிகவும் பொருத்தமே.


காமன்வெல்த் மகாநாடு

வெளி நாட்டின் உதவியை அளவுக்கு மீறி எதிர்பார்த்துத் திட்டங்கள் போடுவதில் எவ்வளவு அபாயங்களும் கஷ்டங்களும் இருக்கின்றன என்பதற்கு இப்போது நடைபெற்று வரும் காமன்வெல்த் மகாநாடு ஓர் எடுத்துக்காட்டு. ஐரோப்பியப் பொதுச் சந்தை விவகாரம் இன்று நேற்று ஏற்பட்டதல்ல. பல ஆண்டுகளுக்கு முன்னாலிருந்தே இதற்கான கருத்துக்களும் திட்டங்களும் சிறுகச் சிறுக உருவாகிக் கொண்டு தான் வந்துள்ளன. இதை ஓர் இயக்கம் என்றுகூடச் சொல்லலாம். இந்த இயக்கம் இப்போது ஓர் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கிறது. இதன் விளைவுகளை உணர ஆரம்பித்திருக்கிறோம்.

நமது ஏற்றுமதி வர்த்தகம் பாதிக்கப்பட்டு அந்நியச் செலாவணி சம்பாத்தியம் குறைந்தால், நாம் அயல் நாட்டுக் கடனை எப்படி அடைப்பது, நமது தொழில் வளர்ச்சியை எப்படி போஷிப்பது என்ற பிரச்னைகள் இப்போதிருப்பதை விட மிகக் கடுமையாக நம்மைத் தாக்க ஆரம்பிக்கும்.



உட்கார இடம் இல்லாவிட்டாலும்
மகிழ்ச்சியுடன் இருக்கிறார் டி.டி.கே



காமன்வெல்த் நாடுகளில் எவ்வளவு கடுமையான எதிர்ப்பு இருந்தபோதிலும் இங்கிலாந்துக்குள்ளேயே இது பற்றி மாறுபட்ட அபிப்பிராயங்கள் இருந்த போதிலும், சோஷலிஸ்டுகளும் தீவிர கன்சர்வேடிவ் அங்கத்தினர்களும் இதை முற்றிலும் விரும்பாவிடினும், ஆங்கிலப் பிரதமர் மாக்மில்லன் அவர்கள் நிலைமையை ஒருவாறு தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள முயற்சி செய்திருக்கிறார். காமன்வெல்த் நாடுகளின் அங்கீகாரத்தையும் பெற்று விட்டால் மிக சிக்கலான ஒரு நெருக்கடியைச் சமாளித்து விடலாம் என்பது அவரது எண்ணம். ஐரோப்பியச் சந்தையில் சேர்ந்தால் பிரிட்டனுடைய பொருளாதார முன்னேற்றத்துடன் உலக அரசியல் விவகாரங்களிலும் மேன்மை காண முடியும் என்று அவர் உறுதியாக நம்புகிறார்.

ஆனால் காமன்வெல்த் பிரதமர்கள் தங்கள் உறவையும் பிணைப்புக்களையும் பொருளாதாரத் தொடர்புகளையும் பெரிதாக எண்ணுகின்றனர். கனடா பிரதமரின் எதிர்ப்பு மிகக் கடுமையாக இருந்தது. பிரதமர் நேருஜி இந்தியாவின் பொருளாதாரத்தையும் ஏற்றுமதி வர்த்தகத்தையும், ஐந்தாண்டுத் திட்டங்களின் முன்னேற்றத்தையும், அயல் நாடுகள் அளிக்கும் உதவியையும் முக்கியமாகக் கருத்தில் கொண்டு, பிரிட்டனின் போக்கைக் கண்டித்தார். மற்ற காமன்வெல்த் நாடுகளின் அபிப்பிராயங்களும் பிரிட்டனுடைய கொள்கைக்கு ஆதரவு அளிக்கவில்லை.

எனினும், காமன்வெல்த் பிரதமர்களின் அபிப்பிராயங்களும், பேச்சுக்களும், பிரிட்டனுடைய நடவடிக்

கையை எந்த அளவுக்கு நிர்ணயம் செய்யக்கூடும் என்பதை நிச்சயமாகச்சொல்ல முடியாது. பிரிட்டன் செய்யும் இறுதி முடிவு பிரிட்டனைப் பொறுத்துத்தான் இருக்கும். ஐரோப்பிய சமூகத்துடன் இணைந்து, அவர்களுடைய பொருளாதார வளர்ச்சியில் தானும் சேர்ந்து, தனது பலத்தையும், செல்வாக்கையும் அந்தஸ்தையும் பெருக்கிக் கொள்ளுவதன் மூலம், காமன்வெல்த் நாடுகளுக்குக் கூட நன்மையே ஏற்படும் என்று மாக்மில்லன் அவர்கள் எண்ணக் கூடும். பேச்சு வார்த்தைகள் நடத்தி, காமன்வெல்த் நாடுகளுக்கு ஐரோப்பிய பொது மார்க்கெட்டில் வர்த்தகச் சலுகைகள் கூடப் பெற்றுக் கொடுக்கத் தீவிர முயற்சிகள் ஏற்கனவே எடுக்கப்பட்டு வருகின்றன.

எப்படியும் எதிர்காலத்தில் காமன்வெல்த் நாடுகள் என்ற உறவு சிறிது கட்டுத் தளர்ந்து போகும் என்றே நினைக்க வேண்டியிருக்கிறது. பொருளாதாரத் துறையில் ஒவ்வொரு காமன்வெல்த் நாடும் அதற்கு உகந்த உடன்படிக்கை ஒப்பந்தங்களை மற்ற நாடுகளுடன் செய்து கொண்டு தனது அபிவிருத்திக்கு வகை வகுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். அந்த முறையில் இந்தியாவும் தனது வருங்காலப் பொருளாதாரத்தை உருவாக்கிக் கொள்ளுவது உசிதமாக இருக்கும். அரசியல் விவகாரங்களில், ஏதாவது ஒரு வல்லரசுடன் சார்பு கொண்டோ, அல்லது முடியுமானால் தனித்தோ நின்று செயல்பட வேண்டியிருக்கலாம்.

கொள்கைப் பித்து

போதிய அளவு மின்சக்தி கிடைக்காததால் தொழிற்சாலைகளில் அடிக்கடி உற்பத்தி தடைப்படுகிறது என்பதைக் கண்ட சில சென்னைத் தொழிலதிபர்கள் ஓர் ஆலோசனை சொன்னார்கள். தனியார்த் துறையில் ஒரு எரிமின் நிலையம் அமைக்கலாம் என்றும், அது கூட்டுறவு முறையில் லாப நோக்கில்லாமல் இயங்கக் கூடும் என்றும், அங்கே உற்பத்தி செய்யப்படும் மின் சக்தியை, அதை ஆரம்பித்து வைத்த தொழில் கூடங்களின் சொந்த உபயோகத்துக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும், உபரியாகக் கிடைக்கக்கூடிய மின்சக்தியைச் சென்னை மாநில மின்சார போர்டுக்கு அடக்க விலைக்குக் கொடுக்கலாம் என்றும் ஒரு திட்டம் வகுத்தார்கள். இதைத் தமிழக சர்க்காரும் ஆமோதித்து, அனுமதிக்கலாம் என்று மத்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்தது.

ஆனால் இதை மத்திய சர்க்கார் ஏற்றுக் கொள்ளவில்லை. தொழில் சம்பந்தமாகச் சர்க்கார் வகுத்துள்ள கொள்கைக்கு இப்படிச் செய்வது விரோதமாம். மின்சக்தி உற்பத்தி சர்க்கார்த் துறையில்தான் இருக்க வேண்டுமாம். ஆகவே தமிழக சர்க்கார் சிபாரிசு செய்துள்ள திட்டம் அவசியமானது என்றாலும், அனுமதிக்க முடியாது என்று மத்திய அரசாங்கம் நிராகரித்து விட்டது.

தங்களுக்கும் திருப்திகரமாக நிலைமையைச் சமாளிக்கத் திறமை இல்லை; மற்றவர்கள் உருப்படியாக யோசனை கூறிச் சமாளிக்க முன்வந்தாலும், அதை அனுமதிக்க முடியாது. இப்படி அனுசரணையில்லாது, முட்டுக்கட்டை போடும் மனப்பான்மையுடன் செயலாற்றுகிறது காங்கிரஸ் சர்க்கார். தொழில் வளர்ச்சிக்காகக் கொள்கை வகுக்க வேண்டுமே தவிர, முன் எப்போதோ வகுத்த கொள்கைக்காகத்

அட்டைப்படக் கவிதை

மன நெகிழ்ச்சி

மணிவண்ணன்

பொன்னே போலொளிர் நுண்ணிடை
பொலன்தொடி சுரிகுழல்

மின்னேர் வளைக்கரம் மிகுவிரல்
மான்விழி தேன்மொழி

மென்னகை நன்னயம் சொன்னலம்
இன்னவை நெகிழ்நெகிழக்


கன்னிகை கண்டது கண்டிருக்கக்
காளையும் சாய்ந்திருப்பான்.

சாயும் விழியிரண்டு மொழிபடைக்கச்
சரிந்த குழல் துவண்டு மணம்பரப்ப

மாயக் கனியிதழ் நகைசுரக்க
மனத்தில் நினைவுகள் நனிபிறக்க

வாயிற் சொற்கள் கண்பேசக்
கன்னின் மொழியை இதழ்சிரிக்க

நேயச் சூதுகள் நிகழ்வதனை
நெடுந்தோள் நம்பியும்
ஆய்ந்திருப்பான்.



பிரான்ஸ் புரட்சியின்போது பிரெஞ்சு ராணி பேசிய ரீதியில் பேசுகிறார் மத்திய சர்க்கார் உணவு மந்திரி ஸ்ரீ எஸ். கே. பட்டீல்.

தொழில் துறை இயங்க வேண்டுமென்பது நியாயமல்ல. சர்க்காரின் தொழிற் கொள்கை வகுக்கப்பட்ட போது சர்க்கார்த் துறைத் தொழில்கள் அதிகமாக விருத்தி யடையவில்லை. நாட்டிலும் தொழில் வளர்ச்சியின் வேகம் சூடு பிடிக்கவில்லை. இப்போது நிலைமை மாறி விட்டது. தற்போதுள்ள மாறுபட்ட சூழ்நிலைக்குத் தகுந்தமுறையில் தொழிற் கொள்கையையும் இளக்கிக் கொடுப்பதுதான் புத்திசாலித்தனமாகும்.

ரசாயன உர உற்பத்தி, மின்சார உற்பத்தியைப்போல சர்க்கார்த் துறைக்கு ஒதுக்கப்பட்ட இனம். ஆனால் பல்வேறு காரணங்களால், தனியார் ஸ்தாபனங்களும் ரசாயன உர உற்பத்தியை மேற்கொள்ள அனுமதிக்கப் பட்டு, சென்னை மாநிலத்திலேயே இரண்டு ஆலைகள் உருவாகிக் கொண்டு வருகின்றன. இதே முறையில், மின்சார உற்பத்தி இனத்திலும் கொள்கையை ஏன் தளர்த்திக் கொடுக்கக் கூடாது?

என்ன சேதி?

நேர்மைதானா?

ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் பாலிஸி தொகையை வசூல் செய்ய ஒரு பாலிஸிதாரருடைய வாரிசுகள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வேண்டிய நிலைமை சமீபத்தில் ஏற்பட்டது. சென்னை நீதிபதி திரு பி. எஸ். கைலாசத்தின் முன் இவ் வழக்கு விசாரணை செய்யப்பட்டது. சட்டப்படி வழக்கைத் தள்ளுபடி செய்தாலும், அவர் தமது தீர்ப்பில் எடுத்துக் காட்டிய விவரங்கள் பிரமிக்க வைக்கின்றன. பாலிஸிதாரர் மரணத்துக்குப் பின் மூன்று வருஷ காலம் அவர் வாரிசுகளுக்குச் சேர வேண்டிய தொகையைக் கொடுக்காமல் ஏதேதோ சால்ஜாப்புகள் சொல்லி ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன் காலங் கடத்தியிருக்கிறது. பாலிஸிதாரரின் வாரிசுகள், கார்ப்பரேஷனை நம்பி நடவடிக்கை எடுக்காமலிருந்து விட்டனர். மூன்று வருஷங்களுக்குப் பின் கோர்ட்டில் தாவா செய்யப்பட்டதால், தாவா தள்ளுபடி செய்யப்பட்டது. மூன்று வருஷங்களுக்குள் தாவா செய்யப்பட்டிருந்தால்,

பணம் கிடைத்திருக்குமாம். அப்படிச் செய்ய முடியாமல் போனதற்கு ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷ னின் நடவடிக்கைகளே காரணம். இதை நேர்மையான நடவடிக்கையெனக் கொள்ள முடியாது. மூன்று வருஷ காலம் 'ஒரு பாலிஸித் தொகை உரிய வர்களுக்குச் செலுத்தப்படவில்லை என்றால் அதைவிடக் கேவலம் என்ன இருக்க முடியும்? அரசாங்க ஸ்தாபனம் ஒன்று இவ்விதம் செய்கிறது என்றால் பொது மக்களுக்கு இந்த ஸ்தாபனத்தின் மீது நம்பிக்கை எப்படி வளரும்? லாபம் சம்பாதிக்கும் வியாபார கம்பெனிகள் இவ்விதம் செய்தால் வியப்பு இல்லை. ஆனால் இன்ஷுரன்ஸ் என்பதைச் சர்க் காரே எடுத்துக் கொண்டிருக்கும் போது இத்தகைய கால வரம்பு வாதங்கள் நீதி யாகாது.

நகரசபைத் தேர்தல்கள்

சென்னை நகர சபைத் தேர்தலில் தி.மு.க.வை முறியடிக்க, காங்கிரஸ் கட்சியார் கூட்டு முன்னணி அமைப்பது பற்றி யோசித்து வருகிறார்களாம்.

பதவியிலிருக்கும் கட்சியை முறி யடிக்க, எதிர்க்கட்சிகள் சேர்ந்து முன் னணி அமைப்பதைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறோம். ஆனால் நாட்டில் எதிர்க்கட்சியாக இருக்கும் ஒரு கட்சி யைத் தொலைக்கப் பதவியிலிருக்கும் சர்க்கார் கட்சி முன்னணி அமைக்கப் போவதைப் பற்றிப் பேசுவது விந்தை யாக இருக்கிறதல்லவா? 'நகரசபையில் தி. மு. க.தானே மெஜாரிட்டி கட்சி யாக இருக்கிறது' என்று கேட்கலாம்! அரசாங்கத்தையே கைப்பற்றியுள்ள காங்கிரஸுடன் ஒப்பிடும்போது தி.மு. க.வின் பலம் மிகச் சொற்பம்தான்!

தி.மு.க. — திராவிட நாடு பிரிவினை கோருகிறது என்று அதனை வாய் ஓயாது தூஷிக்கும் ஐக்கிய இந்திய பக்தர்க ளான காங்கிரஸார் யாருடன் கூட்டுச் சேரப் போகிறார்கள்? சீனாவுக்கு நண்பர்க ளாக இருக்கும் கம்யூனிஸ்டுகளுடனும் தமிழ்நாட்டுப் பிரிவினை கோரும் தமிழ் தேசியக் கட்சியுடனும்தான்! இதிலுள்ள (அ)நீதியை விளக்கவும் வேண்டுமா?

இணைப்பு மந்திரி டி. டி. கே.

சென்ற வாரம் சென்னைக்கு வந்த இரண்டு மத்திய சர்க்கார் மந்திரிகளான ஸ்ரீ டி. டி. கே. யும், ஸ்ரீ எஸ். கே. பாட்டீலும் ஒருவருக்கொருவர் முற்றும் முரண்பட்ட கருத்துக்களை வெளியிட்ட னர்! இன்றுள்ள விலைவாசி ஏற்றம் முதலிய சகல நோய்களுக்கும் கண்ட் ரோல்தான் சஞ்சீவி மருந்து என்றார் ஸ்ரீ டி. டி. கே. ஆனால் ஸ்ரீ எஸ். கே. பாட்டீலோ, "கண்ட்ரோல் என்ற பேச்சையே எடுக்காதீர்கள்" என்றார்! மந்திரி சபை இலாக்காக்களிடையே ஒற் றுமையையும் இணைப்பையும் ஏற்படுத் தும் பொறுப்பு ஏற்றுக் கொண்டுள்ளவர் ஸ்ரீ டி. டி. கே. என்பதை எண்ணினால் தான் நகைப்புக்கிடமாக இருக்கிறது.

பல வேலைகளை ஏற்பதால் ஒரு வேலை யையும் சரிவரச் செய்யாதிருக்க இடம் உண்டு. இதை மனத்தில் எண்ணித் தானோ என்னவோ தாம் வேலை செய்தே சம்பாதிப்பதாகவும், தண்டச் சம்பளம் பெறவில்லை என்றும் கூறிக் கொண் டிருக்கிறார் ஸ்ரீ டி. டி. கே.

டி.டி.கே.யை நினைத்தாலே சிம்ம சொப்பனமாக இருக்கிறது என்று ஸ்ரீ லால் பகதூர் சொல்வதைப் பார்த் தால் ஏதோ வேலை செய்து கொண் டிருப்பதாகத்தான் தெரிகிறது!

பிடிக்காத சிபாரிசு

உருக்குப் பொருள்களின் 'கண்ட் ரோல்' விலை லாபகரமாக இல்லை என்றும் அடக்க விலை உயர்ந்து விட்ட தால், கண்ட்ரோல் விலையை உயர்த்த வேண்டும் என்றும் தனியார் துறை ஆலைகள் கேட்டுக் கொண்டன. அதன் பேரில், நிலைமையை ஆராய்ந்து சிபா ரிசு செய்ய மத்திய அரசாங்கம், 'டாரிப் கமிஷனு'க்குக் கட்டளையிட்டது. இந்த வேலையைச் செய்து வரும் கமிஷன், ஒரு டன்னுக்கு 38 ரூபாய் வீதம்அடக்க விலையை உயர்த்திக் கணக்கிடலாம் என்று சிபாரிசு செய்துள்ளது. கமிஷனின் சிபாரிசுகளை எதிர்பார்த்துச் சம்பந்தப் பட்ட தொழில்கள் மாதக் கணக்கில் காத்துக் கிடந்தன.

ஆனால் இந்தச் சிபாரிசுகளை அரசாங் கம் ஏற்றுக் கொள்ளவில்லை. டன்னுக்குப் பத்தரை ரூபாய் மட்டுமே உயர்த்திக் கொடுத்தால் போதும் என்று அது உத் தரவிட்டிருக்கிறது. இவ்வாறு குறைத் ததற்குச் சில சாக்குகளும் கூறுகிறது. நிபுணர்கள் உண்மை நிலைமையைப் பரிசோதித்துக் கூறிய ஒரு முடிவைப் புறக்கணிப்பது வியப்புக்குக் காரண மாகிறது. இரண்டு உருக்குக் கம் பெனிகள் சுதந்திரக் கட்சிக்குப் பண உதவி செய்ததும் காங்கிரஸ் சர்க்கா ருக்குக் கோபம் உண்டானதும் உலக மறிந்த விஷயங்கள்.


இன்று
உங்கள் ஊருக்கே
வருகிறது ஹகோபா
கண்டவுடனேயே உங்கள்
நெஞ்சம் கவருவது
ஹகோபா
எல்லா பிரபல ஸ்டோர்களிலும் கிடைக்கும்
பூரண விற்பனை உரிமைகளுக்கு விசாரிக்கவும்
எம்பிராய்டரி மார்ட். M. J. மார்க்கெட், பம்பாய் - 2

ரூ.5,395 பரிசுகளாக வெற்றி பெறுங்கள் 'ஆஸ்ப்ரோ' திறமைப் போட்டி

முதற்பரிசு:




12 வருட தேசிய திட்ட சேமிப்பு பத்திரம்: தற்போதைய மதிப்பு ரூ.2,000: 12 வருடங்களுக்குப் பின் ரூ.3,300.

இரண்டாவதுபரிசு:



மர்பி ரேடியோ மதிப்பு ரூ.865.00.

மூன்றாவதுபரிசு:



உஷா தையல மிஷின் மதிப்பு ரூ.330.00.

தகுதிப்பரிசு:



50 பார்க்கர் பாலபாயிண்ட பேனாக்கள், மதிப்பு ஒவ்வொன்றும் ரூ.14.00

இந்த கண்ணாடி ஜாடியில் எவ்வளவு 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் அடங்கும் என்பதைக் கணக்கிடுங்கள்!

ஜாடியின் பரிமாணங்கள்:–
26 செ. மீ. x 52 செ. மீ.
நான்கு 'ஆஸ்ப்ரோ' வில்லைகள் கொண்ட ஒவ்வொரு பட்டையின் பரிமாணங்கள்:
13 செ. மீ. x 3·9 செ.மீ.



அருகாமையிலிருக்கும் உங்கள் ஆஸ்ப்ரோ வியாபாரியிடம் எல்லா விபரங்களும், பிரவேசக் கூபன்களையும் பெற்றுக்கொள்ளவும்.

தலைவலி, ஜுரம், ஜலதோஷம் மற்றும் ப்ளூவிற்கு 'ஆஸ்ப்ரோ' சாப்பிடுங்கள் - மீண்டும் நிச்சயமாக சுகம் பெறுங்கள்




ஒரு நிக்கொலஸ் தயாரிப்பு

தரத்திற்கும் தூய்மைக்கும் நிக்கலஸ் பெறும் உத்தரவாதம்.

A.G.150 TML

நந்தவனம்

சோமு



38. சக்கரம் சுழன்றது

இயற்கையின் அழகுக் காட்சிகளும், அமைதியும் வனப்பும் நிரம்பிய அந்த வட்டப்பாறையின் சூழல் ஓவியன் ஒருவனுடைய இதயத்திலே எத்தனை எத்தனை கற்பனைகளை எழுப்ப வேண்டும்! மடல் மடலாக வண்ண வண்ணச் சித்திரங்களை எழுதி முடிக்க வேண்டிய வில்வநாதன் அத்தகைய ஒரு மன எழுச்சிக்காகப் போராடினான். இறகும் கையுமாகப் போராடினான்! அவனுக்கு எதிரே இருந்த ஓவிய மடலில் மீண்டும் மீண்டும் அதே முகம், அதே கண்கள் எழுந்து நின்று, அவனுடைய வாழ்வின் சோகத்தை வர்ணங்களிலே படம் பிடித்துக் காட்டிக் கொண்டிருந்தன! செண்பக சுந்தரியைச் சுற்றிச் சுற்றியே இவ்வாறு வட்டம் சுழன்று கொண்டிருந்த அவனுடைய மனக் காற்றாடியைச் 'சட்'டென்று நிறுத்தியது வேணுலிங்கத்தின் அறிவிப்பு!

''தம்பிக்கு ஒரு முக்கியமான அதிசயச் செய்தி!'' என்று வேணுலிங்கம் சொல்லி நிறுத்தினானோ இல்லையோ, அப்படியே கையிலிருந்த இறகைக் கீழே போட்டு விட்டு, வேணுவை அண்ணாந்து பார்த்தான் வில்வநாதன்.

''அதிசயச் செய்தியா! மகிழ்ச்சியான செய்தி தானே?'' என்று ஆவலும் பதற்றமுமாகக் கேட்டான் வில்வநாதன்.

''தம்பிக்கு நான் என்ன செய்தியைக் கொண்டு வந்தாலும், அது எப்போதும் மகிழ்ச்சியான செய்தியாகத்தான் இருக்கும்! அதிலென்ன சந்தேகம்!'' என்றான் வேணு. இப்படிச் சொல்லிவிட்டு வில்வநாதனின் அருகிலே வந்து உட்கார்ந்து கொண்டான் வேணுலிங்கம்!

''மகிழ்ச்சியான செய்தியைக் கொண்டு வர மாட்டீர்களா என்று தான் இதுவரையில் காத்துக்கொண்டிருக்கிறேன்!'' என்று சொல்லி வேணுவையே கூர்ந்து பார்த்தான் வில்வநாதன்.

''கடலையாண்டி சொன்னது தம்பிக்கு ஞாபகம் இருக்கிறதல்லவா? அது அது அந்த அந்த இடத்திலே இருக்கிறது என்று சொன்னது அப்படியே நூற்றுக்கு நூறு உண்மை. ஆகையினால், தம்பி இனிமேல் துரித காலத்திலே வேலைகளைக் கவனிக்க வேண்டும்!''

''அப்படியென்றால்?''

''செண்பக சுந்தரி எங்கே இருக்கிறாளோ என்ற கவலை தம்பிக்கு இனிமேல் கடுகளவும் வேண்டாம். சுந்தரி இதுவரை எங்கே இருந்தாளோ அங்கே தான் இப்போது இருக்கிறாள். எங்கே இருக்க வேண்டுமோ அல்லது எங்கே இருக்கப் போகிறாளோ அங்கே இல்லை! இதுவரை எங்கே இருந்து வந்தாளோ அங்கே என்று அர்த்தம்!''

''அப்படியா?'' என்று மகிழ்ச்சியும் வியப்பும் பொங்குகிற குரலில் கேட்டான் வில்வநாதன்.

''ஆமாம். காணாமற்போன சுந்தரி மீண்டும் வீட்டுக்கு வந்து விட்டாள். எந்த விதமான இடையூறும் இல்லாத நிலையில் பூரண நலத்தோடு வீடு திரும்பி விட்டாள். அந்தக் கதையெல்லாம் பிறகு சொல்லுகிறேன். இப்போது தம்பி இதுவரை என்ன வேலை செய்திருக்கிறீர்கள் இந்தக் காகிதத்திலே என்று பார்ப்போம்!''

இவ்வாறு சொல்லிச் சித்திரமடலைவாங்கிப் புரட்டிப் பார்த்தான் வேணுலிங்கம். புன்முறுவல் செய்தவாறே சொன்னான் :

''ஒன்றாக இருக்க வேண்டிய இரண்டு இதயங்கள் பிரிந்துவிட்டால் என்ன என்ன துன்பம் எல்லாம் உண்டாய் விடுகிறது! பாவம்! இந்தச் சித்திர மடலில் நீங்களும் எவ்வளவோ முயன்று ஏதேதோ புது மாதிரி வரையப் பார்த்திருக்கிறீர்கள். என்றாலும் அந்த முகம் உங்கள் கண்களையும் இறகையும் விட்டு அப்படி இப்படி நகரவில்லையே! மானும் மயிலும் வரையும் போது கூட அந்தப் பெண்ணின் சாயல் அல்லவா இறகிலே வந்து தவழ்ந்திருக்கிறது! சரி; இந்த மடல் மிகவும் பத்திரமாக இருக்கவேண்டும். ஆகையால் — ''

''இந்த மடலா! இதுவா பத்திரமாக இருக்க வேண்டும்! ஒரே கிறுக்கலாக இருக்கிறதே!''

''இருக்கட்டும்; கிறுக்கலாக இருப்பதால்தான் இது மிகவும் பத்திரமாக இருக்க வேண்டும் என்று சொல்லுகிறேன். இது ஒரு மனித இதயத்தின் சித்திரம். இல்லை, இல்லை. இது இரண்டு

திருத்தம்

இம்மாதம் 9-ந் தேதி 'கல்கி' இதழில் வெளியான 'தலைநகரில் கலை விழா' என்ற குறிப்பில், ஸ்ரீ அண்ணாசாமி பாகவதர் அவர்களின் உபந்நியாசங்கள் டில்லி ஃபைன் ஆர்ட்ஸ் கிளப்பில் நடைபெற்றதாகவும், கலைஞர்களுக்குத் தட்சிண பாரத சமாஜத்தினர் வரவேற்பு அளித்து ஸ்ரீ பாபநாசம் சிவனுக்கு நிதி வழங்கியதாகவும் கண்டிருப்பது தவறாகும். உபந்நியாசங்களும், வரவேற்பும், நிதி அளிப்பும் நடைபெற்றது புது டில்லியிலுள்ள **சவுத் இந்தியன் சமாஜத்தின்** ஆதரவில் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். தவறு நேர்ந்ததற்கு வருந்துகிறோம்.

மனித இதயங்கள் எப்படி ஒரே இதயமாக இணைந்து போய் இருக்கின்றன என்பதைக் காட்டுகிற சித்திரம். அது மட்டுமில்லை. சுந்தரியின் பிரிவினால் உங்கள் உள்ளம் கிறுக்காகி, அந்தக் கிறுக்கல் எல்லாம் சித்திரத்தில் எப்படி வெளியாகியிருக்கிறது என்பதற்கு இந்த மடல் ஒரு வர்ணச் சான்று! எங்களுக்கெல்லாம் கிறுக்கல் வந்தது என்றால், இத்தனை அழகான கிறுக்கலாக வர்ணங்களிலே வரைய முடியுமா! ஒரு கலைஞனுடைய உள்ளத்தில் குழப்பம் ஏற்பட்டால், அந்தக் குழப்பமும்கூடக் கலையின் வடிவிலேதான் வெளிப்படுகிறது! என்னிடம் கொடுத்து விடுங்கள் அந்த மடலை. நான் பத்திரமாக எடுத்து வைத்துப் பாதுகாக்கிறேன்!''

இப்படிச் சொல்லி அந்தக் காகித மடலை வாங்கிக் கொண்டான் வேணுலிங்கம். பிறகு மெதுவான குரலில் பாட ஆரம்பித்தான்.

மாலைவடி வேலவர்க்கு
வரிசையாய் நானெழுதும்
ஓலை கிறுக்காச்சுதே—கிளியே
உள்ளமும் கிறுக்காச்சுதே!

வேணுலிங்கத்தின் குரலிலிருந்து இந்த இசைப் பாடலைக் கேட்டதும் வில்வநாதனுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

''ஆகா! என்ன குரல்! என்ன குரல்! ஸ்வர சுத்தமாக எவ்வளவு இனிமையாகப் பாடுகிறீர்கள்! ஆகா! உங்களுக்குள்ளே இத்தனை பெரிய சங்கீத ஞானத்தையும் ஒளித்து வைத்துக் கொண்டிருக்கிறீர்களா?''

''கட் கட் கட்!'' என்றான் வேணு.

''அப்படியென்றால்?''

''தம்பி, தமிழில் இப்போதுதான் சினிமாப் படம் எடுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். ஒரு சமயம் பம்பாயில் ஒரு படப் பிடிப்பின் போது நானும் கூட இருந்தேன். யாராவது நடிகர்கள் தப்பாகப் பேசினால் உடனே அந்த ஆங்கில டைரக்டர் 'கட் கட்' என்பார்! அந்த ஞாபகத்தில் இப்போது சொன்னேன்!''

''நான் என்ன பேசினேன் அப்படி?''

''என்னைப் பற்றிப் பேச ஆரம்பித்து விட்டீர்களே இப்போது! அடுத்தாற்போல் நான் யார் என்று மென்னியைப் பிடிப்பீர்களே! அதெல்லாம் தான் வேண்டாம் என்றேன் தம்பி! கட், கட், கட்!''

வில்வநாதன் சிரித்தான். சிரித்துக் கொண்டே கேட்டான்:

''சரி. இனிமேல் என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்கள்?''

''எழுந்திருங்கள். தனியாகப் போய் உட்கார்ந்து கொஞ்சம் எழுதுங்கள்! சித்திரம் இல்லை. கடிதம்!''

வில்வநாதன் எழுந்தான். வேணுலிங்கம் அவனிடம் கடிதத்தின் பொருள் என்ன என்பதை விளக்கம் செய்ய ஆரம்பித்தான்!

இப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததன் விளைவாகத்தான், தனது வீட்டின் கூரையிலே ஓடு திறந்து மூடியது என்பது சுந்தரிக்குத் தெரியுமா? ஆச்சரியத்தின் மேல் ஆச்சரியமாக இனி நடக்கப் போகும் நிகழ்ச்சிகளைத்தான் அவள் அறிவாளா?

கூழாங்கல்லின்மீது சுற்றி மடிக்கப்பட்டிருந்த அந்தக் காகிதத்தைப் பிரித்துப் படித்துப் பார்க்கலாம் என்றால், அதற்கு வேண்டிய வெளிச்சம் அங்கே இல்லை. கட்டிலுக்கு வந்தவள் மறுபடியும் வேலைக்காரி படுத்திருந்த பக்கமாகத் திரும்பினாள். சொல்லி வைத்தாற்போல் குறட்டை போட ஆரம்பித்தாள் அந்த வேலைக்காரி அந்த விநாடியிலிருந்து!

சுந்தரி மெதுவாக எழுந்து கை விளக்கை ஏற்றினாள். வேலைக்காரி குப்பம்மையின் குறட்டை இன்னும் பலமாகக் கேட்டது. குறட்டை போட்டுக் கொண்டே அவள் மறுபக்கமாகப் புரண்டு படுத்தாள்.

சுந்தரிக்கு ஆச்சரியமாக இருந்தது. அடுத்த விநாடி குப்பம்மை போர்வையை இழுத்துத் தலை வரை மூடிக் கொண்டு விட்டாள்! இந்தப் பக்கமே திரும்பவில்லை அவள்! குறட்டை தொடர்ந்தது!

சுந்தரி கடிதத்தைப் பிரித்துப் படிக்க ஆரம்பித்தாள்!

''உன்னை எப்படி அழைப்பது?
'அன்பே' என்று தொடங்குவதா!


அல்லது 'ஆருயிரே' என்பதா? அல்லது 'என் அருமைச் சுந்தரி' என்று கூப்பிடுவதா? இதயமும் இதயமும் ஒன்ருகிவிட்ட பிறகு எப்படிக் கூப்பிடுவது? எப்படி அழைப்பது என்றே தெரியவில்லை.

உனக்கு இப்படி ஒரு கடிதம் எழுத வேண்டிய அவசியம் ஏற்படும்படி நாம் இருவரும் பிரிந்திருப்போம் என்று எதிர்பார்த்தோமா? இல்லை. நீ எதிரே இருந்தால்தான் உன்னைப் பல நிலைகளிலே சித்திரமாக வரைய முடியும் என்று நினைத்தேன். அதுவும் தவறு. இப்பொழுது என்ன வரைந்தாலும் அது நீயாகவே இருக்கக் காண்கிறேன்!

இங்கே எனக்கும் உனக்கும் உற்ற துணையாக இருக்கிற வேணுலிங்கம் அவர்களை ஒரு கொள்ளைக்காரர் என்று நினைக்காதே. அவர் ஒரு பெரிய கலைஞர். ஒரு பெரிய பண்டிதர். என் மன நிலையைப் புரிந்துகொண்டு அவர் ஏதேதோ பாடல்கள் சொல்லுகிருர்.

"கோடும் குளமும் குளத்தருகே
நீந்தும் குன்றுகளும்
காடும் செடியும் அவளாகத்
தோன்றும்என் கண்களுக்கே!"

என்று ஒரு பாட்டு எழுதி என்னுடைய சித்திர மடலிலே செருகி வைத்திருக்கிருர். இவர் யார்? கேட்டால் சொல்லாமல் மழுப்புகிருர். ஆனல் ஒன்று நிச்சயம். தம்முடைய திட்டங்களை யெல்லாம் வெளியே சொல்லா விட்டாலும், உன்னையும் என்னையும் ஆட்கொள்ளத் தோன்றிய தந்தை அவர் என்பதில் எள்ளத்தனையும் சந்தேகம் இல்லை. அவர் ஏதேதோ இரகசிய ஏற்பாடுகள் செய்து வருகிருர். அதனல் நாம் இருவரும் மிக விரைவில் சந்திக்கப் போகிறேம். யாருக்கும் தெரியாமல் நம்முடைய திருமணமும் நடக்கப் போகிறது. குறித்த ஓர் இரவில் குறித்த ஒரு நேரத்தில் நீ அந்தச் சிறைச்சாலையிலிருந்து தப்பி வருவதற்குத் தயாராக இருக்க வேண்டும். மனசைத் திடமாக



வைத்துக்கொள். உடம்பை அலட்சியம் செய்து ஆரோக்கியத்தைக் கெடுத்துக் கொள்ளாதே. எந்தச் செண்பகநாயகி கோயிலின் நந்தவனத்திலே நாம் முதன் முதல் சந்தித்தோமோ, அதே நந்தவனத்தில் மீண்டும் சந்திக்கப் போகிறோம். தைரியமாக இருக்கவும்.

அடுத்த செய்தி என்னிடமிருந்து எப்படி உனக்கு வந்து சேரும் என்று மலைக்காதே. நீ இருக்கும் இடத்திலேயே வேணுலிங்கமும் இருப்பதாக எண்ணி ஊக்கமாக இருக்கவும்.

–வில்வநாதன்''

இந்தக் கடிதத்தைப் படித்து முடித்ததும் குப்பம்மை படுத்திருந்த திசையைப் பார்த்தாள் சுந்தரி. போர்வைக்குள்ளே பொதியப் பட்டிருந்த அந்த மனித உடல், உயிர்ப்பின் அடையாளமாகக் குறட்டை கொடுத்ததே தவிர, மற்றப்படி மரக்கட்டையாகவே கிடந்தது அது!

சுந்தரி மீண்டும் மீண்டும் அந்தக் கடிதத்தைப் படித்தாள்.

இங்கே மலையடிவாரத்தின் நிலவரம் இப்படியிருக்கும் போது, முருகபாண்டிபுரத்திலே வல்லாளவேலர் என்ன ஆனார்?

திவான்பகதூரின் காரிலேயே வீட்டுக்கு வந்து சேர்ந்த வல்லாளவேலருக்கு, ஒரு பெரிய ஆச்சரியம் காத்திருந்தது. மனைவியை வீட்டிலே காணோம்! பதறியடித்துக் கொண்டே உள்ளே நுழைந்த போது மறுபடியும் திகைப்பு அடைந்தார் வல்லாளர். கதவு பூட்டியிருந்தது.

''ஏலே!'' என்று வேலைக்காரனைக் குரல் கொடுப்பதற்குள், கைகட்டி வாய் புதைத்து வந்து நின்றான் அவருடைய மெய்காப்பாளன்!

''எசமான்! அம்மா அவசரமா சிங்கம்புத்தூர் போயிட்டாக! எசமானை உடனே அங்கு வரும்படியா....''

''என்னலே, வார்த்தையை இழுக்கிறே? வரும்படியா உத்தரவுன்னு சொல்லுறியா?''

இப்படிக் கேட்டுக் கொண்டே வெளியே வந்தார் வல்லாளவேலர்; சித்தம் குழம்பியது. 'மனைவிக்கு எல்லா நடப்புக்களும் தெரிந்து போய் விட்டிருக்குமோ? திவான்பகதூர் இங்கே வந்து எல்லா இரகசியங்களையும் அம்பலப்படுத்தி விட்டாரோ?'

இப்படி நினைத்ததும் வல்லாளவேலருக்கு மின்சார அதிர்ச்சி ஏற்பட்டது.

''ஏலே, வக்கீலையா இன்னைக்கி இங்கே வந்தாகளாலே? திருட்டுப் பயலே? சொல்லுலே!'' என்று வேலைக்காரனை அதட்டினார் வல்லாளர்.

''யாரும் வரலையே எசமான்!'' என்று சொல்லியவாறு உடல் பதறினான் வேலைக்காரன்.

''யாரும் வரலையா? அப்பன்னா, அம்மா எப்படிலே போனாக?''

''சிங்கம்புத்தூரிலேருந்து எசமானையும் அம்மாளையும் கூட்டிக்கிட்டு வரும்படி வண்டி வந்துது. எசமான் இல்லேன்னு அம்மா மட்டும் வண்டிலே போயிருக்காங்க!''

வல்லாளவேலருக்கு மூச்சு கொஞ்சம் நிதானம் அடைந்தது.

''அதை அப்பமே சொல்லித் தொலைச்சா என்னலே?'' என்று சீறினார் வல்லாளர்.

''எதை எசமான்?'' என்று பணிவோடு கேட்டான் வேலைக்காரன்.

''உன்னோட தலையை!'' என்று வார்த்தைகளை வீசிவிட்டுத் திண்ணையிலே வந்து உட்கார்ந்தார் வல்லாளவேலர்.

''எசமான், நீங்க இங்கே இல்லேன்னா நிச்சயமாக் கல்லு வீட்டிலே இருப்பீகன்னு—''

''ஏலே என்ன சொன்னே? கல்லு வீட்டிலே இருப்பேன்னு நீ சொன்னியாலே?''

"இல்லை எசமான். அம்மா சொன்னுக. எனக்கு எப்படித் தெரியும் எசமான் கல்லு வீட்டிலே இருக்கீகன்னு !"

"அம்மாவுக்கு மட்டும் எப்படிலே தெரியும் முட்டாப் பயலே!"

திண்ணையில் உட்கார்ந்தவர் மறுபடியும் எழுந்து விட்டார்! உடம்பெல்லாம் படபடத்தது.

"என்னலே சொன்னுக அம்மா ! சரியாச் சொல்லுலே. அப்படியே ஒவ்வொரு வார்த்தையாச் சொல்லணும், ஒண்ணு விடாமே !"

"இங்கே இல்லைன்னு எசமான் கல்லு வீட்டிலேதான் இருப்பாக. என்னைச் சிங்கம்புத்தூரிலே கொண்டு போயி விட்டுப்புட்டு, நீ கல்லு வீட்டுக்குப் போ, நான் இப்பம் கல்லு வீட்டுக்கு வந்து அந்தக் கண்ணராவியை யெல்லாம் பாக்க வேண்டாம். அப்படீன்னு அம்மா சொன்னுக சுப்பையா கிட்டே !"

"சுப்பையாகிட்டேயா?"

"ஆமா. சுப்பையாதான் சிங்கம் புத்தூரிலேருந்து கூப்பிட்டு வந்தான்!"

"கண்ராவின்னு சொன்னுகளா, அம்மா! அப்படீன்னு என்னலே அருத்தம்....?"

இப்படிக் கேட்கும் போதே வல்லாளவேலருக்கு மீசை படபடத்தது. அச்சத்தினலா அல்லது கோபத்தினலா என்று புரியாமல் வேலைக்காரன் குழம்பினன். பதில் பேசவில்லை.

"கண்ராவின்னு என்னலே அது ? கல்லு வீட்டிலே என்ன கண்ணராவியைக் கண்டாகளாம் உங்க அம்மா ! சொல்லுலே திருட்டுப் பயலே!" என்று பாய்ந்தார் வல்லாளவேலர்.

"எனக்குத் தெரியாது எசமான் அது ! அம்மா சொன்னதை ஒவ்வொரு வார்த்தையாச் சொன்னேன் எசமான். தப்பு இருந்தா புத்தி புத்தி !" என்று சொல்லித் தரையிலே விழுந்து வணங்கினன் வேலைக்காரன்.

அப்போது தெருவிலே கோச் வண்டியின் மணியோசை கேட்டது. 'கண் கண்' என்று சிங்கம்புத்தூர் வண்டி வந்து வாசலிலே நின்றது.

"எசமான்! சேவிக்கேன்!" என்று தலைக்கு மேல் கும்பிடு போட்டுக் கொண்டே மேல் துண்டை இடுப்பில் இறக்கியவாறு உள்ளே நுழைந்தான் சுப்பையா !

"என்ன சுப்பையா!" என்று கேட்கும்போதே, குரலிலும் முகத்திலும் ஒரு வகையான உல்லாசத்தை வரவழைக்க முயன்றார் வல்லாளவேலர் !

"என்ன சேதி சுப்பையா?" என்று மறுபடியும் செயற்கை உற்சாகத்தோடு கேட்டார் வல்லாளவேலர்.

"எல்லாம் நல்ல சேதிதான் எசமான். கலியாணச் சேதிதான்!" என்றான் சுப்பையா.

"அம்மாளை அழைச்சிக்கிட்டுப் போயிட்டே ! இதோ நானும் புறப்பட்டாச்சு!" என்றார் வல்லாளவேலர் குதியும் நடையுமாக!

"எசமானைத் தேடிக் கல்லு வீட்டுக்குப் போனேன்!" என்றான் சுப்பையா.

"கல்லு வீட்டுக்கா? அட பாவமே, அது பூட்டியில்லா கிடக்குது வருசக் கணக்கா!" என்று ஒரு விநோதச் சிரிப்போடு வார்த்தைகளை மென்றார் வல்லாளவேலர்.

"ஆமா எசமான்! நான் அப்படித் தான் நினைச்சேன். ஆனல் அம்மா தான் சொன்னுக. பூட்டியிருந்தாலும் நீங்க உள்ளே இருப்பீக அப்படீன்னு அம்மாதான் சொன்னுக!" என்றான் சுப்பையா.

"எப்படி? பலே! அம்மா சொன்னுகளா ? அட அசடு! அந்த அசடு

என்ன சொல்லிச்சு கப்பையா?'' என்று மூக்கினால் போலிப் பரிவோடு வார்த்தைகளை ஹூங்காரம் கொடுத்தார் வல்லாளர்!

''கதவு பூட்டியிருந்தாலும் உள்ளே ஆட்கள் இல்லேன்னு திரும்பிராதே. கதவைத் தட்டு, அப்பாடான்னு, அம்மா சொன்னாக!'' என்று அழுத்தந்திருத்தமாகக் கூறினான் கப்பையா!

வல்லாளவேலர் பலமாகச் சிரித்தார். முகத்திலே ஏற்பட்ட கலவரத்தை அந்தச் சிரிப்பினால் மூடிக்கொண்டே சொன்னார்:

''கதவைத் தட்டச் சொன்னாங்களா அம்மா!! வயசு ஆக ஆக மூளையே கோளாறுப் போயிடும் போலிருக்கு! என்ன கப்பையா?''

''ஆமா. எசமான்!'' என்று சொல்லிச் கப்பையாவும் பணிவு கலந்த ஒரு புன்னகை செய்தான்!

''என்ன அப்படிச் சொன்னே? என்னது ஆமான்னே?'' என்று கேள்வியை மடக்கினார் வல்லாளர்.

''வயசுக் கோளாறுதான் எசமான்! ஆனாலும் என்ன செய்யச் சொல்லுறீக! கல்லு வீட்டிலே போயிக் கதவைத்தட்டினேன்!'' என்றான் கப்பையா.

''கதவைத் தட்டுனியா?''

''ஆமா, எசமான்! வைத்தியரய்யா வெளியே வந்தாக. வந்து வக்கீலய்யாவோட நீங்களும்—'' என்று நிறுத்தினான் கப்பையா ஒரு வினாடி!

''நானும், நானும், நானும், வேறே யாருமாம்?'' என்று குறுக்கே பாய்ந்தார் வேலர்.

''அதைச் சொல்லலே வைத்தியரு! வக்கீலய்யாவோட நீங்களும் போயிட்டீக அப்படின்னு வைத்தியரய்யா சொன்னாக. அந்தாக்கிலே நான் இங்க வந்துட்டேன்!''


''நல்ல வேலே பண்ணினே நீயி! என்னைத் தேடிக்கிட்டு ஊரெல்லாம் சுத்தாமே, நேரே இங்கே வந்தியே! கெட்டிக்காரப் பயதான் நீயி!''

''எல்லாம் எசமான் ஆசீர்வாதம்!'' என்று சொல்லி வாய் பொத்தினான் கப்பையா!

என்ன நடந்திருக்கிறது. மனைவிக்கு இந்தச் செய்தியெல்லாம் எப்படித் தெரிந்தது. இந்நேரம் சிங்கம்புத்தூரில் என்னென்ன அமளிகள் நடந்திருக்கும், என்றெல்லாம் மனத்துக்குள் நெருப்பு எரிந்தவண்ணம் கூடத்திலிருந்து வெளியிலே வந்தார் வல்லாளர்.

''சரி, கப்பையா! நாம்ப புறப்படுவோம்!'' என்றார். குதிரை வண்டி புறப்பட்டது.

•(தொடரும்)



முகமூடி



பூஷ்மன்

வெய்யில் கொளுத்திக் கொண்டிருக்கும் வேளையில் சோமநாதய்யர் அந்தத் தெருவில் நுழைந்தார். வழுக்கைத் தலையில் வெய்யில் சுரீரென்று அடித்தது. தெருவில் ஜன நடமாட்டத்தையே காணோம். சற்றுத் தள்ளி இரண்டு மூன்று சிறுவர்கள் கோலியாடிக் கொண்டிருந்தார்கள்.

பஸ்ஸை விட்டு இறங்கியதிலிருந்து அங்கங்கே விசாரித்துக் கொண்டுதான் வந்தார் அவர். இருந்தாலும், அவர் சந்தேகம், சரியான இடத்துக்குத்தான் வந்திருக்கிறோமா, அல்லது....?



"தாசில்தார் வீடு இந்தத் தெருவில்தானே அப்பா இருக்கு?" என்று ஒரு பையனைக் கூப்பிட்டுக் கேட்டார்.

"அதோ ஒரு 'கேட் போட்டு' இருக்கு பாருங்கோ! அந்த வீடுதான்!" — அவரைத் திரும்பிப் பாராமலே பதில் மட்டும் கூறிவிட்டு விளையாடிக் கொண்டிருந்தான் பையன்.

தெரு நீண்ட தெருதான். 'நல்ல வேளை. தேடி வந்த வீடு இவ்வளவு அருகிலேயே இருக்கிறதே!' என்று அவர் திருப்திப் பட்டுக் கொண்டார்.

தாசில்தார் சுப்பிரமணிய அய்யரின் பக்தியைப் பற்றியும் அவர் நிறையக் கேள்விப்பட்டிருந்தார். இரண்டு நாட்களுக்கு முன்புதான் கும்பகோணத்தில் தொடர்ச்சியாய் இரண்டு மாத காலமாய் நடந்து வந்த சோமநாதய்யரின் கதாகாலட்சேபம் முடிவடைந்திருந்தது.

இந்த ஊரில் தாசில் சுப்பிரமணிய அய்யரின் ஆதரவில் ஏற்பாடு செய்யச் சொல்லி, பக்த விஜயத்திலிருந்து சில கதைகளைப் பிரவசனம் செய்ய வேண்டும் என்பது அவரது நெடுநாளைய ஆவல். இப்போதுதான் அதற்கு வேளை வாய்த்திருக்கிறது. அவர் அப்படித்தான் நினைத்துக் கொண்டார். இல்லையென்றால் கும்பகோணத்தில் முடிந்தவுடன் இங்கே புறப்பட்டுவர இப்போது அவருக்குத் தோன்றுவானேன்? — எல்லாம் அவன் செயல்தான். அவன் புகழ் பாடவும் அவன் ஆக்ஞையில்லாது முடிகிறதா?

வியர்வை ஆறாக ஊற்றியது. உத்தரீயத்தினால் முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

"கிருஷ்ணா....!"

தாசில்தார் வீடு வந்து விட்டது. அழிக் கதவு சாத்தியிருந்தது. கையிலிருந்த பெட்டியை வாசற்படியில் வைத்து விட்டுக் கதவிலே இலேசாகத் தட்டினார்.

உள்ளேயிருந்து யாரோ வந்தார்கள்.

தாசில்தாரை அவர் இதற்கு முன் பார்த்ததில்லை. இருந்தாலும் வருகிறது அவர்தான் என்று பௌராணிகருக்குத் தெரிந்துவிட்டது.

"நமஸ்காரம்....!"

அழிக் கதவைத் திறந்து விட்டுக் கொண்டே, "வரணும், வரணும்!" என்று வரவேற்றார் தாசில்தார்.

"இந்தா, ராஜு! இந்தப் பெட்டியை எடுத்து உள்ளே வை!" என்று கையில் குழந்தையுடன் அவர் பின்னால் வந்து நின்ற வேலைக்காரனிடம் கூறி விட்டு, "நீங்க உள்ளே வாங்கோ!" என்று சோமநாதய்யரை வரவேற்றார் அவர்.

"என்னைத் தெரிகிறதான்னு கேட்க நினைக்கிறீர்கள் இல்லையா? ஒரு வருஷத்துக்கு முந்தி புதுக்கோட்டையிலே ஒரு வாரம் தொடர்ந்தாற்போல உங்கள் காலட்சேபம் கேட்டிருக்கிறேன். என்னைத்தான் உங்களுக்குப் பரிச்சயமில்லையே தவிர நீங்களும் உங்கள் பிரவசனமும் எனக்கு ரொம்பப் பரிச்சயம்!"



அறிமுகத்துக்கு அவசியமேயில்லாத முறையில் அவர் பேசிய இந்தப் பேச்சு வந்தவரை ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டது.

'எப்படித் தன்னை அறிமுகம் செய்துகொண்டு பேச்சை ஆரம்

பிப்பது?' என்று மனத்துக்குள்ளாகவே ஒத்திகை பார்த்துக் கொண்டு வந்திருந்தவருக்கு அதற்கு இடமே யில்லாமல் போய் விட்டதில் சற்று வருத்தம் தான் என்றாலும் தாசில்தாரின் பரிவான வரவேற்பின் இதத்தின் தன்மையில் அவருக்கு வெய்யிலில் நடந்து வந்த களைப்புக் கூடப் போய் விட்டது.

வாசல் நடையை அடுத்தாற்போல் இருந்த விசாலமான அறைக்கு அவரை அழைத்துச் சென்றார் தாசில்தார். ஒரு பெரிய தோதகத்திக் கட்டில், இரண்டு பிரம்பு நாற்காலிகள், ஒரு புத்தக அலமாரி — இவைதான் அந்த அறையில் நிறைந்திருந்த பொருள்கள்.

''இப்படி வருகிறவர்களுக்காகவே இந்த அறையை வைச்சிருக்கேன். உட்காருங்கோ!' என்று சொல்லிக் கொண்டே மின் விசிறியைச் சுழல விட்டார் அவர்.

''ஜிருஷ்ணு....!''

அந்தக் காற்று அப்போது சோமநாதய்யருக்குத் தேவையாகத்தான் இருந்தது.

'மனுஷனுக்கு மனசு தங்கம்தான். கொஞ்சம் ஸ்தோத்திரப் பிரியராக இருப்பார் போல் இருக்கிறது. இருந்து விட்டுப் போகட்டுமே! பகவான் கூட ஸ்தோத்திரப் பிரியர் தான். இந்தக் காலத்தில் இப்படி ஆஸ்திக விசுவாசம் எத்தனை பேருக்கு இருக்கிறது? மனுஷன் நன்றாக இருக்கணும்.'

தமக்குள்ளேயே மூழ்கியிருந்த பௌராணிகரைத் தாசில்தாரின் குரல் ஈர்த்தது.

''இப்போ எங்கேயிருந்து வராப்பலே?''

''கும்பகோணத்திலே யிருந்து! ரெண்டு மாசமாக அங்கே ராமாயணம் நடந்தது. ரொம்ப விரிவாச்சொல்லிக்கொண்டுவந்தேன். மூந்தாநாள் பட்டாபிஷேகம். அமோகமாக நடந்தது அவன் புண்ணியத்திலே! எனக்கு ரொம்ப நாட்களாகவே இங்கே வரணும் கிற ஆசை. வேளை இப்போத்தான் வந்திருக்கு. ஏதோ பெரியவா தயவிருந்து ஏற்பாடானால் பக்த விஜயத்திலிருந்து நாலைந்து கதைகள் சொல்லலாம்னு புறப்பட்டு வந்திருக்கேன் !''

''அதென்ன அவ்வளவு பெரிய வார்த்தையாகப் போடறேள்? நான் ரொம்பச் சின்னவன் ஸ்வாமி! நம்ம விட்டு வாசலிலேயே பந்தல் போட்டு ஏற்பாடு பண்ணினால் போச்சு. எங்களுக்கெல்லாம் கொடுத்து வைக்கணுமே !''

அறை வாசலில் நிழல் தட்டியது!

''யாரு... சுந்தரியா? வா, பெரியவாளுக்கு நமஸ்காரம் பண்ணு.''

அந்த அம்மாள் வந்து அடக்க ஒடுக்கமாக நமஸ்காரம் பண்ணி விட்டுப் போனாள்.

''தீர்க்க சுமங்கலியாக இருக்கணும் !'' என்று மனம் குளிர்ந்து ஆசீர்வாதம் பண்ணினார் அவர்.

''வந்தவாளை உட்கார்த்தி வைச்சுப் பேசிண்டே யிருந்துட்டேன். போஜனத்துக்கு உட்காரலாமா? மணி பன்னிரண்டாகிறதே!''

''இல்லே. இப்போ ஸ்நானம் பண்ணினால் தேவலே. கிணறு இருக்கோ....?''

பஸ்ஸில் வந்ததனாலோ, ஆற்றாத வியர்வையாலோ அவருக்கு ஸ்நானம் செய்ய வேண்டும் போலிருந்தது.

''இருக்கே.... வாருங்கோ!''

பெட்டியைத் திறந்து ஒரு துண்டை எடுத்துக் கொண்டு புறப்பட்டார் சோமநாதய்யர்.

வீடு பெரிதாக இருந்தது.

''என்ன வாடகை கொடுக்கிறேள்?....?'' என்று கேட்டார் விசாலமாக விரிந்து கிடந்த கூடத்தைப் பார்த்து.

''சொற்பம்தான். முப்பது ரூபாய்!''

''பட்டணக் கரையிலே நூறு இருநூறு கொடுத்தால் கூட இப்படி இடம் கிடைக்காது!''

பக்கத்து அறையிலிருந்து யாரோ ஈனமாக முனகும் ஒலி கேட்டது.

''யாருக்கு என்ன உடம்பு?'' என்று விசாரித்தார் அவர்.

''அம்மாதான் படுத்திருக்கிறாள். தள்ளாமை: அவ்வளவுதான். வேறொன்றும் இல்லே....''

''பாவம்!''

அவர்கள் சாப்பிட உட்காரும்போது மணி ஒன்றுக்கு மேல் ஆகிவிட்டது.

''என்னாலே உங்களுக்கும் ரொம்ப நேரமாகிவிட்டது.''

''அதெல்லாம் ஒன்றுமில்லே. நான் வழக்கமாகவே ஒரு மணிக்குத்தான் சாப்பிடுவேன்.''

சாப்பாடு அந்தப் பசி நேரத்தில் அமிர்தமாக இருந்தது. தாசில்தாருடைய மனைவி அவருக்கு ஏற்றாற் போலவே இருந்தாள். அவர்கள் காட்டிய பரிவில் மகிழ்ந்து போனார் பௌராணிகர்.

''அம்மா சாப்பிட்டு விட்டார்களா?'' என்று விசாரித்தார் அவர்.

''சாப்பிட்டிருப்பார்கள்.''


இப்போது முனகல் ஒலி கேட்கவில்லை. தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது என்று எண்ணிக் கொண்டார் அவர்.

சாப்பிட்டு விட்டு வந்து முன் வாசல் அறையில் உட்கார்ந்தார்கள்.

''வெய்யில் ஒரேயடியாக அசத்தறதே! கொஞ்சம் அப்படிச் சிரம பரிகாரம் பண்ணிக்கிறேளா ?'' என்று கேட்டார் தாசில்தார்.

''பகல் நேரத்தில் நான் தூங்குவதில்லே. ஏதாவது புத்தகத்தைப் புரட்டிக் கொண்டே பொழுதைக் கழித்து விடுவேன்.''

''சரிதான்'' என்று சொல்லி விட்டுச் சற்று நேரம் நின்றார் அவர். அப்புறம் என்ன நினைத்துக் கொண்டாரோ, ''கொஞ்சம் ஆபீஸ் வேலை இருக்கு. பார்த்துவிட்டு வரட்டுமா? வித்தியாசமில்லாமல் நம்ம வீட்டிலே நினைச்சுக்குங்கோ. வரட்டுமா?'' என்றார்.



''ஆஹா!''

அவர் புறப்பட்டுப் போய் விட்டார்.

அந்த நெடிது வளர்ந்திருந்த உருவத்தினுள் அடங்கியிருக்கும் அன்பு உள்ளத்தை எண்ணி வியந்தவாறு படுத்திருந்தார் சோமநாதய்யர்.

முன்னதாக ஒரு கடிதம் கூடப் போடாமல் திட்டுத் திடுமென அவர் வந்து நின்றபோது ஏதோ எதிர்பார்த்திருந்தவரை வரவேற்பது போலல்லவா வரவேற்றார்? இந்த மனப் பக்குவம் இலேசில் வரக்கூடிய ஒன்றா....?

ஒரு நல்ல மனிதருடைய உதவியுடன் ஒரு நல்ல காரியத்தைச் செய்யப் போகிற மன நிறைவு சோமநாதய்யருக்கு ஏற்பட்டது.

பெட்டியைத் திறந்து அதிலிருந்து ஒரு புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தார்.

அந்த விசாலமான அறையும் அமைதியான சூழ்நிலையும் மனத்துக்கு உற்சாகமூட்டின.

''என்றைக்கு உபன்யாசத்தை ஆரம்பிக்கலாம் என்று தாசில்தாரிடம் ஒரு வார்த்தை கேட்டிருக்கலாம்தான். மறந்து விட்டோம். பரவாயில்லை. சாயங்காலம் கேட்டு விட்டால் போகிறது என்று நினைத்துக்கொண்டே புத்தகத்தைப் புரட்டினார்.

கதை சொல்கிறபோதும் சரி, படிக்கிற போதும் சரி. அவர் அந்தக் கதையுடன் ஒன்றிப் போவார். கைகேயி இரண்டு வரங்களைத் தசரதனிடம் யாசித்தபோது தசரதன் மன்றாடும் கட்டத்தைக் கூறுகையில் அவர் உருகிப் போய்விடுவார். தசரதனது நிலை கண்டு, துயருறும் அவர் உள்ளம். அவருடைய குரலிலும் சொல்லிலும் சோக இழையூட்டுகையில் கேட்பவருக்கு நெக்குருகும் நிலை ஏற்பட்டுவிடும்.

புத்தகத்தைப் புரட்டிக் கொண்டிருக்கையில் அதன் ஒரு பக்கத்தில் ஹரிதாஸ ஸ்வாமிகளின் கதை சுருக்கமாகக் கூறப்பட்டிருந்ததை அவர் படித்தார். அன்னையும் தந்தையுமே தெய்வமெனப் போற்றிய அந்தப் பக்திமானின் கதையையே விஸ்தாரமாகக் கூறினாலென்ன என்று அவருக்குத் தோன்றியது.

கண்களை மூடியவாறு கதையை நெஞ்சினுள்ளே புரட்டிக்கொண்டு சற்று நேரம் படுத்திருந்தார்.

இந்த ஊரில் இதையே முதல் கதையாக எடுத்துக் கொள்வது என்று அவர் தீர்மானித்து விட்டார்.

நெஞ்சத் துடிப்பே துல்லியமாகக் கேட்கக் கூடிய அந்த அமைதியில் உள்ளேயிருந்து மறுபடியும் முனகல் ஒலி கேட்க ஆரம்பித்தது

ஈனசுவரத்தில் வெளிப்பட்ட அந்த ஒலிகளின் சோகம் அவர் நெஞ்சைப் பிசைவது போல் இருந்தது.

கற்பனை மயக்கிலிருந்து விடுபட்டு எழுந்து உட்கார்ந்தார் அவர்.

வெய்யில் சற்றுத் தணிந்திருந்தது.

திறந்திருந்த ஜன்னலுக்கு வெளியே தெருவில் வெய்யில் எதிர்ச்சாரி சுவரை யொட்டி நகர்ந்திருந்தது.

'மணி நாலு இருக்கும் போலிருக்கிறதே!' என்று எண்ணிக் கொண்டார்.

வீட்டில் வேறு ஆள் இருப்பதாகவே தெரியவில்லை. கிழவியின் முனகல் ஒலி ஒன்றுதான் அவள் இருப்பைத் தெரிவித்தது.

தாசில்தார் ஆபீசுக்கே போய் விட்டாரோ? அல்லது மாடியில் உட்கார்ந்து வேலை பார்த்துக் கொண்டிருக்கிறாரோ....? குறுக்கும் நெடுக்கும் தோளில் குழந்தையுடன் நடந்து கொண்டிருந்த வேலைக்காரன் ராஜுவையும் காணோம்!

அந்த வீட்டின் அந்த வேளை அமானுஷ்யம் அவருக்கு விசித்திரமாக இருந்தது.

'தாசில்தாரின் மனைவி வீட்டில் இருக்கிறதாகவே தெரியவில்லையே! என்ன அடக்கம் அந்தப் பெண்மணிக்குத்தான்!' என்று நினைப்போடியது அவருக்கு.

கிழவியின் முனகல் ஒலி சற்று அடங்கியிருந்தது.

திடீரென்று குழந்தை அழும் ஒலி கேட்டது. அந்த அழுகை ஒலியே வீட்டுக்கு ஜீவ களை சேர்ப்பதாக எண்ணிக் கொண்டு அவர் உட்கார்ந்திருந்தார்.

குழந்தை இடைவிடாமல் கதறிக் கொண்டிருந்தது. அந்த அம்மாள் ஒரு வேளை தூங்குகிறாளோ, என்னவோ? நாம்தான் போய்ப் பார்ப்போமே என்ற நினைப்புடன் கட்டிலிலிருந்து அவர் எழுவதற்கும் குழந்தையின் அழுகை ஓய்வதற்கும் சரியாக இருந்தது.

மறுபடியும் கட்டிலில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

''என் ராஜாக் கண்ணு...! கட்டித் தங்கம் தூங்கி முழிச்சுட்டாயாம்மா!''

உள்ளே யாரோ குழந்தையைக் கொஞ்சிக் கொண்டிருந்தார்கள். அந்தக் கொஞ்சல் ஒலியிலேயே குழந்தையின் தெய்வ ஒளியை அவர் கண்டு ரசித்தார்.

''ஐயையோ! இதென்னமாயம்மா கூத்து! குழந்தையைத் தொடாதீங்கன்னு உங்களுக்கு எத்தனை தரம் சொல்லியிருக்கேன் அம்மா! பேசாமல் அந்த உள்ளிலே விழுந்து கெடக்காமல்....!''

அந்த அலறல் அவரைத் தூக்கிவாரிப் போட்டு விட்டது!

''என்னம்மா......?'' என்று கேட்டுக் கொண்டே எங்கிருந்தோ அப்போதுதான் உள்ளே ஓடி வந்தான் ராஜு.

''கொல்லைப்புறம் போயிருந்தேன். குழந்தை கண் முழிச்சுட்டான் போலிருக்கிறது! கழுகு மாதிரிக் காத்திருந்து குழந்தையைத் தூக்கிண்டுட்டா....! நாளைக்கு ஒண்ணு வந்தா....? நீதான் எங்கே ஒழிஞ்சு போயிட்டாய்?''

இப்போது பேசுவது தாசில்தாரின் மனைவிதான் என்பது அவருக்குப் புரிந்து விட்டது. பேசவே தெரியாதோ என்று நினைத்திருந்த அந்த அம்மாளா இப்படிப் பேசுகிறாள் என்று அவர் அதிசயித்துப் போனார்.

அதற்குள் வேலைக்காரன் ராஜு குழந்தையைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்து விட்டான்.

அவர் இருந்த அறை வாசலை அவன் தாண்டுகையில் ''ராஜு....!'' என்று கூப்பிட்டார் அவர்.

''என்னங்க.....?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தான் அவன். தோளில் சாய்த்துக் கொண்டிருந்த குழந்தை ஒரு ரப்பர்க் குமிழைச் சூப்பிக் கொண்டிருந்தது.

''உள்ளே என்னப்பா நடந்தது?'' என்று கேட்டார் அவர்.



மனைவி : இங்கே இருக்கிற புடவைகளில் உங்களுக்கு எந்தப் புடவை பிடிச்சிருக்கு?

கணவன் : நீ கட்டிண்டிருக்கிற புடவை ரொம்பப் பிடிச்சிருக்கு.

என்னவோ சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டு தாழ்ந்த குரலில் சொன்னான் அவன்.

''ஐயாவோட அம்மாளுக்கு இருமல் வியாதிங்க. அதனாலே அதை ஓர் அறைக்குள்ளாரத் தான் விட்டிருக்காங்க. அந்த அம்மா எதையும் தொடக் கூடாது; உள்ளே யெல்லாம் வரக் கூடாது. அப்படிக் கண்டிப்பாச் சொல்லியிருக்காங்க. வந்தா வியாதி இவங்களை ஒட்டிக்குமாம்....''

அவருக்கு வேடிக்கையாக இருந்தது.

''அதனாலே?'' என்றார்.

''கொளந்தை அழுதுக்கிட்டிருந்தப்போ மனசு கேக்காம வந்து அந்தக் கிழவியம்மா தூக்கிடுச்சு. அதுக்குத்தான் சின்னம்மா கோபிச்சுக்கிட்டாங்க!''

''ஓஹோ!''

வேலைக்காரன் வெளியே போய் விட்டான்.

சோமநாதய்யர் மனத்து அமைதி திடீரெனக் கலைந்தாற் போன்று உணர்ந்தார்.

ஏன் இப்படி.....?

எழுந்து சற்று வெளியே போய் விட்டு வந்தால் தேவலை போல் தோன்றியது.

புத்தகத்தைப் பெட்டியில் வைத்துப் பூட்டி விட்டு, அறைக் கதவைச் சாத்திக் கொண்டு புறப்பட்டார்.

வாசலில் குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்த வேலைக்காரனிடம், ''ஐயா வந்தால் சொல்லு. வெளியிலே கொஞ்சம் நடந்துட்டு வந்துடறேன்!'' என்று சொல்லி விட்டுச் சென்றார்.

அவர் திரும்பும்போது இருட்டி விட்டது.

தாசில்தார் வீட்டு வாசலில் நின்ற மின் விளக்கின் ஒளியில் அழிக் கதவு சாத்திக் கிடப்பது தெரிந்தது.

உள்ளேயிருந்து கேட்ட கூச்சல் அவரை வாசற்படியிலேயே நிற்க வைத்துவிட்டது.

''உனக்கு எத்தனை தரம் சொல்லிறது? பேசாமல் விழுந்து கிடப்பதாய் கிடக்கிறியா? குழந்தையை ஏன் தொட்டு எடுத்தாய்? வியாதியிட்டால் மூனேயும் கிடையாதா? போடற சோத்தைத் தின்னுட்டுப் போகாமல் கிடக்காமல் ஏன் பிராணனை வாங்குறியாய்? இனிமேல் இந்த அறையைத் தாண்டி உள் புறம் வந்தால் அம்மான்னு கூடப் பார்க்காமல் கழுத்தை முறிச்சுப் போட்டுடுவேன், ஆமாம்!''

சோமநாதய்யருக்கு அங்கு நிற்கவே பிடிக்கவில்லை.

தாசில்தார்தான் உள்ளே தம் தாயைத் திட்டிக் கொண்டிருந்தார். அவரைப் பற்றி அவர் எண்ணியவை யெல்லாம் ஒருகணத்தில் புகைந்து போய் விட்டன.

''ராஜூ!'' என்று மெல்லக் கூப்பிட்டார்.

வேலைக்காரன் ராஜு உள்ளிருந்து வந்து கதவைத் திறந்தான்.

''ஐயா வந்துட்டாங்களா?''

''ஓ!''

அவர் தம்முடைய அறைக்குப் போய், கொடியில் உலர்த்தியிருந்த வேஷ்டியையும் துண்டையும் உருவியெடுத்து மடித்து, பெட்டியைத் திறந்து வைத்து மூடினார்.

''ராஜூ! கொஞ்சம் ஐயாவை வரச் சொல்லுறியா?'' என்று அவர் கூறுகையிலேயே தாசில்தார் வந்துவிட்டார்.

''என்ன? வெளியிலே போயிருந்தீங்களாக்கும்......?''

காலையில் தோற்றமளித்தது போலவே சிரித்த முகத்துடன் தாசில்தார் தோன்றினார். சற்று முன் ருத்திரனாய்க் குதித்த மனிதர்தானா இவர்? இந்த முகமூடியினால்தான் சுய உரு தமக்குத் தெரியவில்லையோ என்று நினைத்தார் பௌராணிகர்.

''நான் ஊருக்குப் போய் விட்டு இன்னொரு முறை வரேன்!''

''என்ன இது திடீரென்று?'' — தாசில்தாருக்கு அவரது இந்தத் திடீர் மனமாற்றத்தின் காரணம் புரியவில்லை.

''என்னவோ நெஞ்சு வலிக்கிறது. ஊருக்குப் போனால் தேவலை என்று தோன்றியது. உங்களுக்குச் சிரமம் கொடுத்து விட்டேன் வீணாக!'' என்றார் சோமநாதய்யர்.

''இங்கேயே டாக்டரிடம் காட்டலாமே?''

''இல்லை. நான் ஊருக்கே போய் விடுகிறேன். மனசும் சரியாயில்லை. வரட்டுமா?''

தாசில்தார் அவரை ஒரு தடவை விநோதமாகப் பார்த்தார்.

கைப் பெட்டியும் கையுமாய் வந்த வழியிலேயே திரும்பி நடந்தார் சோமநாதய்யர்.

தாயை மதிக்கத் தெரியாத மனிதன் வீட்டு வாசலில் உட்கார்ந்து ஹரிதாஸின் கதை சொல்ல நினைத்ததை எண்ணியபோது அவருக்குச் சிரிப்புத்தான் வந்தது.

'உலகம் இன்னும் எனக்குப் புரியத்தான் இல்லை!' என்று முனகிக்கொண்டே மெதுவாக நடந்தார் அவர்.


பத்தினிக் கோட்டம்

அத்தியாயம் ஏழு

இதய தரிசனம்

“இளவரசியாரை நீண்ட நேரம் தனிமையில் இருக்கச் செய்து விட்டேனோ?'' என்று இதமான குரலில் கேட்டுக்கொண்டே அறையினுள் பிரவேசித்தார் சேதியக் கலைஞர் பரவாதி மல்லர்.

சாளரத்தருகில், செம்மலரோன் கைம் மலரால் செய்து நிறுத்திய பொற்பாவையெனத் தன்னை மறந்த நிலையில் நின்று அந்த இளந் துறவியையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்த ஆந்திர இளவரசி உத்தமசீலி திடுக்குற்றுத் திரும்பினாள்.



ஜெகசிற்பியன்

இளநகையுடன் அவளை ஏறிட்டு நோக்கிய சேதியக் கலைஞர், ''இன்று இளவரசியாருக்கு உபவாச தினமல்லவே?'' என்று அன்போடு விளித்தார்.

பொன் வண்டு நயனங்கள் படபடக்க, பூமேனி துவண்டு பதற்றமுற, ஒசிந்து ஓரடி பின்னால் நகர்ந்த உத்தமசீலி மீண்டும் தன் பார்வையைச் சாளரத்துக்கு வெளியே செலுத்தினாள். அங்கே, சற்றுமுன் பார்த்த இளந் துறவியைக் காணோம்; ஆற்றின் கரையோரம் வானோங்கித் தவக் கோலம் பூண்டு நின்ற சவுக்கை மரம் மட்டும் மேல் காற்றில் அசைந்தாடிச் சிகை உலர்த்துவது தெரிந்தது. முகம் வெளுத்துப் போன அவள் சட்டென்று தன் பார்வையைத் திருப்பிக் கொண்டு,

''அ....அப்படியொன்றும் இல்லை ஐயா!'' என்று குழறினாள்.

''மிக்க மகிழ்ச்சி! வாருங்கள், காலை

உணவு கொள்வோம்'' என்று பரிவுடன் அழைத்தார் பரவாதிமல்லர்.

தயக்கப் புன்முறுவல் பூத்தவளாய், ''நான்.... நான்....'' என்று இழுத்தாள் உத்தமசீலி.

''இளவரசியாருக்கு என்ன தயக்கம்?.... ஓ..... என் இல்லத்து உணவு எப்படி இருக்குமோ என்று தயங்குகிறீர்களா?'' என்று கேட்டுக் கலகலவென நகைத்தார் பரவாதிமல்லர். ''அந்தச் சந்தேகமே வேண்டாம். ஏனென்றால், உங்களைப் போலவே நானும் சிராவக தர்மத்தைக் கைக்கொண்டு அணுவிரதப்படி ஒழுகும் ஒரு சமணன்தான். இங்கே ஆருகத உணவை (மரக்கறி உணவு)த் தவிர வேறெந்த உணவு வகையும் தலைகாட்ட முடியாது.''

''இல்லை, ஐயா! நான் சந்தியா வந்தனம் செய்யாமல் காலை உணவு ஏற்பதில்லை. அதனால்தான்.....'' என்று தணிந்த குரலில் இழுத்தாள் உத்தமசீலி.

''அந்தக் கவலையும் வேண்டாம், அம்மணி! இந்த இல்லத்தில் எனக்கென அமைத்துக் கொண்ட ஒரு பிரார்த்தனைப் பள்ளி உண்டு. அங்கு போய் உங்கள் சந்தித் தொழுகையை முடித்துக்கொண்டு வரலாம்'' என்று பரிவுடன் கூறியவாறு முன்னே நடந்தார் பரவாதிமல்லர்.

மீண்டும் ஒரு முறை சாளரத்து வழியே அந்த ஆற்றோரக் கரைப் பக்கம் தன் பார்வையைச் செலுத்திய உத்தமசீலி, வாடிய முகத்தினளாய்த் திரும்பி அவரைப் பின்தொடர்ந்தாள்.

கூடத்து அறையைக் கடந்து வலப்புறமிருந்த மற்றோர் அறையை நோக்கிச் சென்ற பரவாதிமல்லர் ஏனோ தயங்கி நின்றார். தாழ் நீக்கி நடுக்களித்திருந்த அவ்வறையின் கதவை மெல்லப் பிடித்த வண்ணம் உள்ளே எட்டிப் பார்த்தார். ஒரு கணம் ஏதோ யோசனை செய்பவர் போல் நின்ற அவர் இளநகையுடன் திரும்பி, ''இதுதான் என் பிரார்த்தனைப் பள்ளியறை!'' என்று கூறிக்கொண்டே உள்ளே செல்ல வழிகாட்டினார்.

''நன்றி, ஐயா!'' என்று இனிய குரலில் சொல்லியவாறு தன் முதுகுப் புறம் சரிந்திருந்த பூந்துகிலை எடுத்துச் சிரசை மூடிக் கொண்டு பக்தி சிரத்தையுடன் அடிமேல் அடி வைத்து அவ்வறையினுள் சென்றாள் உத்தமசீலி.

ஏதோ ஒரு சங்கடத்தில் சிக்கிக் கொண்டவர்போல் கைகளைப் பிசைந்தபடி தவிப்பு நிலையில் நின்ற பரவாதிமல்லர் அங்கிருந்து கூடத்தறைக்குத் திரும்பினார்.

தூய்மையும் எழிலுமாகத் துலங்கியது அந்தப் பிரார்த்தனைப் பள்ளி அறை.

அவ்வறையின் எதிர்ச் சுவரில் நீல நிறப் பட்டுத் திரையொன்று நடுநாயகமாகத் தொங்கிக் கொண்டிருந்தது. அப்பட்டுத் திரையில் பெரியதொரு — *சுவஸ்திகச் சின்னம் வரையப் பெற்றிருந்தது. அந்தச் சின்னத்தின் மேற்புறத்தில் குறுக்கு வரிசையாக மூன்று புள்ளிகளும், அப்புள்ளிகளுக்கு மேலே பிறைக்கோடு ஒன்றும், அப்பிறைக் கோட்டின்மேல் ஒரு வட்டப் புள்ளியும் பொறிக்கப் பெற்றிருந்தன. இப்புனித சின்னம் கொண்ட திரைக்கு எதிரே அமைக்கப் பெற்றிருந்த சிறியதொரு பீடத்தின் மேல் ஆதிபகவனான விருஷப தேவ தீர்த்தங்கரரின் அழகிய விக்கிரகம் பிரதிஷ்டையாகி யிருந்தது.

அமைதி பூத்த மனத்தினளாய் ஆதி பகவன் முன்னே வந்து முழந்தாளிட்டு அமர்ந்த உத்தமசீலி, தன் கயல் விழிகளில் கண்ணீர் சோர மெல்லிய குரலில் முணுமுணுத்தாள்: ''பிண்டிதேவா! வரங்கள் வழங்குவது உமது தொழிலல்ல என்பதை நான் அறிவேன். ஆயினும் என் மனத் திண்மைக்காக அநுதினமும் உமது சந்நிதியில் நின்று நான் எடுத்துக் கொள்ளும் சபதத்தையே இன்றும் இங்கு மனம் திறந்து வெளியிடுகிறேன்: எந்த லட்சியத்துக்காக என் வீடு வாசல், நாடு நகரங்களை விட்டு இப் புதிய நாட்டுக்கு வந்திருக்கிறேனோ அந்த இலட்சியத்தின் பொருட்டு என் உடல் பொருள் ஆவி மூன்றையும் தியாகம் செய்ய இப்போதும் தயாராய் இருக்கிறேன் என்பதை உறுதியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். சரணம் ஐயனே, சரணம், சரணம்!''

விநாடிகள் பல விரைந்தோடி மறைந்தன.

தரை நோக்கிச் சிரம் தாழ்த்தி நிமிர்ந்த அவள், விருஷப தேவருக்குப்

---

* உயிர்கள் தாம் செய்யும் நல்வினை, தீவினைகளுக்கேற்ப தேவகதி, மனிதகதி, விலங்குகதி, நரக கதி என்னும் நான்கு கதிகளில் பிறந்து உழல்வதைக் குறிக்கிறது இந்த சுவஸ்திகச் சின்னம். இதனைப் பிறவிச் சக்கரம் என்றும் கூறுவதுண்டு. இப் பிறவிச் சக்கரத்துக்கு மேலே உள்ள மூன்று புள்ளிகள் நல்ஞானம், நற்காட்சி, நல்லொழுக்கம் எனும் மும்மணிகளாகக் கொள்ளப்படுகின்றன. இம் மும்மணிகளுக்கு மேலுள்ள பிறைக்கோடு மோட்சத்தையும் அப் பிறைக்கோட்டுக்கு மேலேயுள்ள ஒற்றைப் புள்ளி வினைகளை நீக்கி வீடு பேறடைந்த உயிரையும் குறிக்கின்றன. இவை கொண்ட இந்தத் தத்துவக் குறிகளே சமண சமயத்தின் தலையாய புனித சின்னமாகும்.

புஷ்பாஞ்சலி செய்யும் பொருட்டு, மனையொன்றின்மீது வைக்கப் பெற்றிருந்த மலர்த் தட்டை எடுத்தாள். அன்றலர்ந்த வண்ண மலர்கள் நிறைந்த அந்தத் தட்டிலே பளபளப்பான ஓலை நறுக்கொன்று இருப்பது தெரிந்தது. பூமணம் ஏறிய அவ்வோலையை ஆவலுடன் இரு கைகளாலும் எடுத்துப் பார்த்தாள். அதிலே, அழகிய தமிழ்ப் பாடல் ஒன்று வரையப் பெற்றிருந்தது. இமையிதழ்களை இதமாக நீவிக் கொண்டு அதனை மனத்துக்குள்ளாகவே படித்தாள்:

''ஆதி யானற வாழியி னன்அலர்ச்
சோதி யான்சொரி பூமழை யான்வினைக்
காதி வென்றபி ரானவன் பாதமே
நீதி யால்நினை வாழிய நெஞ்சமே....''

சேதியக் கவிஞர் பரவாதிமல்லர் தம் பிரார்த்தனை கீதமாக அமைத்துக் கொண்டிருக்கும் பாடல் போலும் அது. அந்த நறுஞ்சுவைப் பாடலைப் படித்துப் பார்த்த உத்தமசீலியின் வாயெல்லாம் இனித்தது; நெஞ்சம் நெகிழ்ந்து கரைந்தது. அதனை இன்னொரு முறை வாய்விட்டு இசைகூட்டிப் பாடவேண்டுமென்ற உள்ளுணர்வு எழவே, தன்னை மறந்த பரவச நிலைக்காளாகிய அவள், யாழினுமினிய தீங்குரலால் தண்மையும் மென்மையுமான சமக ஸ்வரம் கூட்டித் தன் பவழவாய் திறந்து 'ஆ..ங்' எனும் மெல்லோசை எழுப்பினாள். அதே சமயம் —

''சொல்துணை வேதியன்
சோதி வானவன்,
பொன்துணை திருந்துஅடி
பொருந்தக் கைதொழ...''

பாடுவதற்காக வாய் திறந்த உத்தமசீலி, இந்தப் பாட்டொலி கேட்டு அதிர்ச்சியுற்று எழுந்தாள். அவள் கையிலிருந்த ஓலை நறுக்கு, தானாகவே நழுவிப் பூத்தட்டில் விழுந்தது. உடலும் உள்ளமும் பதறித் துடிக்கச் சுற்று முற்றும் திரும்பிப் பார்த்தாள்.

ஒரு கணம் அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை. தேனிலே புரண்டெழுந்து வீசும் தென்றலைப்போல் அந்த முற்றுப் பெறாப் பாடலின் ஸ்வர இழைகள் சுநாதமாகச் சுழன்று வரும் திக்கைக் கூர்ந்து நோக்கிய அவள், அவ்வினிய இசை மாருதத்தைத் தன் செவிகளால் ஸ்பரிசித்த வண்ணம் வலப்புறமாக மெல்ல நகர்ந்தாள்.

பிறவிச் சக்கரம் தீட்டிய திரைக்குப் பின்னே, குறுக்குச் சுவரின் வலப் பக்க வாட்டில், ஒற்றைக் கதவொன்று ஒருக்களித்துத் திறந்திருப்பது தெரிந்தது. வியப்பும் திகைப்புமாக அந்தக் கதவின் அருகில் வந்து நின்ற உத்தமசீலி, உள்ளே எட்டிப் பார்த்தாள்.

''சொல்துணை வேதியன்
சோதி வானவன்,
பொன்துணை திருந்துஅடி
பொருந்தக் கைதொழ,
கல்துணைப் பூட்டிஓர்
கடலில் பாய்ச்சினும்
நல்துணை யாவது
நமச்சி வாயவே...''

அரை வட்ட வடிவிலே அமைந்திருந்த அச்சிறிய அறையின் எதிர்ச்சுவர் மாடத்தில், அர்ச்சிக்கப்பெற்ற மலர்க் குவியல்களுக்கிடையே, சந்தனாபிஷேகம் செய்த சிறியதொரு சிவலிங்கம் வீற்றிருக்க, அதன் எதிரே சுந்தரக் கலை பொருந்திய வாலிபனொருவன் அடங்கியொடுங்கி நின்று, அன்றைந்த நிலையிலே தலை நிமிர்ந்திக் கண் மூடிக் கரங்குவித்து ஆழ்ந்த தியானத்தில் இலயித்திருந்தான். அவனது வெண்கலக் கண்டத்திலிருந்து வெளிப்பட்ட பாட்டின் இறுதிச்சொல் நாதத் துளிகளிலே துவண்டு குழைந்து உதடுகளில் இன்னமும் உலாவிக் கொண்டிருந்தது.

யார் அந்த வாலிபன்? சந்தேகமில்லை; சற்றுமுன் ஆற்றங் கரையோரம், நீராடி நனைந்த கோலத்தில், மலர்க் கூடையும் கையுமாக வந்தானே, அந்த இளந் துறவிதான் அவன்!

வியப்பால் விழிச் சிறகுகள் துடி துடிக்க, வீசுதென்றலில் வளைந்தாடும் மாதவிப் பூங்கொடியென நின்று, அந்த வாலிபனையே பார்த்துக் கொண்டிருந்தாள் உத்தமசீலி. வாட்டமுற்றிருந்த அவள் முகம் பனித் திவலைகள் படிந்த செவ்வரவிந்தம்போல் எழில் பெற்று மலர்ந்தது.

பக்தி மோனத்தில் ஆழ்ந்திருந்த வாலிபன் மெல்ல அசைவுற்றான். மூடிய கண்கள் மூடியபடியே இருக்க, நெஞ்சுக்கு நேரே குவித்திருந்த கரங்களைத் தலைக்குமேல் உயர்த்திக்கொண்டு, ''நல்துணையாவது நமச்சிவாயவே, நல்துணையாவது நமச்சிவாயவே'' என்று மென்குரலில் முனகியவாறு தன்னையே வலமாகச் சுற்றினான். இருமுறை சுற்றி, மூன்றும் முறையாகச் சுற்றத் திரும்பிய போது மூடிக் கிடந்த அவன் கண்ணிமைகள் தளர்வுற்றுப் பிரிந்தன. அப்படிப் பிரிந்த இமைப் போர்வைக்குள்ளிருந்து உருண்டு நிமிர்ந்த கண்மணிகளில் பளிச்சென ஒரு மின்னல்!

அவன் துணுக்குற்று நின்றான். கந்தர்வக் கன்னியெனக் கதவருகில் நின்று தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் உத்தமசீலியை வியப்புடன் ஏறிட்டு நோக்கினான். ஆடாது அசையாது அம்பொற்சிலை போல் நின்றிருந்த அவளும் அவனையே விழி புரட்டாமல் பார்த்தாள்.

இந்தச் சமயம், பிரார்த்தனை அறைக்கு வெளியே பரவாதிமல்லர் மெல்ல இருமிக்கொண்டே நடந்து வரும் ஓசை கேட்டது.

அத்தியாயம் எட்டு

அஞ்சினான் புகலிடம்

உள்ளமும் உடலும் சிலிர்ப்பாற்றுக் குலுங்கத் தன்னை மீறிய ஒரு குதூகலக் கிளர்ச்சியுடன், திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு அந்தப் பிரார்த்தனைப் பள்ளி அறையிலிருந்து அவசரமாக வெளிப்பட்ட உத்தமசீலி சட்டென்று நின்றான்.

''சந்தியாவந்தனம் ஆயிற்றா இளவரசி?'' என்று கேட்டுக்கொண்டே அவளை எதிர்நோக்கி வந்தார் பரவாதிமல்லர்.

பொருள் பொதிந்த புன்னகையுடன் 'ஆம்' என்று தலையசைத்தாள் உத்தமசீலி.

''இப்போது காலை உணவு கொள்ளப் போகலாம் அல்லவா?''

அழகாகக் கழுத்தைச் சாய்த்து அவரை இதமாக ஏறிட்டுப் பார்த்த உத்தமசீலி மெல்லத் தலைகுனிந்து, ''கலைஞரவர்களை வெகுநேரம் பசியோடு காக்க வைத்து விட்டேன்; வாருங்கள் ஐயா!'' என்றவாறு அன்னப் பேடையென முன்னால் நடந்தாள். அப்படிப் போகும்போது அவளையறியாமலே அவளுடைய கருங்குவளை மலர்க் கண்கள் அந்தப் பிரார்த்தனைப் பள்ளி அறைக்குள் பாய்ந்து சென்று திரும்பின.

சாம்பிய முகத்துடன் தயங்கி நின்ற பரவாதி மல்லரும் அவ்வறையைக் கடைக்கண்ணால் கவனித்தபடி மேலே நடந்தார்.

காட்சிப் புலனுக்கு விருந்தளிக்கும் விதமாக அமைந்திருந்தது அந்த உணவு அறை. உத்தமசீலியும் பரவாதிமல்லரும் அங்கு ஏற்கனவே போடப் பெற்றிருந்த இரு மணைகளில் போய் அமர்ந்தனர்.

உக்கிராண அறையை நோக்கி, ''அநந்தமதி!'' எனக் குரல் கொடுத்தார் பரவாதிமல்லர்.

அவ்வறையிலிருந்து வெளிப்பட்ட ஒரு பெண்மணி, இளவரசியையும் கலைஞரையும் பணிவுடன் வணங்கி விட்டுத் திரும்பிப் போய் உணவுப் பாத்திரங்களுடன் வந்தாள்.

பரவாதிமல்லர் தம் கையாலேயே இளவரசிக்கு இலை விரித்தவாறு, ''என்னதான் துன்ப நிகழ்ச்சிகள் நடைபெறினும் அவற்றிலே சில இன்பப் பேறுகளும் இழையோடாமல் இருப்பதில்லை'' என்றார் கரகரத்த குரலில்.

அறைச் சுவரில் வரையப் பெற்றிருந்த எழிலோவியங்களை ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டிருந்த உத்தமசீலி மெல்லத் திரும்பினாள்.

''ஆம், அம்மணீ! என் இல்லத்தில் நீங்கள் வந்து தங்கியிருக்கும்போது உங்களுடைய சிவிகை காணமற் போய் விட்டதே என்பதை நினைக்க நினைக்க மனம் சொல்லொணா வேதனையுறுகிறது. அதே சமயம், அப்படியொரு துர்ச்சம்பவம் நிகழ்ந்ததால்தான் உங்களை என் இல்லத்தில் இருத்தி உங்களுடன் உணவு கொள்ளும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருக்கிறது என்பதை எண்ணும்போது நெஞ்சம் நிறை மகிழ்ச்சியில் ஆழ்கிறது.''

''உண்மைதான் ஐயா! நானும் இப்போது அதே மன நிலையில்தான் இருக்கிறேன்'' என்று இனிய குரலில் கூறினாள் உத்தமசீலி.

''உபசாரத்துக்காக இப்படிச் சொல்கிறீர்கள் என்று நினைக்கிறேன். உங்கள் மனத் துயரை என்னால் நன்கு உணர முடிகிறது.''

''இல்லை, ஐயா! நிஜமாகவே சொல்கிறேன். தங்கள் இல்லத்தில் நான் தங்கும்படி நேரிட்டதை, எதிர்பாராமல் கிடைத்த ஒரு மாபெரும் பேறாகவே கருதுகிறேன்'' என்றாள் உத்தமசீலி.

பரவாதிமல்லர் அவளை வியப்புடன் ஏறிட்டு நோக்கினார். தாம் நீராடச் செல்லுமுன் அவள் இருந்த நிலைக்கும் இப்போதைய தோற்றத்துக்கும் மகத்தான மாறுதல் இருப்பது அவருக்குத் தெற்றெனப் புலனாகியது. விடியற் போதில் பார்த்தபோது வாடித் துவண்ட பூமாலையெனக் காணப்பட்ட அவள், இப்போது பொன்னுருக்குத் தடாகத்தில் முகிழ்த்து நிற்கும் பொற்றாமரை மலர்போல் விளங்கினாள். நெஞ்சத்தில் ஊற்றெடுக்கும் மகிழ்ச்சி அவளுடைய கன்னக் கதுப்புக்களில்


ஆனந்தமான வாழ்க்கைக்கு



காட்பரீஸ்
சாக்கலேட்...

மிட்டாய்
மட்டுமல்ல-
ஒரு
உணவும்கூட





செஞ்சாயச் சித்திரம் தீட்டிக் கொண்டிருந்தது. நீலோற்பல மலர் போன்ற நீள்விழிகளோ சுகானந்தக் கனவில் துயில்வன போல் ஒளியேறி விகசித்தன. அவளது பூங்குயில் கானம் போன்ற கண்டத்வனியிலிருந்து உயிர்த்து வெளியேறும் ஒவ்வொரு சொல்லும் கன்னற் குழம்பில் சலித்தெடுத்த கற்கண்டுப் பரல்களாக ஒலித்தன.

அவர் கண்ணசைக்காமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

பணிமகள் அநந்தமதி பவ்யப் புன்முறுவலுடன் வந்து, பொங்கக் குழைத்த போனகச் சோறு, தினைமாவில் சுட்டெடுத்த அப்பம், அனலிடையிட்டு மசித்த குறுங்கீரைக் குழம்பு, மாதுளங்காயை வில்லைகளாக அரிந்து மிளகுத் தூள் பெய்து கருவேப்பிலை கூட்டி நெய்யில் வெதுப்பிய பொரியல், மாங்காய் ஊறுகாய் முதலானவற்றை இலைகளில் படைத்துவிட்டுச் சென்றாள்.

இளவரசி முதலில் இலையிலே கை வைக்கும்வரை அமைதியாகக் காத்திருந்தார் பரவாதிமல்லர். ஆனால் அவள் வேறெங்கோ பார்த்தபடி மௌனமாக உட்கார்ந்திருந்தாள்.

''அரண்மனையிலே அறுசுவை உணவேற்றுப் பழகிய இளவரசியாருக்கு எளிய கலைஞனின் இல்லத்து உணவு எப்படியிருக்குமோ! எனினும் என் அன்பு ஒன்றையே அறுசுவையாகக் கருதி நிறைமனத்தோடு ஏற்பார் என்றே நம்புகிறேன்!'' கனிவும் குழைவுமாகக் கூறினார் கலைஞர்.

''இதைவிட இன்னும் எளிய உணவையே நான் ஏற்பது வழக்கம்ஐயா!'' என்று அடக்கமாகக் கூறிய உத்தமசீலி, ''இன்னும் சொல்லப்போனால், பல நாட்களுக்குப் பின் என் தந்தையாருடன் சேர்ந்து உணவு கொள்வது போன்ற இனிய உணர்வோடு இங்கே உட்கார்ந்திருக்கிறேன்!'' என்றாள் உள்ளார்ந்த உற்சாகத்துடன். இப்படிச் சொன்னாளே தவிர, இலையில் மட்டும் ஏனோ அவள் கை வைக்கவில்லை.

தவிப்பும் வியப்புமாக அவளையே பார்த்துக் கொண்டிருந்த பரவாதி மல்லர் மெல்லக் குனிந்து, ''உண்ணுங்கள் அம்மணி! உங்களுக்காகத்தான் நான் காத்திருக்கிறேன்!'' என்று பரிவுடன் வேண்டினார்.

புன்முறுவல் பூத்த உத்தமசீலி தயக்கத்துடன் ஏதோ கூற வாயெடுத்தாள். பிறகு, ஏதும் சொல்லாமல் தன் அதரங்களை நெளித்துக் குவித்தபடி அங்குமிங்குமாகத் திரும்பிப் பார்த்தாள்.

''என்ன வேண்டும் இளவரசி? யாரைப் பார்க்கிறீர்கள்?'' என்று அவசரமாக வினவினார் சேதியக் கலைஞர்.

''ஒன்றுமில்லை, ஐயா!....இன்னொரு மனையும் இலையும் இங்கு வரவேண்டுமே என்பதற்காகத்தான் காத்திருக்கிறேன்!'' என்று அஞ்சுகக் குரலில் கூறித் தலைகுனிந்தாள் உத்தமசீலி.

இதைக் கேட்ட பரவாதிமல்லரின் உடல் ஒரு குலுங்குக் குலுங்கி நிமிர்ந்தது. அவளைப் பரபரப்புடன் பார்த்த அவர், ''என்ன சொல்கிறீர்கள் அம்மணி?'' என்று குழறிக் கேட்டார்.

ஆந்திர இளவரசி அவரைக் குறுகுறுவெனக் கூர்ந்து நோக்கிக் குறும்புப் புன்னகையுடன் சொன்னாள்: ''ஆம், ஐயா! இந்த இல்லத்தில் தங்களைச் சார்ந்த இன்னொருவரும் இருக்கிறார் என்று அறிகிறேன்! அதனால்தான் அவர் வரும் வரையில் காத்திருக்கிறேன்!''

திக்கித் திணறி விட்டார் பரவாதி மல்லர். என்ன பேசுவதென்றே அவருக்குத் தோன்றவில்லை. அப்படியும் இப்படியுமாக அசைந்து நெளிந்தார் அவர்.

''ஏன் மௌனமாக இருக்கிறீர்கள் ஐயா? ஒருவரைப் பசியில் வைத்து நாம் மட்டும் உணவு கொள்வது முறையாகுமா? நம்முடன் அவர் உணவு உண்பதில் எனக்கு எவ்வித ஆட்சேபமும் இல்லை; ஏனென்றால், நான் இங்கு தங்கியுள்ள வரையில் உங்களிலே ஒருத்தியாக இருக்கவே விரும்புகிறேன்.''


குழம்பித் தவித்த சேதியக் கலைஞர் சட்டென்று தம்மைச் சமாளித்துக்கொண்டு, ''ஓ... என் மைந்தனைப் பற்றிச் சொல்கிறீர்களா?'' என்று மெல்லச் சிரித்துக்கொண்டே கேட்டார்.

ஆச்சரியத்தால் கண்கள் அகல விரிய அவரை ஒரு கணம் உற்று நோக்கிய உத்தமசீலி, ''என்ன! .... உங்கள் மைந்தரா? என்னால் நம்ப முடியவில்லையே!'' என்று அலைப்புறும் குரலில் இழுத்தாள்.


''ஆம், அம்மணி! இதில் உங்களுக்கு என்ன சந்தேகம்?''

உத்தமசீலி இதைக் கேட்டுக் கலீரெனச் சிரித்தாள். இதனால் மேலும் குழப்பமடைந்த பரவாதிமல்லர், ''ஏன்





லைப் இன்சூரன்ஸ் கார்ப்பொரேஷன் அதிகாரி திரு ஆர். பலராமனுக்கும் சௌ. புஷ்பாவுக்கும் அதிவிமரிசையாகக் கலியாணம் நடைபெற்றது.



புதுக்கோட்டை கல்கி ஏஜண்ட் திரு எம். எஸ். சுப்பிரமணிய அய்யர் அவர்களின் புதல்வி சௌ சரோஜாவுக்கும் திரு சீதாராமனுக்கும் விவாகம் சிறப்பாக நடந்தது.

சிரிக்கிறீர்கள் இளவரசி?'' என்று கரகரத்த குரலில் வினவினார்.

''ஒன்றுமில்லை ஐயா!....தந்தையும் தனயனும் தனித் தனிச் சமயக் கொள்கையைத் தழுவியவர்களாக இருக்கும் விந்தையை எண்ணினேன், எனக்குச் சிரிப்பு வந்து விட்டது!''

துணுக்குற்ற சேதியக் கலைஞர் உதட்டைக் கடித்துக்கொண்டார். அவர் முகம் வெளிறிச் சிறுத்தது.


இதைக் கடைக் கண்ணால் கவனித்த உத்தமசீலி, ''எனக்குச் சம்பந்தமில்லாத ஏதேதோ கேள்விகளைக் கேட்டு விட்டேன்; மன்னியுங்கள் ஐயா!'' என்று இளநகையுடன் கூறிக்கொண்டே இலையிலுள்ள உணவைச் சுவைத்து உண்ண ஆரம்பித்தாள்.

இந்தக் குறுகிய நேரத்துக்குள் ஏதோ ஒரு திடமான முடிவுக்கு வந்தவர்போல் தலைநிமிர்ந்த பரவாதிமல்லர் அமைதியான குரலில், ''இளவரசியார் மன்னிப்புக் கேட்பதைப் பார்த்தால் தம் மனத்தில் கிளைத்த ஐயப்பாட்டை அகற்றவில்லை என்றாகிறது. என்னைப் பொறுத்த வரையில் எப்போதுமே எவரும் ஐயுறத் தக்க இரகசியங்களை வைத்துக் கொள்வதில்லை'' என்றார். ''சமணனாகிய என் இல்லத்திலிருந்து சிவபூஜை செய்யும் ஒரு வாலிபன், எப்படி எனது மைந்தனாயிருக்க முடியும் என்று இளவரசியார் சந்தேகப்படுவது நியாயமே. ஆனால், அதுவே முழு உண்மை என்பதை இப்போதும் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஆம், அம்மணி! சற்று முன் நீங்கள், சிவப்பூசனை செய்யும் நிலையில் பார்த்திருக்கக் கூடிய அந்த வாலிபர் என்னுடைய மைந்தரேதான்-அதாவது, அவர் எனக்கு ஒரு ஞான மைந்தர்!''


வெண் தந்தம் போன்ற தன் கை விரல்களால் பொங்கற் சோற்றை அளைந்தபடி, அவர் சொல்வதைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்தாள் உத்தமசீலி.

சற்று நேர மௌனத்துக்குப் பின், மெல்லிய குரலில் மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார் பரவாதிமல்லர்: ''இளவரசியாருடன் பழகிய இந்தக் குறுகிய காலத்துக்குள்ளாகவே, அவர் சமண சமயத்தில் ஆழ்ந்த பற்றும், அதன் கொள்கை குறிக்கோள்களில் நிறைந்த அறிவும் கொண்டவர் என்பதை என்

திரு கே.பத்மநாபன் அவர்களின் புதல்வி சௌ. ராஜலக்ஷ்மிக்கும் திரு ரங்கராஜனுக்கும் ஆலப்புழையில் வெகு சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.



கும்பகோணம் வேத தர்ம சாஸ்திர பரிபாலன சபை ஸ்தாபகர் திரு ஜெயராமய்யர் அவர்களின் புதல்வர் திரு கணபதி சுப்பிரமணியன் சௌ. ஹேமாவை மணந்தார்.





பனப்பாக்கம் கல்கி ஏஜண்ட் திரு பலராமன் அவர்களின் சகோதரி சௌபாக்கியவதி சரஸ்வதிக்கும் திரு பக்தவத்சலனுக்கும் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது.



ஸ்ரீ டி. என். ஏ. ராமன் அவர்களின் மைத்துனி சௌபாக்கியவதி சரோஜாவுக்கும் திரு கணபதிக்கும் சமீபத்தில் அதிவிமரிசையாகத் திருமணம் நடந்தது.

ளுல் ஓரளவு ஊகிக்க முடிகிறது: அது சரிதானே?''

அழகுப் புன்னகை பூத்தவாறு மௌனமாய் இருந்தாள் அவள்.

''அவ்வாறாயின், சமண சமயத்தைச் சார்ந்த பல்வேறு ஒழுக்க நெறிகளில் ஒரு பகுதியான நால்வகைத் தானங்களைப் பற்றியும் இளவரசியார் அறிந்திருக்க வேண்டுமே?''

உற்சாகத்தோடு தலைநிமிர்ந்த உத்தமசீலி, தெளிவான குரலில் சொன்னாள்: ''அன்னதானம், அபயதானம், ஔடததானம், சாஸ்திர தானம் ஆகிய நான்கு தானங்களைப் பற்றித்தானே கேட்கிறீர்கள் ஐயா?''

''ஆம், அம்மணீ — அவையேதாம்! இந்த நால்வகைத் தானங்களில் ஒன்றான அபயதானத்தைப் பற்றி எனக்குச் சிறிதே எடுத்துக் கூறுகிறீர்களா?''

உள்ளார்ந்த வியப்புடன் அவரை உற்றுப் பார்த்த உத்தமசீலி, தணிந்த குரலில் கூறினாள்: ''அதாவது, அடைக்கல தானம் என்றால் என்ன என்று கேட்கிறீர்கள், அப்படித்தானே?''

பூஞ்சிரிப்புடன் 'ஆம்' என்று தலையசைத்தார் பரவாதிமல்லர்.

''அச்சம் கொண்டு அடைக்கலம் என்று புகல் அடைந்தவருக்கு அபயம் அளித்துக் காக்க வேண்டும் என்பதே!''

''அதாவது, நமக்கு ஆனவர் ஆகாதவர், உறவினர் அந்நியர், நண்பர் பகைவர், உத்தமர், உலுத்தர் ஆகிய எவராயிருந்தாலும், அடைக்கலம் என்று வந்தால் அவரைக் காட்டிக் கொடுக்காமல் — புறக்கணிக்காமல் — அபயதானம் அளித்து, அதனால் ஏற்படும் எத்தகைய இன்னல்களையும் ஏற்றுக் கொண்டு, அன்னாரை நம்மில் ஒருவராகவே போற்றிக் காக்க வேண்டும், இல்லையா இளவரசி?''

தன்னை மீறிய பரபரப்புடன் அவரை நிமிர்ந்து நோக்கினாள் உத்தமசீலி.

பூம்பஞ்சு போன்ற தம் தாடியை நீவியபடியே பரவாதிமல்லர், ''ஆம், அம்மணீ! நமது சமண சமயம் வற்புறுத்திக் கூறும் இந்த உயரிய தான நெறியைக் கைக் கொண்டே, நீங்கள் சற்றுமுன் பூஜையறையில் பார்த்த அந்த வாலிபருக்கு இந்த இல்லத்தை 'அஞ்சினான் புகலிட'மாக்கி அடைக்கலம் அளித்துள்ளேன்! அதனால்தான் அவரை எனது ஞானமைந்தர் என்றும் கூறினேன்!'' என்றார்.


(தொடரும்)

அகில இந்திய ரேடியோ ஓய்வுபெற்ற நிர்வாக அதிகாரி திரு கே. எஸ். சுப்பிரமணியம் அவர்களின் புதல்வர் திரு சங்கரனுக்கும் சௌ. சாந்தாவுக்கும் விவாகம் நடந்தது.



எம். ஸிடி. உயர்நிலைப் பள்ளி ஸ்ரீ டி. ஏ. வேங்கடராமய்யர் அவர்களின் புதல்வர் திரு பாலசுப்பிரமணியனுக்கும் சௌ. உமாவுக்கும் விவாகம் நடந்தேறியது.





ஒரு கிளாஸ்

கிஸான் ஸ்க்வாஷ்

அருந்தி இளைப்பாறுங்கள்

சுவை மிக்கது; அலுப்பு நீக்குவது; ஆரோக்கியமானது. தானே கனிந்த கனிகளிலிருந்து தயாரானது. வைட்டமின் சத்து நிறைந்தது.

திடீரென்று வரும் விருந்தாளிகளுக்கென்றே தனியாக ஒரு பாட்டில் வைத்திருங்கள். கிஸான் ஸ்க்வாஷ் ஆரஞ்சு, லெமன், மற்றும் ஆறு ரகங்களில் கிடைக்கிறது.

கிஸான் பிராடக்ட்ஸ் லிமிடெட், பெங்களூர்

JWT/KP/1824a

ஸ்ரீரங்கப் பட்டணத்துச் ஸ்ரீரங்கன்

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

"ஏன் பள்ளி கொண்டீர் ஐயா?" என்று ஒரு கேள்வி. கேள்வி எந்நேரமும் தூங்கிக் கொண்டிருக்கும் உங்களையும் என்னையும் பார்த்துக் கேட்ட கேள்வியல்ல. பாற்கடலிலே பாம்பணையிலே பள்ளி கொண்டிருக்கும் அந்தப் பரந்தாமனையே பார்த்துக் கேட்ட கேள்வி தான். கேள்வி கேட்பவர் அருணாசலக் கவிராயர். கேள்வியை ஏன் பள்ளி கொண்டீர் என்று மட்டும் கேட்டு நிறுத்திவிட வில்லை.

'ஆம்பல் பூத்து அசைய பருவத மடுவிலே
அவதரித்த இரண்டு ஆற்றின் நடுவிலே
ஏன் பள்ளிகொண்டீர் ஐயா! சீரங்கநாதரே!'

என்று விளக்கமாகவே கேட்கிறார் கேள்வியை. கேள்வியோ அந்தக் காவிரித் திரு நதியிலே துயிலும் கருணை மாமுகிலையே பார்த்துக் கேட்கப்படுகிறது. ஆனால் சீரங்கநாதரோ இந்தக் கேள்விக்கெல்லாம் பதில் சொல்பவராகக் காணோம். உண்மையிலேயே தூங்குகிறவர் என்றால் தட்டி எழுப்பிக் கேட்டு விடலாம். ஆனால் தூங்குவது போல் பாசாங்கு செய்து கொண்டு அறிதுயிலில் அமர்ந்திருப்பவரிடம் கேள்விக்குப் பதில் கிடைக்கவா போகிறது? ஆதலால் கேள்வி கேட்ட அருணாசலக் கவிராயரே, கேள்விக்கு விடையையும் கண்டு பிடிக்க முயல்கிறார். அவருக்குத் தெரியும், சாதாரணமாய்க் கொஞ்சம் நடந்து அலுத்துக் களைத்தால் தூக்கம் வருமென்று. ஆதலால் கொஞ்சம் சிந்தனை செய்கிறார். ராமாவதாரத்தில் இந்தப் பரந்தாமன் காட்டிலும் மேட்டிலும் நடந்து அலுத்ததெல்லாம் ஞாபகத்துக்கு வருகிறது. உடனே, கேள்விக்குரிய விடையையுமே கேள்வி வடிவிலேயே சீரங்கநாதரிடமே போட்டு விடை கேட்கப் பார்க்கிறார்.


மாசில்லாத மிதிலேசன் பெண்ணுடனே
வழி நடந்த இளைப்போ
தூசில்லா குகன் ஓடத்திலே கங்கைத்
துறை கடந்த இளைப்போ
மீகரமாம் சித்ரகூடச் சிகரக் கல்
மிசை நடந்த இளைப்போ
காசினிமேல் மாரீசன் ஓடிய
கதி தொடர்ந்த இளைப்போ


என்றெல்லாம் அடுக்கடுக்காய்க் கேள்வி கேட்டவர் தொடர்ந்து:

ஓடிக் களைத்தோ—தேவியைத்
தேடி இளைத்தோ

நீர் பள்ளி கொண்டீர் என்று கேட்டுக் கொண்டே போகிறார். இந்தப் பாட்டை நான் படித்த போது உண்மையிலே இவை தானா காரணமாக இருக்கும் சீரங்கநாதர் பள்ளி கொண்டிருப்பதற்கு என்று எண்ணினேன். இவைதான் காரணம் என்றால் இராவண வதம் முடித்துப் பட்டாபிஷேகமும் செய்து கொண்ட பின்பு, அயோத்தி அரண்மனையிலே அம்சதூளிகா மஞ்சத்திலே அயர்ந்து நித்திரை செய்யலாமே. அதை விட்டு, ஆம்பல் பூத்து அசையும் பருவத மடுவிலே அவதரித்த இரண்டாற்றின் நடுவிலே தானா வந்து படுத்துக் கிடக்க வேண்டும்? இதற்கு ஒவ்வொரு தலத்திலும் ஒவ்வொரு கதை சொல்கிறார்கள். அன்று பட்டாபிஷேகம் முடிந்ததும் ராமர் தாம் ஆராதித்து வந்த அரங்கநாதனை விபீஷணனுக்குக் கொடுக்க, அவன் அவரை இலங்கைக்கு எடுத்துச் செல்ல, வழியில் திருச்சியை அடுத்த சீரங்கத்திலே காவிரிக் கரையிலே வைக்க, அந்த இடத்தின் அழகைக் கண்டு அதை விட்டுப் பிரிய மனமில்லாதவராய் அங்கே காலை நீட்டிப் படுத்துக் கொண்டார் என்பர் ஒரு சாரார். இல்லை, பிரம்மாவுக்கும் சரஸ்வதிக்கும் ஒரு பிணக்கு; அது காரணமாகப் பிரம்மா செய்ய விரும்பிய வேள்வியை அழிக்க, சரஸ்வதியே ஒரு பெரிய ஆறாகப் பெருக்கெடுத்து வரும் போது, பிரம்மா செய்த பிரார்த்தனையின்படி, அவரது தந்தையாம் விஷ்ணு ஆற்றின் குறுக்கே படுத்து ஆற்று வெள்ளத்தைத் தடுத்தார் என்பர் ஒரு சாரார். முந்திய கதை ஸ்ரீரங்கம் என்னும் தலத்தைச் சேர்ந்தது என்றால் பிந்தியது உத்தரங்கம் என்னும் பள்ளி கொண்டானைச் சேர்ந்தது. இன்னொரு காரணமும் இருந்திருக்கிறது என்று இப்போது தெரிகிறது. அகலிகையின் கணவரான கௌதமர் தம் பர்ண சாலையைக் காவிரிக் கரையிலே அமைத்திருக்கிறார். ஒரு நாள் காவிரி நீர்ப் பெருக்கிலே அந்தப் பர்ணசாலை அழிந்து விடும் போல் இருந்திருக்கிறது. அப்போது கௌதமர்

கோயில் கோபுரம்





தாரியா தௌலத்

தம்மையும் தம் பர்ணசாலையையும் காக்கும் படி பரந்தாமனைக் கூவி அழைத்திருக்கிறார். பரந்தாமனுக்குத்தான் பழைய அனுபவம் இருக்கிறதே. மண்ணை யெல்லாம் வெட்டிப் போட்டு உடைப்பை அடைப்பதைவிடக் குறுக்கே படுத்து வெள்ளத்தைத் தடுத்து விடலாம்; கௌதமரின் பர்ணசாலையைக் காத்து விடலாம் என்று தோன்றியிருக்கிறது. சரி என்று காவிரி நதியின் குறுக்கே படுத்து விடுகிறார். நதியும் இரு கூறுகப் பிரிந்து சென்று விடுகிறது. கௌதமர் குடிலும் காப்பாற்றப்படுகிறது. இதனாலேயே அந்த இடம் கௌதம க்ஷேத்திரம் என்று அழைக்கப்படுகிறது. அரங்கநாதன் பள்ளிகொண்ட இடத்தைச் சுற்றி ஒரு பட்டணமே தோன்றுகிறது. அதனால் அந்த நகரம் சீரங்கப் பட்டணம் என்றே பெயர் பெறுகிறது. அந்தச் சீரங்கப் பட்டணத்துக்கே செல்கிறோம் நாம் இன்று.

சீரங்கப் பட்டணம், மைசூர், பெங்களூர் பெரும் பாதையில் மைசூருக்கு வடகிழக்கே மைசூரிலிருந்து பத்து மைல் தொலைவில் இருக்கிறது. ரயிலில் போய்ச் சீரங்கப் பட்டணம் ஸ்டேஷனிலேயே 'ஜம்' என்று இறங்கலாம். இல்லை, காரிலோ பஸ்ஸிலோ போய்ச் சேரலாம். ஊர் காவிரிக் கரையில் இருக்கிறது. ஸ்ரீரங்கத்தைப் போலவே காவிரியின் மத்தியில் அமைந்த தீவில்தான் அந்தப் பட்டணம் இருக்கிறது. ஊர் சென்றதும் முதலில் நாம் காண்பது பழைய கோட்டையைத்தான்! கோட்டையின் பிரதான வாயிலை யானைவாசல் என்கின்றனர். கோட்டை இடிந்து கிடப்பதால் இந்த யானை வாசல் வழியாகவும் போகலாம், இல்லை, மற்ற வழிகள் மூலமாகவும் போகலாம். இக்கோட்டை 1454-ல் திம்மண்ணநாயக்கர் என்பவரால் கட்டப் பட்டிருக்கிறது. இந்தப் பட்டணத்துக்கு ஐந்து கல் தொலைவில் உள்ள காவ்வாடி என்ற இடத்தில் இருந்த ஜைனக் கோயில்களை யெல்லாம் இடித்து அங்கு புதைந்திருந்த அளவற்ற செல்வத்தைக் கொண்டு கோட்டை கட்டப்பட்டது என்று சரித்திர ஏடுகள் பேசுகின்றன. கோட்டை விஜயநகர மன்னர்கள் கையிலிருந்து மகமதியர்கள் கைக்கு மாறியிருக்கிறது. இங்கு திப்பு கட்டிய மசூதி ஒன்று பிரமாதமாக இருக்கிறது

நாம் முதலில் கோட்டையுள் சென்று அங்கு கோயில் கொண்டிருக்கும் சீரங்க நாதரைத் தரிசித்து விட்டு வரலாம்.

ஊரின் வடமேற்குக் கோடியில் சீரங்கநாதர் கோயில் இருக்கிறது. கோயில் வாயிலில் ஒரு பெரிய கோபுரம் இருக்கிறது. இங்கும் கோயில் வாயிலைக் காலை எட்டு மணிக்குத்தான் திறக்கிறார்கள். பகல் ஒரு மணிக்கே மூடி, திரும்பவும் மாலை 5-30 மணிக்குத்தான் திறக்கிறார்கள். இந்தக் கோயில்தான் மைசூரில் உள்ள கோயில்களில் எல்லாம் பெரியது என்கின்றனர். கோயில் 894-ல் திருமலையா என்பவனால் கட்டப்பட்டது என்று கூறுவர். ஆனால் கோட்டையைக் கட்டிய திம்மண்ண நாயக்கர் காலத்தில்தான் கோயில் விரிவாகக் கட்டப்பட்டிருக்கிறது. விஜயநகர மன்னர்களிடம் இந்தத் திம்மண்ண நாயக்கன் சீரங்கப் பட்டணத்திலேயே ராஜப்பிரதிநிதியாக இருந்திருக்கிறான். 101 சமணர் கோயில்களை இடித்து அதன் மூலம் கிடைத்த பொருள்களைக் கொண்டே கோட்டையையும் கோயிலையும் கட்டினான் என்பர். கோயில் வாசலில் நுழைந்து உள்ளே சென்றால் விசாலமான ஒரு வெளிப்பிராகாரம் இருக்கும். அதை அடுத்தே மகாமண்டபம். அந்த மகாமண்டபத்திலே உற்சவ காலத்தில் உபயோகிப்பதற்காக அமைத்து வைக்கப்பட்டிருக்கும் தங்க மயமான கருட வாகனம் ஒன்று இருக்கும். அந்தக் கருடனின் அனுமதி பெற்று மேலே நடந்தால் நவரங்க மண்டபம் வந்து சேருவோம். இந்த மண்டபத்துத் தூண்கள் எல்லாம் கடைந்து எடுத்தவை என்னும்படி உருண்டு திரண்டிருக்கும். இங்குள்ள இரண்டு தூண்களை சதுர்விம்சதி தூண்கள் என்கின்றனர். அவைகளில் விஷ்ணுவின் இருபத்து நாலு மூர்த்தங்களும் செதுக்கப்பட்டிருக்கின்றன. இந்த மண்டபத்திலிருந்து அர்த்த மண்டபம் சென்று அதன் பின்னரே கருவறையில் உள்ள சீரங்கநாதனைத் தரிசிக்க வேண்டும். இந்த ரங்கநாதர் தெற்கே தலை வைத்து வடக்கே காலை நீட்டி ஆதிசேஷன் மேல் படுத்திருக்கிறார். நல்ல பெரிய வடிவம். இவரது உந்தியில் தாமரை பூத்திருக்காது. பக்கத்திலே ஸ்ரீதேவி பூதேவியரையும் காண இயலாது. காவேரித் தாய் கையில் தாமரை ஒன்றை ஏந்தியவண்ணம் சீரங்கநாதரது காலடியில் உட்கார்ந்திருக்கிறாள். கௌதம முனிவருக்கும் கருவறையிலே இடம் கிடைத்திருக்கிறது. சீரங்கநாதர் காவிரித் திருநதியிலே மூன்று இடங்களில் சயனித்திருப்பதாயும், இந்தச் சீரங்கப் பட்டணம்தான் ஆதிரங்கம் என்றும் இடையிலே உள்ள சிவசமுத்திரம் மத்தியரங்கம் என்றும் திருச்சியை அடுத்தஸ்ரீரங்கமே அந்தியரங்கம் என்றும் கணக்கிட்டிருக்கின்றனர்.

இந்தக் கோயில் மைசூர் அரச பரம்பரைச் சரித்திரத்திலே முக்கிய இடம் பெற்றிருக்கிறது. 1574-ல் நான்காம் சாமராஜ உடையார் இந்தக் கோயிலில் பூசை செய்து கொண்டிருக்கும்போது, விஜயநகர ராஜப் பிரதிநிதி அவரைக் கைது செய்ய முயன்றதாகவும் சீரங்கநாதர் அருளால் உடையார் தப்பித்துச் சென்றதாகவும் வரலாறு கூறுகிறது. 1610-ல் விஜயநகர மன்னரின் ராஜப் பிரதிநிதியிடமிருந்து சாமராஜ உடையார் கோட்டையைக் கைப்பற்றி யிருக்கிறார்.

பின்னர் ஹைதர் அலி படை எடுத்த போது 1761-ல் கிருஷ்ணராஜ உடையார், அவரது மனைவியார், மந்திரி கண்டே ராவ் மூவரும் ரங்கநாதரை வணங்கி விட்டு ஹைதரை எதிர்த்ததாகவும் தெரிகிறது. என்றாலும் ஹைதரே வெற்றி பெற்றிருக்கிறான். கோட்டை அவன் வசமாகியிருக்கிறது. 1773-ல் கோயிலில் ஒரு வெடி விபத்து நேர்ந்திருக்கிறது. அதனால் சேதமுற்ற பகுதிகளை யெல்லாம் ஹைதர் அலியே திரும்பவும் கட்டிக் கொடுத்திருக்கிறான். திப்புசுல்தான் பல கோயில்களை இடித்தான் என்பர். ஆனால் அவன் இந்தச் சீரங்கநாதர் கோயிலைத் தொடவில்லை. மேலும் பல அணிபணிகளையும் சீரங்கநாதருக்கு வழங்கியிருக்கிறான்.

இச்சீரங்கப் பட்டணத்தில் இந்த ரங்கநாதர் கோயிலைத் தவிர இன்னும் சில கோயில்கள் இருக்கின்றன. ஒன்று கங்காதரேசுவரர் கோயில்; மற்றொன்று நரசிம்மர் கோயில். கங்காதரேசுவரர் கோயில் உற்சவர் தட்சிணாமூர்த்தமாக இருக்கிறார். நல்ல அழகான வடிவம். இந்த இரண்டு கோயில்களைத் தவிர அம்பேகல் கிருஷ்ணன் கோயில் என்று ஒரு சிறு கோயிலும் உண்டு. அங்கு தவழும் வடிவில் கிருஷ்ணன் இருக்கிறார். இந்தக் கோயிலைச் சுற்றி இடிந்த மண் சுவர்கள் இருக்கின்றன. அவை முன்பு அங்கிருந்த அரண்மனைக் கட்டடங்களின் பகுதி என்கின்றனர். சீரங்கநாதர் கோயிலில் இரண்டு உற்சவங்கள் சிறப்பானவை. ஒன்று தை மாதம் நடக்கும் ரதோற்சவம், மற்றொன்று ஐப்பசியில் நடக்கும் பிருந்தாவனோற்சவம். இரண்டு உற்சவ காலங்களிலும் மக்கள் திரளாகக் கூடி விடுகின்றனர்.

சீரங்கப் பட்டணத்தை விட்டுக் கிளம்பு முன், கோட்டைக்குக் கீழ்ப்புறமுள்ள லால் பாக் தோட்டம் சென்று அதனை அடுத்துள்ள திப்பு கட்டிய தாரியா தௌலத் என்னும் வசந்த மாளிகையையும் பார்த்து விடலாம். தாரியா தௌலத் ஓர் அழகான கட்டடம். சிறந்த வேலைப்பாடுள்ள தூண்களும் விதானங்களும் அமைந்தது. சுவரில் எல்லாம் சித்திரங்கள். சித்திரங்கள் எல்லாம் எத்தனை எத்தனையோ கதைகளைக் கூறும். அந்த வசந்த மாளிகை ஒரு பெரிய அரண்மனையாகவே இருக்கும். தாரியா தௌலத்துக்குத் தென்பக்கம் நாலு பர்லாங்கு நடந்தால் அங்கு ஹைதர் அலி, அவன் மனைவி, திப்புசுல்தான் முதலியவர்களின் சமாதிக் கட்டடங்களைக் காணலாம்.

சொல்லு தம்பி சொல்லு!

ஓர் ஊரில் ஐந்து சகோதரர்கள் இருந்தனர். தருமன் மூத்தவன். ராமன், கிருஷ்ணன், கோவிந்தன், கோபாலன் என்ற அவனுடைய நான்கு தம்பிகளுடைய வயதின் கூட்டுத் தொகை 224. ராமன் கிருஷ்ணன் இருவர் வயதும் சேர்ந்து 92. கிருஷ்ணன் வயதோடு கோவிந்தனின் வயதைக் கூட்டினால் 112 வரும். கோவிந்தன் வயதும் கோபாலனின் வயதும் சேர்ந்து 132. கோபாலன் ராமனை விட முப்பது வயது பெரியவன் என்றால் இந்த நான்கு பேர் வயது என்ன?

ஓர் உலோபி. அவனிடம் ஏராளமான புதையல் இருந்தது. அதை ஓர் அறைக்குள் வைத்துப்பூட்டிப் பாதுகாத்துவந்தான். அந்த அறைக்கு நான்கு ஜன்னல்கள். ஒரே ஒரு வாசல். வாசல் கதவுக்கு உறுதியான பூட்டு உண்டு. ஒரு நாள் உலோபி அந்த அறைக்குள் யாருமில்லை என்பதைச் சோதித்து விட்டு நான்கு ஜன்னல் கதவுகளையும் சாத்தி மூடித் தாளிட்டுவிட்டுக் கதவையும் சாத்திக்கொண்டு சந்தைக்குக் கிளம்பினான். போகும் போது மறக்காமல் பையை வேறு தொட்டுப் பார்த்துக் கொண்டான். அந்த அறையின் ஒரே பூட்டின் ஒரே சாவி பத்திரமாக இருந்தது. திருப்தியோடு போனான்.

உலோபியின் செய்கையை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தான் ஒருவன். அவன் தலை மறைவதற்காகக் காத்திருந்தான். உலோபி திரும்பி வந்தபோது பொக்கிஷ அறை கொள்ளையடிக்கப்பட்டிருந்தது. ஜன்னல்கள் திறக்கப்படவில்லை. வாசலில், கதவோ பூட்டோ உடைக்கப் படவில்லை. அப்படியானால் திருடன் எப்படி நுழைந்திருப்பான்?

விடைகள்: 1. ராமனின் வயது 41, கிருஷ்ணன் வயது 51, கோவிந்தன் வயது 61, கோபாலின் வயது 71.

2. திருடன் கதவின் வழியாகத்தான் உள்ளே நுழைந்தான். உலோபி கதவைப் பூட்டினதாக அந்தக் கதையில் சொல்லவேயில்லையே!



ஒவ்வொரு வாரமும் விருந்தில், மேலேயுள்ளதைப் போல ஒரு படம் — 'ஸ்டாம்ப்' மாதிரி — வெளிவரும். உலகில் வாழும் பல வேறு தேச மக்களை, அவர்களின் தேசிய உடையுடன் இந்தப் படங்களில் காணலாம். இந்த ஸ்டாம்புகளையெல்லாம் சேகரித்து ஒரு ஆல்பத்தில் ஒட்டிக்கொண்டு வாருங்கள்.

இவ் வாரத்திய ஸ்டாம்பில் காட்டியுளிப்பது நமது அண்டை நாடான நேப்பாள நாட்டின் பால்காரி. இதற்குத் தகுந்தபடி வர்ணம் தீட்டிப் பார். இன்னும் அழகாக இருக்கும்.

கண்ணுக்கினிய கிளி!

காஞ்சி அமிழ்தன்


சின்னச் சின்ன கிளிதான் — கொட்டைத்
தின்னும் அலகோ உளிதான்!
கண்ணுக் கினிய கிளிதான் — தொட்டுக்
குறும்பு செய்தால் புலிதான்!

அக்கா என்றே கத்தும் — கொஞ்சம்
அருகில் சென்றால் கொத்தும்!
சிக்கா தோடி ஒளியும் — பச்சைச்
சொக்கா பணிந்த கிளிதான்!

விண்ணில் பறந்தே கூடும் — பூனை
வருதல் கண்டால் ஓடும்!
உண்ணும் வாய்தான் செம்மை—கிளையில்
ஊஞ்ச லாடும் அம்மை!

கழுத்தில் தங்க ஆரம் — மேலே
காலால் பிடித்தே ஏறும்!
பழுத்த மிளகாய் மூக்கு — கூண்டில்
பறக்கத் துடிக்கும் போக்கு!

உலக விளையாட்டு - செவ்விந்தியர்களின் சோன ஆட்டம்




அமெரிக்காவில் வாழும் செவ்விந்தியர்களிடையே வழங்கும் விளையாட்டு இது. நாம் தாயக் கட்டைகளை உருட்டிச் சொக்கட்டான் விளையாடுவதில்லையா, அது போன்றது தான் இதுவும். ஆறு அங்குல நீளமும் ஓர் அங்குல அகலமும் உடைய இரண்டு குச்சிகளை எடுத்து, அதை இரண்டாகப் பிளந்து நான்காக்கிக் கொள்ள வேண்டும். வெட்டு வாயை வழவழப்பாக்கி அதில் படத்தில் காட்டியுள்ளபடி கோடுகளைக் கீறி 7, 2, 6, 3 என்ற இலக்கங்களையும் குறித்துக் கொள்.


இந்த விளையாட்டை இரண்டு பேர் விளையாடலாம். ஒவ்வொருவரும் தங்கள் காயாக ஓர் அடி நீளமுள்ள மெல்லிய குச்சி ஒன்றைத் தயார் செய்து கொள்ள வேண்டும். இனி, மண்தரையில் பத்தடி பக்கமுள்ள ஒரு சதுரத்தில் படத்தில் காட்டியுள்ளபடி வரிசையாகக் குழிகளைச் செய்து கொள்ளுங்கள் — அதாவது உங்கள் காய்களைக் குத்தி நிறுத்தி வைக்கும் அளவுக்கு. ஏ என்று குறிப்பிட்ட குழியில் ஒருவனும், பி-யில் ஒருவனும் தங்கள் காய்களை (குச்சிகளை) முதலில் இறக்க வேண்டும். இலக்கம் குறித்துள்ள காய்களை வீசி எறிந்து அது காட்டும் கணக்குப்படி குச்சிகளைக் குழிக்குக் குழி நகர்த்திப் போக வேண்டும். யார் முதலில் வட்டத்தைச் சுற்றி வருகிறார்களோ அவருக்கு வெற்றி. தாயக்கட்டான் போன்ற இதற்கு 'பிமா' குச்சிகள் என்று பெயர். குறிப்பிட்ட இந்த நான்கு குச்சிகளையும் — ஆகாயத்தில் தூக்கி எறிய வேண்டும். நான்கு குச்சிகளும் கவிழ்ந்து — குறிப்பிட்ட பகுதி கீழாக — விழுந்தால் எண்ணிக்கை பத்து. நான்கும் நிமிர்ந்து — குறிப்பிட்ட பகுதி — விழுந்தால் எண்ணிக்கை ஐந்து. இப்படி இல்லாமல் ஒன்றோ இரண்டோ கவிழ்ந்தும் நிமிர்ந்தும் விழுமானால் நிமிர்ந்துள்ள குச்சி காட்டும் எண்ணிக்கைப்படி கணக்கிட வேண்டும். ஏ, குறிப்பிட்ட இடத்திலிருந்து வலப்பக்கமாக வளைவின் வழியே வந்து திரும்பி, ஆரம்பித்த இடத்துக்குக் கீழே உள்ள பகுதியை அடைந்து அப்படியே அப்பிரதட்சிணமாகச் சதுரத்தைச் சுற்றி வரவேண்டும். பி. இடப் பக்கமாக வளைவின் வழியே வந்து திரும்பி அப்படியே சுற்றி வர வேண்டும். ஒரு குச்சி ஒரு குழியில் இருக்கும்போது எதிராளியின் குச்சியும் அந்தக் குழிக்கு வருமானால் முதலில் அங்கு இருந்தவன் வெட்டப்பட்டதாக அர்த்தம். அவன் குச்சி ஆரம்பித்த இடத்துக்கே போக வேண்டும். எதிராளியின் குச்சியுள்ள குழியைத் தாண்டும்படி எண்ணிக்கை விழுமானால் அப்போது எதிராளியின் காய்க்கு வெட்டு விழாது. ஆடிப் பாருங்கள்.

என்ன விநோதம் பார்!

ஒரு கயிற்றைத் தொளதொளப்பாகக் கட்டுங்கள். அதில் ஒரு சாக்பீஸை அழுத்தி உருவித் தேய்த்துக் கயிற்றை விறைப்பாக்குங்கள். ஒரு கண்ணாடிப் பாட்டிலை அந்தக் கயிற்றில் கீழே விழாமல் நிற்க வைக்கலாம். முடியுமா என்று திகைக்கிறீர்களல்லவா? முயன்றால் முடியாததுண்டா? உன் குடையை எடு. அதன் கைப்பிடியை அந்தப் பாட்டிலின் வாயில் நுழைத்துப் பொருத்து. படத்தில் காட்டியபடி. இப்போது அந்தக் குடையுடன் பாட்டிலைக் கயிற்றில் படுக்கவை. பாட்டில் கீழே விழாமல் சொகுசாகக் குந்தியிருக்கும்; பாட்டிலே நிற்குமா என்று சந்தேகப்பட்ட உனக்கு, அத்துடன் குடையும் சேர்ந்து நிற்கும் விந்தை வியப்பை அளிக்கும்.



இதேபோன்று, இன்னொரு சர்க்கஸ் வித்தை. நீ டீ குடிக்கும் 'கப்'பை ஆள்காட்டி விரலில் நிற்க வைப்பாயா? முடியாது. இல்லையா? இப்படியும் அப்படியும் ஆடும். கீழே விழுந்தால் சைனாக்கோப்பை தூள் தூளாகி விடும். இதோ நான் சொல்கிறபடி செய்து நிற்க வை. இரண்டு கத்திகளைக் கோப்பையின் கைப்பிடிக்குள், படத்தில் காட்டியுள்ளபடி, குறுக்காக நுழைய வை. கத்தி நழுவி விழாமலிருக்கக் காகிதத்தைச் சுருட்டி இடைவெளியில் செருகு. இப்போது கத்தி விழாது. இனி கோப்பையை அப்படியே — கத்தியுடன் — உன் ஆள் காட்டி விரலில் நிற்க வை. மேஜையின் மீது இருப்பதைப் போல உன் விரல் நுனியில் கோப்பை ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருக்கும் அதிசயத்தைக் காணலாம். கத்தியின் கைப்பிடி போதுமான கனமுடையதாக இருக்குமானால் உன் விரல் நுனியிலுள்ள கோப்பையில் சூடான டீயைக்கூட நிரப்பலாம்.



இந்த இரண்டு வித்தைகளும் எப்படி என்று தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறீர்களல்லவா? சமநிலை—சக்விலிபிரியம் — என்பதைப் பற்றி மேல் வகுப்பில் நீ படிக்கப் போகிறாய். அப்போது இந்த வித்தையின் தத்துவம் நன்றாகப் புரியும்.



காற்றின் கதை

காற்று என்பது என்ன? பல்வாயுக்களின் கலப்புதான் காற்று. பிராணவாயு 21 சதவீதம். நைட்ரஜன் வாயு, 78 சதவீதம் ஆர்கான், நியான், ஹிலியம், க்ரெப்டான், ஏனன் ஆகிய வாயுக்கள் 1 சதவீதம். இதுவே காற்று. இவை தவிர காற்றில் ஜலவாயு, கரியமல வாயு, நீராவி ஆகியவையும் கலந்திருக்கின்றன.

காற்றுக்கு நிறை உண்டா? உண்டு. ஒரு கன அடிக் காற்றின் நிறை ஒன்றே முக்கால் அவுன்ஸ். 15 அடி பக்கங்களையும் 9 அடி உயரமும் கொண்ட ஒரு சதுர அறையில் உள்ள காற்றின் நிறை 170 பவுண்டுகளாகும். உலகிலுள்ள காற்றின் மொத்த நிறை (படிக்க முடிந்தால் படிக்கலாம்) 11,000,000,000,000,000,000 பவுண்டுகளாகும்!

காற்றில் கலந்துள்ள வாயுக்களின் மிக நுண்ணிய பகுதிகள் சேர்ந்தே நாம் கூறும் காற்றாகிறது. இவைகளுக்கு 'மாலிக்யூல்ஸ்' என்று பெயர். இந்த மாலிக்யூல்கள், அங்குலத்தை 25 மில்லியன் பகுதிகளாக்கினால் எத்தனையோ அத்தனை சிறியவை. ஒரு கன அங்குல காற்றில் உள்ள மாலிக்யூல்கள் எத்தனை தெரியுமா? கூட்டிப் படிப்பது கொஞ்சம் கஷ்டம்! கூட்டிப் பாருங்கள். 420,000,000,000,000,000,000,000. இந்த மாலிக்யூல்கள் ஒன்றில் ஒன்று வெகுவேகமாகப் பிரயாணம் செய்யக் கூடியவை. இவைகளின் சாதாரண வேகம் என்ன தெரியுமா? ஒரு விநாடிக்கு 550 கெஜம். அதாவது மணிக்கு 1130 மைல்கள்; ஒவ்வொரு மாலிக்யூலும் மற்றதுடன் ஒரு விநாடிக்கு 50,000,000,000 தடவைகள் முட்டி மோதிக் கொள்ளுகின்றன.

இந்த மூளையைக் குழப்பும் கணக்குகளெல்லாம் மிதமான சீதோஷ்ணத்திலும் அழுத்தத்திலும் உள்ள காற்றுக்குத்தான்!

காற்றின் அழுத்தம் என்றால் என்ன?

உலகிலுள்ள ஒவ்வொரு பொருளின் மீதும் காற்று மோதும் வேகத்துக்குத்தான் காற்றின் அழுத்தம் என்று பெயர். ஒரு சுவரில் ஒரு சதுர அங்குல இடத்தில் காற்று என்ன வேகத்துடன் மோதுகிறதோ அதைக் காற்றின் வேகம் என்று கணக்கிடுகிறோம். காற்றின் அழுத்தத்தை அட்மோஸ்பியர் என்று கணக்கிடுகிறார்கள். அதாவது ஒரு சதுர அங்குலத்தில் காற்றழுத்தத்தின் அளவு பதினைந்கரைப்பவுண்டு. கடல் மட்டத்தில் காற்றின் சராசரி அழுத்தம் ஓர் அட்மோஸ்பியராகும்.


மனித உடலில் காற்று மோதும் பகுதி ஒரு சதுர கெஜத்துக்கும் அதிகமானது. அதாவது 1296 சதுர அங்குலங்கள். ஆகவே நம் உடலில் காற்றின் அழுத்தம் 18,800 பவுண்டுகளுக்கும் அதிகமாகும்.

உலகம் காற்றால் சூழப்பட்டிருக்கிறது என்பதுதான் உனக்குத் தெரியுமே. காற்றின் அடர்த்தி பூமி மட்டத்துக்கு மேல் மிக அதிகமாக இருக்கும். பூமியிலிருந்து மூன்றரை மைல்கள் உயரம் வரை மொத்தக் காற்றின் பாதி பாகம் நிறைந்திருக்கிறது. பன்னிரண்டரை மைல்கள் உயரம் வரைதான் காற்றின் சஞ்சாரமெல்லாம். 95 சத விகிதம் காற்று இந்தப் பிரதேசத்தில் இருக்கிறது. இன்னும் மேலே மேலே நாம் போவோமானால்—பூமியிலிருந்து 625 மைல்கள் மேலே — காற்றே கிடையாது. இத்தனை காற்றும் நம்மை அழுத்திக் கொண்டிருக்கிறது. காற்றுக் கடலின் அடியில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

இந்தக் காற்று இல்லாவிட்டால் உலகில் ஜீவராசியே இருக்காது. மரம் செடி, பருவங்கள், காற்று, மழை எதுவும் கிடையாது. நீல வானத்தையோ அந்திவானத்தையோ, செக்கர் வானத்தையோ காண முடியாது. காற்றில்லாவிடில் நெருப்பைப் பற்றி நினைக்க முடியுமா? சத்தமே இருக்காதே. காற்று தானே ஒலிகளைத் தாங்கி வந்து நம் காதுகளில் மோதும்படி செய்கிறது.

இது மட்டுமா? சூரியனின் உக்கிரமான கிரணங்களினால் நாம் கருகித் தீய்ந்து போகாமல் காப்பதும் இந்தக் காற்றுத்தான். சூரிய கிரணங்களின் வெம்மையை யெல்லாம் இந்தக் காற்று உறிஞ்சிக் கொள்ளாவிட்டால் பகல் வேளையின் உஷ்ண நிலை 230 பாரன் ஹீட்டுக்கும் மேலாக — கொதி நீரை விடச் சூடாக இருக்கும். இரவு வேளையிலோ குளிரினால் பல்லுக் கிட்டிப் போகாதிருக்க உதவுவதும் இந்தக் காற்றுத்தான். பகலில் சேமித்து வைத்துக் கொண்ட உஷ்ணத்தை இரவில் வெறும் வெளியில் அது சிதறி வீணாகாமல் சிறைப்பிடித்து வைத்துக் கொண்டு மெள்ள மெள்ள வெளிவிடுகிறது, இந்தக் காற்று. காற்றில் லாவிடில் இரவின் உஷ்ண நிலை—300 பாரன் ஹீட்டுக்கு அல்லவா போய் விடும்!

இப்படிக் காற்றின் பெருமையைப் பற்றி எவ்வளவோ சொல்லிக் கொண்டு போகலாம். இப்போதைக்கு இது போதுமே! ஒரே புழுக்கமாக இருக்கிறது. பையா — அந்த மின்சார விசிறியைக் கொஞ்சம் சுழல விடு!



ஆஹா...

என்னே ஆரோக்கியமளிக்கும் புத்துணர்ச்சி, கோலினுஸின் பாதுகாக்கும் நுரையிலே!

சுறுசுறுப்பாக வாழ்பவர்கள் கோலினுஸைத் தேர்ந்தெடுக்கிறர்கள்...ஏனெனில், நுரைக்கும் தன்மையுள்ள கோலினுஸ் மட்டுமே பற்சிதைவு மற்றும் வாய் நாற்றத்திலிருந்து இரவும் பகலும் பாதுகாப்பளிக்கிறது. ஆகையால் கோலினுஸ் சூப்பர் ஒயிட்டை உங்களுடைய பற்பசையென்று நிச்சயப்படுத்திக்கொள்ளுங்கள்.



தலைநிமிர்ந்த புன்சிரிப்பு–அது கோலினுஸின் புன்சிரிப்பு

அல்லது, வீரியமுள்ள குளோரோபில்லின் களிப்பூட்டும் புத்துணர்ச்சியை நீங்கள் விரும்பினால், கோலினுஸ் குளோரோபில் வேண்டுமென்று கேளுங்கள்.



பற்சிதைவைத் தடுக்கிறது. உங்கள் மூச்சிலே மணம் கமழச் செய்கிறது. உங்கள் பற்களை வெண்மையாக்குகிறது.

Registered User: GEOFFREY MANNERS & CO. LTD.





அத்தியாயம் 8

சொர்க்கத்தின் அரசி

வடிவேலுவிடம் வாக்களித்த பிரகாரமே சரியாக முப்பது நிமிஷங்களில் அவள் வந்து விட்டாள். விலையுயர்ந்த கவுனைக் களைந்து விட்டு வெளியே உலவி விட்டு வர ஏற்றதாகச் சாதாரணப் பருத்தி நூலாடை அணிந்திருந்தாள். அவள் மேனியின் உடுக்குப் போன்ற அமைப்பை அதிகரித்துக் காட்டும் வகையில் அகலமான பெல்ட் ஒன்று அவள் சிற்றிடையை இறுகச் சுற்றிச் சூழ்ந்திருந்தது. சின்னஞ் சிறிய சங்கின் வடிவத்தில் ஒரு காதணி அவளுக்கு அழகு செய்தது. கரங்களிலிருந்து தொங்கிய பை அசைந்தாட வனப்புடன் விளங்கும் கால்கள் விரைவாக நடந்து வந்து அவளை அவன் அருகில் கொண்டு சேர்த்தன.

''நான் இன்னும் முழுமையாகத்தான் இருக்கிறேன்'' என்றான் வடிவேலு, புகைத்துக் கொண்டிருந்த சிகரெட்டைத் தரையில் போட்டுப் பூட்ஸ் காலால் அதை அழுத்தி நசுக்கிய வாறே. ''ஆஸ்திரேலியர்கள் இது வரையில் என் கையைக் காலை முறித்துப் போட முயலவில்லை.''

அவனைச் சுற்றிலும் இருந்த பத்துப் பதினைந்து சிகரெட்டுத் துண்டுகளையும் பார்த்து விட்டு ஒரு முடிவுக்கு வந்தவளாக, ''அரை மணி நேரமும் இங்கேயே நின்று கொண்டிருப்பார்களா? எங்கேயாவது காலாற நடந்துவிட்டு வரக் கூடாது?'' என்று கேட்டபோது மலர்ந்த அவள் வதனம், அவன் அப்படி வேறு எதிலும் நாட்டம் கொள்ளாது அவன் வருகையையே எதிர்நோக்கிக் காத்திருந்ததில் அவள் சந்தோஷமே அடைந்தாள் என்பதைப் புலப்படுத்தியது.

"நாம் எங்கே போகிறோம்?" என்றான் வடிவேலு.

"எங்கே போக வேண்டும்?"

"எங்கு வேண்டுமானாலும் நாம் செல்லலாம்."

"அப்படியானால் என்னோடு வா" என்று கூறி விட்டு ஒவ்வோர் அடியையும் வேண்டா வெறுப்பாக எடுத்து வைப்பவன் போல் அவசரமின்றி மெல்ல நகர்ந்தாள் அவள். வடிவேலுவும் அவளுடைய அப்போதைய மன நிலையை அறிந்து கொண்டவனைக் கால்சராய் ஜேபிகளுக்குள் கைகளை நுழைத்த வாறு நேரத்தை வீணடித்துக் கொல்கிற மாதிரியாக நிதானமாக அவள் பக்கத்தில் நடந்தான்.

"தலைவலி என்றதும் சுலபமாக ஏமாந்து விட்டானா உன் முதலாளி?"

"அவனையா ஏய்க்க முடியும்? எனக்கு நீ கொடுத்த அவகாசத்தில் பாதிப் பொழுதுக்கு மேல் அவன் பிரசங்கத்தைக் கேட்டதிலேயே கழிந்து விட்டது, போ!"

"பிரசங்கமா?"

"ஆமாம். நீ ரொம்பப் பயங்கரமான மனிதனாம்! எங்கேயாவது பாங்கில் பகற்கொள்ளை அடித்து விட்டுச் சட்டத்துக்கும் சிறைவாசத்துக்கும் அஞ்சி, பணத்தைப் பத்திரமாகக் குழி தோண்டிப் புதைத்து வைத்து விட்டுத் தலைமறைவாகத் திரியவென்று பட்டாளத்தில் சேர்ந்து சிங்கப்பூருக்கு வந்திருக்கக் கூடியவனாம்! முரட்டுத்தனமாக நீ நடந்து கொள்கிற விதத்தைப் பார்த்தால் அப்படித்தான் தோன்றுகிறதாம்! அத்தகைய ஒருவனுடன் சகவாசமே வைத்துக் கொள்ளக் கூடாதாம்!"

"அந்தத் தடியனுடைய பஞ்சுப் பொதி வயிற்றை ஒரு நாள் இல்லையானால் ஒரு நாள் ஓங்கிக் குத்திப் பதம் பார்க்கத்தான் போகிறேன். அது சரி, என்னைச் சந்திக்கப் போவதாக நீ அவனிடம் சொன்னாயா, என்ன?"

"இரண்டும் இரண்டும் நாலு என்ற தீர்மானத்துக்கு வர யாருக்குத் தெரியாது? அவன் விடுதிக்கு நீ கெட்ட பெயர் வாங்கிக் கொடுத்ததால் ஷை ஹவாங் டைக்கு உன் மீது அளவற்ற கோபம். ரொம்பவும் நியாயம்தானே?"


"இதென்ன அபாண்டம்? கெட்ட பெயரை நான் தேடித் தந்தேனா? நற்சாட்சிப் பத்திரத்தை அது ஏற்கனவே பெற்றிருந்ததா? யாரிடமிருந்து....?"

" 'சர்டிபிகேட்' யாரும் தராவிட்டாலும் அந்த இடத்தில் அமைதி நிலவும் என்ற நம்பிக்கை பரவலாக இருந்து வந்தது நிச்சயம். அதை நீ தகர்த்து விட்டாய். இன்னும் ஒரு முறை அங்கே ஏதேனும் கலாட்டா நடைபெற்றால் போதும்; விடுதியை மூடி 'ஸீல்' கூட வைத்து விடுவார்கள் அதிகாரிகள். இப்போதே தினம் இரண்டு தடவைகளாவது ராணுவப் போலீஸார் அந்தப் பகுதிக்கு விஜயம் செய்யாமல் இருப்பதில்லை. கிளப்பின் உள்ளேயும் நுழைந்து கண்காணித்து விட்டுத் திரும்புகிறார்கள். இது இப்படியே நீடித்தால் சிப்பாய்கள் அங்கு வருவதற்கு யோசிக்க மாட்டார்களா? வியாபாரம் படுத்து விடாதா?"

"பயமின்றித் தயங்காமல் வருகிறவர்களையும் இவன் தோல் பழுப்பு, அவன் தோல் கறுப்பு என்று காரணம் காட்டி வெளியே துரத்தி விடுகிறீர்கள்! ஆங்கிலேயர்கள்தான் இந்த விஷயத்தில் தீவிரவாதிகள் என்று எண்ணியிருந்தேன். சீனர்கள் அவர்களையும் இப்பொழுது மிஞ்சி விடுவார்கள் போலிருக்கிறதே!"

"மலாயாவிலுள்ள இந்தியர்களைத் துச்சமாகக் கருதுவதில் வெள்ளையர்களுக்குச் சீனர்கள் லவலேசமும் குறைந்தவர்களல்ல என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதில் இன வேறுபாட்டைக் காட்டிலும் பண வேறுபாடு தான் அதிகப் பங்கு வகிக்கிறது!"

"சிவராமன் பணத்தைத் தாராளமாகத் தளர்த்தியவர்களுள் ஒருவனோ?"



''ஆமாம். ஆனால் ஷை றவாங்டை உன்னிடம் நடந்து கொண்ட விதத்துக்கு இன்னோர் உள் நோக்கமும் உண்டு.''

''என்ன அது?''

''பிரிட்டிஷ் ஆஸ்திரேலிய வீரர்களும் சேனாதிபதிகளும் வருகை தந்து சிறப்பிக்கும் தன் மது விடுதியில் அவர்கள் கறுப்பு இந்தியர்களையும் அடிக்கடி காண நேர்ந்தால் அருவருப்படைவார்கள். விடுதிக்குத் தாங்கள் இது வரையில் அளித்து வந்த ஆதரவை நிறுத்தி விடுவார்கள். இதற்காகத் தான் அஞ்சுகிறான் முதலாளி.''

''எத்தனை குழப்பங்கள்?'' என்று கூறி விட்டு, மக்களின் பைத்தியக்காரத்தனமான மனோபாவங்களை நினைத்துச் சிரித்தான் வடிவேலு.

''இங்கேயுள்ள சீனச் சமூகம் விந்தையான தொன்று'' என்றாள் அவள். ''தங்களுடைய தொன்மையான பண்பாட்டையும் உன்னதமான நாகரிகத்தையும் பற்றி மார்தட்டுவார்கள். மலாய்க்காரர்களைக் காட்டிலும் இந்த வகையில் தாங்கள் மிகவும் உயர்ந்தவர்கள் என்று பெருமையடித்துக் கொள்வார்கள். மண்டைக் கர்வத்தினால் மற்றவர்களை மட்டம் தட்டுவதுடன் மலாய்க்காரர்களைச் சோம்பேறிகள் என்று குறிப்பிட்டு அலட்சியப்படுத்தவும் செய்வார்கள். தங்களுடைய பழைமையான கலாசாரம் பற்றி இத்தனை தூரம் பேசுபவர்கள் அமெரிக்கப் பாணியில் நடையுடை பாவனைகளை மாற்றிக் கொள்வார்கள். மொத்தத்தில் நாமெல்லாரும் 'மலாயா வாழ்மக்கள்' என்ற ஒருமைப்பாடு என்று ஏற்படுமோ இந்த ஜனங்களிடையில்?''

''ஜப்பானிய யுத்தம் மூண்டால் எத்தனையோ தீமைகள் உண்டானாலும் பல்வேறுபட்ட மக்களையும் ஒருமைப்படுத்துகிற ஒரு நன்மையாவது விளையாமல் போகாது. பொதுவான ஓர் அபாயம் அவர்கள் அனைவரையும் அணுகும்போது இந்த நல்ல சூழ்நிலையை உருவாக்கும்.''

வருத்தத்தோடு தலையசைத்தாள், அவனெதிரே இருந்த சீனக்காரி. ''இவர்களை நீ இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. ஜப்பானியர்கள் வந்து விட்டார்களென்றால் தேசிய எதிர்ப்பு திரண்டெழப் போவதில்லை. மலாய் நாட்டின் பெரிய சாபக்கேடு அது தான்! எவருக்குமே அந்தப் போரில் சிரத்தை இருக்காது. யாரோ யாருடனேயோ சண்டை போடுவதற்குத் தன் நாடு யுத்தகளமாகப் பயன்படப் போகிறது என்று மலாய்க்காரன் எண்ணுகிறான். வல்லரசுகள் பலப் பரீட்சை நடத்தத் தன் தாய்நாட்டைத் தேர்ந்தெடுத்தால் அவன் இருவரையுமே வெறுப்பான். எப்படியோ முட்டி மோதிக் கொள்ளுங்கள் என்று விட்டு அவன் அப்பால் போய் விடுவான். இந்தியனோ தனக்கு இந்தப் போராட்டத்தில் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று ஒதுங்கிவிடப் போகிறான். அவன் தாய்நாடு இல்லை இது. இதை ஜப்பானியன் கைப்பற்றினால் என்ன? ஆங்கிலேயன் ஆண்டால் அவனுக்கென்ன? பிரிட்டிஷாருக்கும் உள்ளபடி இந்தத் தீபகர்ப்பத்தை உயிரைக் கொடுத்தாகிலும் கட்டிக் காக்க வேண்டும் என்கிற தீவிர எண்ணமில்லை. இங்கிலாந்தை நெருங்குகிற ஜெர்மானியனையும் மலாயாவை மிரட்டுகிற ஜப்பானியனையும் ஓரே கண் கொண்டு ஏற்றத் தாழ்வில்லாமல் பார்ப்பது சாத்தியமாகுமா அவனுக்கு? அனுபவித்த வரையில் லாபம் என்று கடைசி விநாடி வரையில் தாக்குப் பிடித்து விட்டுக் கப்பலேறி விடுவான். உண்மையில் இந்தத் தேசத்துக்கு விமோசனம் சீனர்களின் கையிலேதான் இருக்கிறது. கடந்த பத்து வருஷங்களாகவே சீனர்களுக்கும் ஜப்பானியர்களுக்கும் இடையில் பகைமை புகைந்து கொண்டிருக்கிறது. சென்ற மூன்று வருஷங்களாக அவர்கள் பரம வைரிகளாக மாறியிருக்கிறார்கள். சீனாவில் எங்கள் சகோதர சகோதரிகளை ஜப்பானியர் கொன்று குவித்துக் கொடூரமாக நடந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே ஜப்பானிய ஆக்கிரமிப்பை முழுமூச்சுடன் எதிர்த்து நாட்டைக் காக்கக் கூடியவர்கள் இங்குள்ள சீனர்களாகிய நாங்கள்தான். ஆனால் துரதிர்ஷ்டவசமாக ஆளும் வர்க்கத்தினர் — ஆங்கிலேயர் — எங்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள மறுக்கிறார்கள்.''

''ஏன் எங்களை யெல்லாம் பார்த்தால் வீரர்களாய்த் தோன்றவில்லையா உனக்கு?'' என்று கேட்டான் வடிவேலு சற்றுக் கோபத்துடன்.

''இந்தியாவிலிருந்து முஸ்லிம்களையும், பஞ்சாபிகளையும், மலையாளிகளையும், கூர்க்காக்களையும், தமிழர்களையும் ஏராளமாக இங்கே இறக்குமதி செய்திருக்கிறார்கள். இந்தியா மட்டுமென்ன? இங்கிலாந்து, ஸ்காட்லந்து, ஹாலந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளிலிருந்தெல்லாம் சிப்பாய்களைக் கொண்டு வந்து குவித்தும் புண்ணியமென்ன? கூலிக்குத் துப்பாக்கி தூக்குகிறவனுக்கும் தாய்நாட்டின் மானம்

உங்கள் கூந்தலின் உண்மை அழகை வெளிப்படுத்த

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் உபயோகியுங்கள்

உங்களுக்குப் பிடித்தமான
கூந்தல் அலங்கரிப்பு எதுவாயினும்,
கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலைத்
தவறாமல் தேய்த்து வருவது
கூந்தல் அடர்த்தியாக அழகுடன்
வளர்வதற்கு இன்றியமையாதது!

தினந்தோறும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயிலை மயிர்க்காலிலும், கேசத்திலும் தேய்த்துக் கொள்வது லக்ஷக்கணக்கான குடும்பங்களில் இப்பொழுது குளிக்குமுன் செய்யும் அவசியமான பழக்கமாகிவிட்டது. இவ்வெளிய பழக்கத்தினால் உங்கள் கூந்தல் அடர்த்தியாக நீண்டு பளபளப்புடன் வளருவதுடன், இளமைத் துடிப்பின் காந்தியோடும் அற்புத ஜ்வலிப்போடும் விளங்குவதைக்கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள்.



எல்லோரும் அதிசயிக்கும்
வண்ணம் உங்கள் கூந்தலின்
உண்மையழகை வெளிப்படுத்த
கால்கேட் உதவுகிறது.



மகிழ்ச்சிதரும் நறுமணம்
உங்கள் குடும்பம் முழுவதும் அதை விரும்பும்!

கால்கேட்

பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்

ECHO-G.4.TAM.

காக்கத் துள்ளி எழுகிறவனுக்குமிடையில் வித்தியாசமில்லையா?''

அசைக்க முடியாத வாதங்களைச் செவியுற்றுத் திணறினன் வடிவேலு. இருந்தாலும் அவள் கூற்றை அப்படியே ஒப்புக்கொள்ள விருப்பமின்றி,''ஏதேது? நீயே ஜப்பானியனைக் கையைப் பிடித்து அழைத்து வந்து, 'இந்தா அப்பா மலாய் நாடு! எடுத்துக் கொள்!' என்பாய் போலிருக்கிறதே !'' என்றான்.

''நான் அவ்வாறு செய்ய வேண்டியதே இல்லை. பாராளும் வேந்தனுக்கு வெள்ளித் தட்டில் சன்மானம் வைத்து அளித்து அடிபணியும் சிற்றரசனைப் போல் வெள்ளைக்காரன் மலாய் நாட்டையே ஜப்பானியனுக்குப் பாத காணிக்கையாகச் செலுத்தப் போகிறான், பார்! நான் இங்குள்ள வீரர்களின் மன உறுதியையோ, போர்த் திறனையோ குறை கூறுவதாக எண்ணாதே வடிவேலு! அன்னியனின் ஆணவம் மிக்க படையெடுப்பை முளையிலேயே கிள்ளி எறிய உன் போன்ற தீரர்கள் மட்டும் இருந்தால் போதாது. பின்னணியில் தேச மக்கள் அனைவரும் ஒன்றாய்ப் பொங்கி எழுந்து முன்னணியில் உள்ள சிப்பாய்களுக்குப் பக்கபலமாய்ப் பல ஆக்க வேலைகளில் ஈடுபட வேண்டியிருக்கும். வயிறு நிறைய உண்ண உணவு முதல் உயிரைக் குடிக்கக் குண்டுகள் வரையில் உற்பத்தியை ஏராளமாய்ப் பெருக்க வேண்டியிருக்கும். இன்னும் பலப்பல விதங்களில் மக்களின் ஒத்துழைப்பு இன்றி ராணுவத்தினரால் மட்டும் எதையும் சாதித்து விட முடியாது!''

காலார நடந்தவாறே நீலத் திரைக் கடலை ஒட்டினாற் போல் அமைந்திருந்த எஸ்பிளனேடு பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள். இந்தத் திறந்தவெளியில் பூந்தோட்டங்களுக்கு மத்தியில், பசும் புல் தரையில் விச்ராந்தியாக அமர்ந்தார்கள். திடீர்த் தாக்குதல்கள் நேரலாமோ என்பதால் முன்னெச்சரிக்கையாகச் சிங்கப்பூர் நகரில் உள்ள தெரு விளக்குகளின் பிரகாசத்தைக் கணிசமாகக் குறைத்திருந்தனர் அதிகாரிகள். சின ஏ. ஆர். பி. வார்டன்களின் உதவியுடன் அவ்வப்போது விளக்கு அணைப்பு ஒத்திகைகளும் நடைபெற்று வந்தன. ஆகவே ஜகஜ்ஜோதியாக விளங்க வேண்டிய நகரின் பிரதானமான, மனோரம்மியமான அந்த எஸ்பிளனேடு வட்டாரம் அழுது வடிவதுபோல்தான் தோன்றியிருக்கும் வடிவேலுவுக்கு, நிலா மட்டும் இல்லாதிருந்திருந்தால். மனிதன் இருட்டடிப்பு செய்ய முயன்று பயன் என்ன? முழுமதி அவனுடன் இணைசேர மறுத்தது. மேகங்களே இல்லாத நிர்மலமான நீல வானத்திலிருந்து கொண்டு அது குளிர் நிலவைப் பொழிந்து எல்லாப் பொருள்களுக்கும் வெள்ளி முலாம் பூசி, புது மெருகுடன் பொலியச் செய்தது. அவ்வாறு இருந்த போதிலும்கூட, தூரத்தில் வானை அளாவ எண்ணி எட்டாமல் போனதால் ஏக்கத்துடன் நெட்டுயிர்ப்பது போன்ற கட்டடங்களையும், இப்பால் தன் சிற்றலைகளுக்கு மனிதன் போட்ட கல்லணை மீது முட்டி மோதி அலுத்துச் சலித்து விட்ட கடலையும் மணம் பரப்பி முடிந்து களைத்து இரவின் மோகன மயக்கத்தில் கட்டுண்டு கிடக்கும் மலர்களையும் பார்த்தபோது வடிவேலுவின் மனத்திலும் சோர்வு குடிகொண்டது. சமுத்திரத்தினிடமிருந்து பெற்ற சிலுசிலுப்புடன் அவனைச் சூழ்ந்த காற்று இதமளிக்கவில்லை; விரைவாக நெருங்கி வந்து கொண்டிருக்கும் இன்னல்களைப் பற்றிய மௌனமான முன்னறிவிப்பைத் தாங்கி வந்து அவனுக்கு உணர்த்தியது போல் இதயத்தையே நடுங்க வைத்தது. ''குண்டு மழை பொழிவதற்கு ஏற்ற, விமானிக்கு மிகவும் வசதியான, ஓர் இரவு இது'' என்றான் வடிவேலு.

அவள் மேனி சிலிர்த்தது. தன்னுடைய கவுனின் அகன்ற பெரிய 'காலரை'த் தூக்கி விட்டுக் காதுகளைக் குளிர் காற்றினிடமிருந்து மறைத்துக் கொண்டாள். ''ஷை ஹவாங் டை இந்த இடத்துக்கு வர வேண்டுமென்றுலே அலறுவான்!'' என்றாள். அவள் அப்போது சிரித்தது இயல்பாக அமையாமல் நேரவிருந்த துன்பத்தை மறந்து விட யத்தனித்துச் சிரமப்பட்டு வரவழைத்துக் கொண்ட நகைப்பாகவே தோன்றியது.

''ஏன்?'' என்று கேட்டு வைத்தான் வடிவேலு.

''சீதோஷ்ண நிலைகளை முன் கூட்டியே ஆராய்ந்து கூறும் ஸ்தாபனங்களைத் தெரியுமல்லவா உனக்கு?''

''நன்றாகத் தெரியும்! அவர்கள் மழை பெய்யும் என்று அறிக்கை விட்டால் நிச்சயமாக வெய்யில் காயும் என்று எதிர்பார்க்கலாம்.''

''என்னுடைய முதலாளிக்கு நல்ல சம்பளம் கொடுத்து அங்கே மேற்பார்வையாளனாக அமர்த்தினால் ஒரு சின்னத் தவறுகூட ஏற்படுவதற்கு அனுமதிக்க மாட்டான்!''

''அப்படியா? அந்த விஞ்ஞானத் துறையில் நிபுணனா அவன்?''

''விஞ்ஞானியுமில்லை, நிபுணனும் இல்லை. அவனுக்கு ஆஸ்துமா உண்டு.

சீதோஷ்ண நிலைகளில் உண்டாகிற வேறுபாடுகளுக்கு ஏற்ப அவன் அவதி உக்கிரமடையும், தணியும். இன்று இரவு மழை கொட்டப் போகிறது என்று சொல்லி விட்டு அதனால் தன் தேகத்தில் நிகழப் போகிற பின் விளைவுகளைச் சமாளிக்க நாலைந்து மாத்திரைகளையும் சிவப்பு, பச்சை என்று பலவித வர்ணங்களில் ஏழெட்டு ஸ்பூன் மருந்துகளையும் விழுங்கி வைப்பான். அவன் வாக்குப் பொய்க்காது! இருமலும் இழுப்பும் அவனை அவஸ்தைக்குள்ளாக்காமலும் போகாது!—எதற்காகத்தான் அவன் வேளை தப்பாமல் இப்படி மருந்துகளைச் சாப்பிடுகிறானோ, பாவம்!''

''ஓ! சில்லென்ற கடற்கரைக் காற்று ஒத்துக் கொள்ளாது என்பதால் இங்கே வருவதென்றாலே தயங்குவானு ஹை...? அவன் பெயர் என்னவென்றாய்?''

''ஹை ஹுவாங் டை!''

''யாருக்கு அக்கறை, அவனை எப்படி அழைப்பது என்பதில்? இத்தனை நேரமாகப் பேசிக் கொண்டிருந்தும் உன் பெயரைக் கேட்டறியவில்லையே நான்? அதைச் சொல்லு முதலில்!''

''என் பெயரை உச்சரிப்பதும் கஷ்டமாகத்தான் இருக்கும் உனக்கு!''

''அதனால் பரவாயில்லை, சொல்லேன்!'' என்றான் வடிவேலு.

''டையென் ஹொ கங்.''

''டையென்... ஹொ .. கங்! அப்படியென்றால்?''

''சொர்க்கத்தின் அரசி என்று அர்த்தம்!'' அவள் முகம் இலேசாகச் சிவப்பதை நிலவொளியில்தான் கண்டானென்றாலும் துல்லியமாகக் காண முடிந்தது வடிவேலுவினால்.

''சொர்க்கத்தின் அரசி! அடேயப்பா!'' என்றான் அவன். ''மிகவும் அழகான பெயர்தான்!''

''போக்கிரித்தனத்தைப் பார்!'' என்று படபடத்துப் பாய்ந்தாள் அவள். ''அழகான பெயர்தான் என்கிறாயே? பெயர் மட்டும்தான் அழகாயிருக்கிறதோ?'' என்று எரிந்து விழுவது போல் கேட்டு விட்டு முகத்தைத் தூக்கிக் கொண்டாள் டையென்.

அத்தியாயம் 9

வசீகரித்த விழிகள்

அவளைச் சமாதானப்படுத்துவதென்பது இலேசுப்பட்ட காரியமாக இல்லை. அதைக் காட்டிலும் சர்ச்சிலையும் ஹிட்லரையும் சமாதானக் கொடிகளைத் தாங்கியபடி ஒருவரையொருவர் நெருங்கச் செய்வது சுலபமானதாக இருக்குமென்று பட்டது அவனுக்கு. அலுத்துவிட்டவனாக அவன் கூறினான்: ''அடிக்கடி பொல்லாத கோபம் பொத்துக்கொண்டு வருகிறதே உனக்கு? ஆனாலும் இத்தனை முன்கோபம் ஒரு பெண்ணுக்கு உதவாது. உன்னை நான் இது வரையில் இரண்டு தினங்களில்தான் சந்தித்திருக்கிறேன். இரண்டு நாட்களுக்குள் இரண்டு தடவைகளில் எனக்கு நீ முட்டாள் பட்டம் கட்டியிருக்கிறாய்! உனக்கே இது அடுக்குமா, சொல்லு!''

''ஆத்திரப்படாமல் என்ன செய்ய? முன்பின் அறிமுகமில்லாத என்னை நீ காப்பாற்றத் துணிந்தால் எனக்கு அப்படித்தான் கோபம் வரும்!''

''ஆபத்தில் சிக்குண்டவளாக உன்னைக் கருத இடம் இருந்தது; அதனால் உன்னைத் தப்புவிக்கத் தீர்மானித்தேன். அது அவ்வளவு பெரிய குற்றமா என்ன?''

''தவறுதான்! யாராலுமே என்னைக் காப்பாற்ற முடியாது என்பதைப் புரிந்து கொள்ளுவதற்கு முன்பாக அவசரப்பட்டு எனக்குச் சகாயம் அளிக்க நினைத்தது வடிகட்டின முட்டாள்தனம் தான்!''

''டையென்! நீ புதிர் போடுகிறாய்!'' என்ற போதே வடிவேலுவுக்குச் சகலமும் விளங்கி விட்டது. ஆரம்பம் முதல் ஓரளவுக்கு இதை எதிர்பார்த்துத்தான் இருந்தான் அவன். என்றாலும் அவளைக் குறித்துத் தான் செய்து கொண்ட முடிவு பிசகாக இருக்கக் கூடாதா என்ற நப்பாசை அவனுக்கு. ''ஒரு வாரத்துக்கு முன்னால் நீ என்ன சொன்னாய்? யோசித்துப் பார்! என்னைக் கவனித்துக் கொள்ள எனக்குத் தெரியும், யாருடைய தயவும் உபகாரமும் எனக்குத் தேவையில்லை என்பதுபோல் தன்னம்பிக்கையுடன் பேசவில்லையா...?''

''இன்றைக்கும் நெஞ்சழுத்தத்துக்கு ஒன்றும் குறைவில்லை. அன்று கூறியது இன்றைக்கும் பொருந்தும், மனிதர்கள் சம்பந்தப்பட்ட வரையில். ஆனால் இப்போது நான் யாராலுமே என்னைக் காப்பாற்ற முடியாது என்



னும்போது கடவுளை மனத்தில் கொண்டு சொல்லுகிறேன். ஆண்டவனிடமிருந்து, அவன் எனக்குத் தரப் போகும் தண்டனையிலிருந்து 'யாராலுமே என்னை மீட்க முடியாது!''

''பிரார்த்தனை? அது உன்னைக் கைவிடாது என்கிற நம்பிக்கை இல்லையா உனக்கு?'' என்று வினவினான் வடிவேலு.

''புத்தபிரானிடம் இரக்கம் காட்டுமாறு நான் இறைஞ்சிக் கேட்கவில்லை. அப்படிக் கெஞ்சுவதினால் லவலேசமாவது பிரயோஜனம் உண்டா இல்லையா; கருணாமூர்த்தியான அவருக்கு என்னிடத்தில் மனமிரங்குமா என்பதை யெல்லாம் நான்

எண்ணிப் பார்த்ததில்லை. எனக்கு அதில் அக்கறையும் இல்லை. எத்தனையோ கொடிய மனிதமிருகங்களை ஆண்டவன் உலவ விட்டிருக்கிறானே இந்த உலகில் என்ற தைரியத்தில் தனிச் சலுகை கோராது கவலையற்று இருக்கிறேன்.''

அவளிடத்தில் விசனத்தின் சாயலைக்கூடக் காணாது திகைத்தான் வடிவேலு. ஆகவே ஆறுதல் அளிக்கும் வகையில் ஏதாகிலும் சொல்வோமா, வேண்டாமா என்றே அவனால் அனுமானிக்க முடியவில்லை.

சற்றும் கலங்காமல் 'கணீர்' என்ற குரலில் கூறிக் கொண்டே போனாள் டையென்: ''நீரில் நீந்திக் கொண்டிருக்கிற ஒரு மீனை அதன் இயல்பு அறியாமல் மூழ்கிக் கொண்டிருப்பதாக நினைத்துத் தப்புவிக்க முயன்ற உன் அசட்டுத்தனத்தைப் பற்றித்தான் விடுதிக்கு வருவோர் போவோரெல்லாம் கடந்த ஏழு நாட்களாகவே பேசிக் கொண்டிருக்கிறார்கள். என் முதுகு திரும்பியதும் — ஆனால் காதில் விழுகிற மாதிரியாகத்தான் — சாக்கடையில் புரளும் பன்றியோடும் ஒப்பிடுகிறார்கள்.''

வடிவேலு உருக்கமாக அவளை நோக்கினான்.

''என்னத்தைத் தேடுகிறாய் என் முகத்தில்? நான் கண்ணீர் உருக்கவில்லையே என்று ஏமாற்றமாகவும் அதிசயமாகவும் இருக்கிறதில்லையா உனக்கு? என் கண்ணீர் ஊற்றுக்கள் வறண்டு நீண்ட காலமாகிறது!''

பெருமூச்சுடன், ''ராணுவப் போலீஸாரிடம் அகப்பட்டு, ரகளையைக் கிளப்பியதற்காகத் தண்டனை அடையாமல் போனோமே என்று சந்தோஷப் பட்டுக் கொண்டிருந்தேன். அதற்கு ஈடு செய்வது போல் நீ உன்னைப் பற்றிய வேதனை அளிக்கும் உண்மைகளை வெளியிட்டு என்னைத் தண்டித்து விட்டாய்'' என்றான் வடிவேலு. ''டையென்! நீ இதையெல்லாம் என்னிடத்தில் சொல்லாமலே இருந்திருக்கக் கூடாதா? இந்தத் துன்பத்தை எனக்குத் தருவதைத் தவிர்த்திருக்கக் கூடாதா நீ?''

சிறிது நேரம் அமைதியாக இருந்து மூளைக்கு வேலை கொடுத்த பிறகு அவன் பேசினான் என்பதை உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்த டையென், ''கஷ்டப்பட்டு நடிக்காதே!'' என்றாள்.

திடுக்கிட்டான் வடிவேலு. ''டையென்! அனுதாபத்தை ஏற்றுக் கொள்ளக்கூடப் பிடிக்காத அளவுக்கு உன் மனம் கசந்து போயிருக்கிறதா?''

''இந்த உலகத்தில் மனிதர்களுக்கு அடுத்தபடியாக நான் மிகவும் வெறுப்பது அவர்கள் என்னிடம் காட்டுகிற பச்சாத்தாபத்தை!''

''நான் உனக்காகப் பரிதாபப்படவில்லை; உன்னை இந்தக் கீழ்நிலைக்குக் கொண்டு வந்து தள்ளியிருக்கும் பதர்களுக்காக நான் மனத்துக்குள் இரங்கி அழுகிறேன்!''

''நாடகத்தைத் தொடங்குகிறாயே மறுபடியும்! தன்னைப் பரம யோக்கியனாகப் பாவித்துக் கொண்டு பிறருடைய பாபங்களுக்காகக் கண்ணீர் வடிப்பவனிடம் எனக்கு எப்போதுமே சந்தேகம்தான்!''

''வெறியர்களுடனேயே பழகிப் பழகி உன் மூளை மரத்து விட்டது. நல்ல மனிதர்களும் உலகில் இருப்பார்கள் என்று ஒப்புக் கொள்ளவே மாட்டேனென்கிறது உன் அறிவு. ஆனால் உன் மனம் இதற்கு உடன்படாமல் புரட்சி செய்கிறது.''

''ஜோசியமா? சொல்லு!''

''உன் செயல்கள் என்னுடைய கூற்றை நிரூபிக்கின்றன டையென்! நிகழ்ச்சிகளைத் தர்க்க ரீதியாக அலசியதில் நீ திட்டுவதற்கு இடமளிக்கும் வகையில் நான் நடந்து கொண்டதாக உறுதியாக எண்ணினாய். ஆனால் உன் உள்ளம் வேறு விதமாகச் சம்பவங்களை எடை போட்டது. பெண்ணொருத்தியை ஆபத்து அணுகுவது கண்டு சிரிப்பதற்குப் பதில் சீறி எழுகின்ற ஒரு மனிதனைச் சந்தித்து விட்டதில் உன் உள்ளம் ஆனந்தமடைந்தது. இல்லையா? பெண்மையைப் பரிகசித்துப் பசி தீர்க்கப் பயன்படுத்திக்கொள்ளப் பறக்காமல் அதனைப் போற்றுகிற ஓர் ஆடவனைப் பார்த்ததில் உன் இதயம் திருப்தியுற்றது. அதனால் தானே அந்த மனிதனை விட்டுக் கொடுக்காமல் ஒரு தடவைக்கு இரண்டு தடவைகளில் ராணுவப் போலீஸாரிடமிருந்து தப்புவித்தாய்? அவனிடம் சிநேகம் பாராட்டி இத்தனை நேரமாக உறவாடிக் கொண்டிருக்கிறாய்?''

''ரொம்பவும் தற்பெருமை அடித்துக் கொள்ளாதே! உன்னை நீயே அவ்வளவு உயர்ந்த நிலையில் ஏற்றி வைத்துக் கொண்டதற்காகப் பின்னால் வருத்தப்பட நேரிடும்.''

'குபுக்'கென்று எழுந்து விட்டான் வடிவேலு. ''என்னை என்ன மானமில்லாதவன் என்று மதித்து விட்டாயா நீ? மனித குலத்தின் மீது இத்தனை வன்மம் கொண்டுள்ள உனக்குக் கதிமோட்சமே இல்லை! நான் வருகிறேன்'' என்றான்.

சட்டென்று மண்டியிட்டு அமர்ந்து அவன் கரத்தைப் பற்றினாள் அவள்.

அவனை ஏறிட்டு நோக்கி, "ஒரு வார்த்தைகூட நான் தவறாகச் சொல்லி விட்டதாக ஒப்புக் கொள்ளவே மாட்டேன். ஆனால் அதே சமயத்தில் உன்னை எனக்குப் பிடித்திருக்கிறது என்பதை ஒளிக்கவும் நான் ஆசைப்படவில்லை. நான் உன்னிடத்தில் கேட்டுக் கொள்வதெல்லாம் இதுதான்: மிகுந்த பிரயாசைப்பட்டு நான் என் மனத்தைக் கடினமாக்கிக் கொண்டிருக்கிறேன். என் இதயத்தை இளக வைக்காதே! ஈரமான நெஞ்சம் இந்தச் சூழ்நிலைக்கு—இந்த நகரம், அதன் மக்கள், யுத்த காலம் இவற்றினிடையே நடமாடும் எனக்கு—ஏற்றதல்ல!" பற்றிய கரத்தை விடாமலே அவள் தொடர்ந்தாள்: "இப்போது நீ போய் வருவதை நான் தடை செய்யவில்லை. ஆனால் மறுபடியும் என்னை எட்டிப் பாராமலே இருந்து விடாதே. உன் நட்பை நான் அடியோடு இழந்துவிட விரும்பவில்லை" என்று வேண்டிக் கொண்டபோது மெல்லிய நிலாக்கதிர் ஒன்று அவனுடைய வலது நயனத்தில் புகுந்து விளையாடி ஜொலிப்புக்களைச் சிதறியதிலிருந்து அவள் கண்களில் நீர் திரையிட்டிருப்பதை வடிவேலுவினால் ஊகிக்க முடிந்தது.

ஃ ஃ ஃ

அவள் கோரிக்கைக் கிணங்க ஒரு நாள் அவள் வீடு தேடிச் சென்றான் வடிவேலு.

கதவு திறந்துகொண்டதும், "ராணி இருக்கிறாளா இங்கே?" என்று அவளுக்குப் புரியாத தமிழ் மொழியில் வேடிக்கையாக வினவியபடியே நுழைந்த அவன், பிரமித்து நின்று விட்டான். 'சில தினங்களுக்கு முன்னால் நான் பார்த்த அதே டையென்தானா இவள்? நம்ப முடியவில்லையே! அமெரிக்க நாகரிகத்தில் மூழ்கியிருந்தவள் அசல் சீனக்காரியாக மாறி அதிசயத்தில் ஆழ்த்துகிறாளே!' உடலையும் கைகளையும் மூடித் தொளதொளவென்று தொங்கும் ஒரு மேலங்கி; முழங்கால் அளவுக்குத் தாராளமாகவும் அதன் கீழே பிடிப்பாகவும் தைக்கப்பட்டிருந்த கால் சராய், கழுத்தைச் சுற்றிப் போடப்பட்டிருந்த சிறு துண்டு — இவை புராதன சீனப் பாணியில் அமைந்திருந்தன. கத்திரித்து விடப்பட்ட கேசமும் சௌகரியமான செருப்புக்களில் புகுந்து கொண்டிருந்த பாதங்களும் மட்டிலும் அவள் இந்தக் காலத்தியவள்தான் என்பதை ஞாபகப்படுத்தின. இடையில் இறுகச் சுற்றிக் கட்டியிருந்த நீண்ட இளம் மஞ்சள் நிறத் துணி அவள் மேனி நிறத்துடன் இழைந்து அவ்வாடையின் கவர்ச்சியை அதிகப் படுத்திக் காட்டியது. மேலங்கியில், வாரி இறைத்தது போல் தென்பட்ட ரோஜாக்கள் அவள் இதழ்ச் சிவப்புடன் போட்டியிட்டன. எல்லாமே உயர் ரகச் சீனப் பட்டினாலானவை. விழிகளைப் பறிக்கும் வர்ணங்களில், வழுவழுப்பான ஆடைகளில் நூதனமாகக் காட்சி தந்த அவளைக் கண்கொட்டாமல் பார்த்தான் வடிவேலு.

அவன் தன்னை வைத்த விழி வாங்காது ஆராய்வதைக் கவனித்துவிட்டு, "லாப நஷ்டக் கணக்குப் போட்டாகி விட்டதா?" என்று கேட்டாள் அவள் புன்சிரிப்புடன்.

"வரவுப் பத்தி பூர்த்தியாகி விட்டது. செலவுப் பத்தி காலியாக இருக்கிறது! லாபமா, நஷ்டமா என்பதில் சந்தேகம் வேறா?" அவள் எழிலைக் கணக்கிட்டுக் கூறினான் வடிவேலு.

மகிழ்ச்சிப் பூரிப்புடன், "எவ்வளவு நேரமாக இப்படி வாசலிலேயே நிற்பாய்? உள்ளே வா!" என்று அழைத்தாள் அவள். "சற்று முன்னால் நீ என்னை என்னவென்று சொல்லிக் கூப்பிட்டாய்?"

" 'ராணி இருக்கிறாளா?' என்று விசாரித்தேன். டையென் ஹௌ கங் என்றால் சொர்க்கத்தின் அரசி என்று பொருளல்லவா?"

"ஆமாம்?"

"சொர்க்கத்தின் அரசியைத் தமிழ் நாட்டில் இந்திராணி என்கிறோம். அதைச் சுருக்கி 'ராணி' என்று உனக்குப் புதுப் பெயர் சூட்டியிருக்கிறேன் நான்....!"

"ராணி, ராணி!" என்று இரண்டு மூன்று தடவைகளில் முணுமுணுத்தாள் அவள். "எனக்கு மிகவும் பிரியமாகத்தான் இருக்கிறது இந்தப்பெயர்!"

தன்னைச் சுற்றிலும் கண்ணோட்டம் செலுத்தினான் வடிவேலு. அந்தப் பெரிய வீட்டின் ஒரு சிறு பகுதிதான் அவளுடையது. ஒரு கூடம், படுக்கை அறை, சமையலுள் இவ்வளவுதான். கூடத்தை அவள் அலங்கரித்திருந்த விதம் அவள் ரசனையைக் காட்டியது.

ஒரு பக்கமாகப் போடப்பட்டிருந்த சோபாவின் மீது யாளி போன்ற பயங்கர மிருகங்கள் இரண்டு உட்கார்ந்து கொண்டு அவனை நோக்கிக் கண்களை உருட்டி மிரட்டின. சற்றுக் கூர்ந்து பார்த்தால்தான் அவை உயிருள்ளவை அல்லவென்றும் சோபாவின் மெத்தைக்குப் போடப்பட்டிருந்த உறையில் அந்த உருவங்கள் காட்சியளிக்கின்றனவென்றும் கண்டு கொள்ள முடிந்தது. அத்தனை உயிர்க்

கலையுடன் திகழ்ந்தன அவை. மூலையிலிருந்த ஒரு மேஜையின் மீது புத்தர் பிரானின் அருள் வடிவம்; அருகே சீனக்காரன் ஒருவன் ரிக்ஷா இழுத்துப் போகிற பீங்கான் பொம்மை. ஞாபகார்த்தக் கட்டடங்களாகச் சீனர்கள் தங்கள் தேசம் முழுவதிலும் எழுப்பியுள்ள இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட 'பகோடா'க்களில் ஒன்றிரண்டு மட்டும் கருத்தைக் கவரும் கம்பீரத்துடன் கண்ணைக் கவரும் வண்ணப் படங்களாக ஒருபுறத்தில் மாட்டப்பட்டிருந்தன. அந்த ஓவியங்களுக்கிடையே யாங்க்ட்ஸி கியாங் நதியில் மிதக்கும் ஒரு சீனப் படகு வீட்டினைப் போலவே சிறிய அளவில் உருவாக்கப்பட்டிருந்த மரப் பொம்மையும் பொருத்தப்பட்டிருந்தது ஒரு பெரிய விஷயமல்ல. படகு வீடு பொம்மையை ஆணி அடித்துச் சுவரில் நிற்க வைத்ததுடன் நில்லாமல், அதற்கான சுற்றுப்புறத்தையும் வர்ணச் சேர்க்கைகளினால் சிருஷ்டித்திருந்ததுதான் அதன் தனிச் சிறப்பு. நீல நிறத்தில் நதி நீரத்தையும் அக்கரையில் சில வீடுகளையும் செவ்வொளி படர்ந்த வானத்தையும் தொலைவில் மிதக்கின்ற தோணிகள் இரண்டையும் அவன் சுவர் ஓவியமாகத் தீட்டச் சற்றேனும் சிரமப்பட்டிருப்பதாய்த் தெரியவில்லை. தூரிகையைக் கரத்தில் பற்றிக் குறைந்தபட்சக் கோடுகளினால் குறையில்லாத சித்திரம் வரைந்திருந்தான்.

தரையில் விரிக்கப்பட்டிருந்த ரத்தினக் கம்பளம், ஜன்னல்களின் படுதாக்கள், மலர்களை ஏந்தி நிற்கும் கோப்பைகள், காகித விளக்குக்கூண்டு எல்லாமே சீன நாட்டினை ஏதாவது ஒரு வகையில் ஞாபகமூட்டுவனவாகவே இருந்தன.

''இந்தச் சூழ்நிலைக்கு ஏற்ற மாதிரிதான் நீயும் உன்னைச் சிங்காரித்துக் கொண்டிருக்கிறாய்!'' என்றான் வடிவேலு மகிழ்ச்சியோடு.

''இன்னும் ஒரே ஒரு அம்சம் பாக்கியிருக்கிறது'' என்றவள் மேஜை டிராயரை இழுத்துத் திறந்து ஒரு விசிறியை எடுத்தாள். கரத்தின் ஒரு நொடிப்பிலே அது அகன்று விரிந்து அவன் முகத்தைக் கண்ணுக்குக் கீழே மறைத்தது. விஷமத்தனத்தை வெளியிடும் விழிகள் மட்டும் விசிறிக்கு மேலே தென்பட்டு அவனை வசீகரித்தன.

இலேசாகப் படபடக்கும் வண்ண விசிறிக்குப் பின்னாலிருந்து இதயத்தை அள்ளுகிற சிரிப்பொலி அலைஅலையாகக் கிளம்பியது.

(தொடரும்)

மொட்டுக்கள் மலர்

வீ. சுவாமிநாதன்

மாலதிக்குப் பரீட்சைகள் முடிந்து இரண்டு நாட்கள் ஆகி விட்டன. ஆனாலும் உழைத்துப் படித்த களைப்பு மட்டும் இன்னும் அவளுக்குத் தீரவில்லை.

மொட்டை மாடியில் நிலவொளி பால் வெள்ளமாய்க் கொட்டிக் கொண்டிருந்தது. மாடி வெளியின் ஓரமாக வைத்துப் பூந்தொட்டிகளினிடையே சென்று நின்றாள். வாசனைப் பொடியைத் தூவினாற் போல், உடலைத் தழுவும் மென் காற்றில் மலர்ந்த பன்னீரின் மணம் தவழ்ந்து வந்தது. நெஞ்சில் மயக்கம் சிறகுகளின் மேல் பறப்பதைப் போல் தனி சுகம்.

தன் அறையில் அமர்ந்து கையில் ஏதோ ஒரு புத்தகத்தைத் திருப்பிக் கொண்டிருந்த பாலு தலை நிமிர்ந்தான். ஜன்னலுக்கு வெளியே அவள் உருவம் தெரிந்தது. கண்கள் இதழ்களாய் அலர்ந்து சிரித்தன. எழுந்து சென்று அவளருகே நின்றான். அவள் விரல்கள் அவள் கைவளையல்களை ஒவ்வொன்றாக எண்ணிக் கொண்டிருந்தன, மீண்டும் மீண்டும்.

''....மாலதி!''

புன்னகை அரும்பும் வதனம் அவன் பக்கம் திரும்பியது. அதன் எழிலில் அவனுக்குப் புல்லரித்தது. தேனும் மணமுமாய் நெஞ்சே மலர்ந்தாற் போல் ஒரு நிறைவு விளிம்பிட்டது.

''மாலதி!''

''உம்!''

கண்ணுக் கெட்டிய தூரம் வானத்தில் கோடி கோடியாய்த் தாரகைகள் வாரி இறைந்து கிடந்தன, கருநீலப் பட்டில் கணக்கில்லாமல் கொட்டிப் புள்ளிகள் வைத்து நெய்த மாதிரி. நெஞ்சை அள்ளும் பூச்சொரியல்!..... இத்தனையையும் எண்ணிக் கணக்கெடுக்க முடியுமோ? இவ்வளவு தான் என்று அறுதியிட்டுச் சொல்ல இயலுமோ? அந்தத் தாரகைகளை



யா ஒவ்வொன்றாக எண்ணிக் கணக்கெடுக்க அவனுக்கு நெடுநாட்களாகவே ஆசை. அவன் கணக்கு சரிதானா என்று மாலதியும் கூடவே எண்ணிப் பார்த்துச் சொல்லி வர வேண்டும்!

''....என், மாலதி, செய்கிறாயா?....''


தன்னையே மறந்து குழந்தை போல் அவன் கொஞ்சலாய்க் கெஞ்சினான். அவள் சம்மதித்ததே அவனுக்கு ஆச்சரியமாயிருந்தது. வெட்கமும் சந்தோஷமுமாய் அவள் கண்கள் குழம்பின. இதயம் நிறைந்து விட்டால் பேசுகிற பாஷையில் அர்த்தமில்லாமல் போய் விடுகிறது. இதயம் நிறைந்த பின்னர் அர்த்தம் எதற்கு?

''மாலதி! மாலதி — !''

மாமா தன் மகளை அழைக்கும் குரல் நேர் கீழிருந்து மேலே உயர்ந்து வந்தது. அவளைப் போகவிட அவனுக்குத் துணிவில்லை. பரிதாபமாய்ப் பிடி தளர்ந்தது. அவளுந்தான் தயங்கி நின்றாள், அவனிடமிருந்து பிரித்துக் கொள்ளத் துணிவின்றி.

அதற்குள் மாடிப்படியின் வாசலருகே மாமாவின் உருவம் நுழைந்து விட்டது.

''அடாடா, இங்கேயா இருக்கிறீர்கள்? ஐயய்யோ, காற்று கத்தியாக வெட்டுகிறதே. கீழே போங்க! மாலதி, போ போ, பரீட்சை அசதியோடு இந்தக் காற்றிலே நின்றால் உடம்பு எதற்கு ஆகும்?....''



மாமாவின் சொல்லை மீறி அங்கே நிற்க இருவருக்குமே தெரியாது. அவர் குரலில் அளவுகடந்து ததும்பும் பாசமும் வாஞ்சையும் அவர்களைக் கீழ்ப்படுத்திவிடுகின்றன. தன் மீதும் மாலதி மீதும் அவர் கொண்டிருக்கும் அன்பின் முடியாத ஆழம் அவன் அறிந்தது தான். ஆனால் வரம்பில்லாத அன்பும் கூடச் சகிக்க முடியாத வேதனையைத்தானே அளிக்கும்?

அவள் மாடியிறங்கிப் போவதைப் பார்த்த வண்ணம் அவன் நின்றான். அவனைத் திடீரென ஏக்கம் கவ்விற்று. இறக்கை விரித்துக் கொண்டு தன்னறையை அடைந்ததும் நாற்காலிக்குள் தளர்ந்து விழுந்தான். கைகளும் கால்களும் வாடிய கொடியாய்த் துவண்டன.

அவன் மூச்சு நம்பிக்கையற்றுத் தவித்தது. தனக்கும் அவளுக்குமிடையே காட்டாற்று வெள்ளம் குறுக்கிடுவது போல் அச்சமாயிருந்தது. ஒன்றாய் இணைந்தது பொய்யாய், இரு பகுதிகளாய் இரு எல்லைகளில் நிற்கும் பிரிவு தாங்க முடியவில்லை.

இப்போது அவன் கோபமெல்லாம் தன் அம்மாவின் மேல்தான். மாலதியை அவனுக்காகத் தேர்ந்தெடுத்தது அவள்தான். ஊரில் நிச்சிந்தையாக இருப்பாள் இப்போது. அவன் கஷ்டம் எங்கே தெரிந்திருக்கப் போகிறது?

கல்லூரிப் படிப்பு முடியும் முன்பே அவன் தன் எதிர்காலத்தின் ஒவ்வொரு நாளையும்

கற்பனை செய்து பார்த்திருந்தான். ஒவ்வொரு நிமிஷமும் இப்படித்தான் அமைய வேண்டும் என்று திட்டமிட்டு வைத்திருந்தான். வாழ்வே ஒரு காவியமாய், அவன் ஒவ்வொரு சொல்லும் எல்லையற்ற பொருள் ததும்ப இதழ் விரிக்க வேண்டும் போல், அக் கவிதையை ஒரு பெண் இசைத்துக் காட்டுவாள் என்று அவன் கனவு கண்டு கொண்டிருந்தான். அவளைத் தேடிச் சென்று ஓடிப் பிடிக்க நேரும் என்று கூட அவன் நினைத்ததுண்டு.....அப்படியே அவளை விட்டிருந்தால், ஒரு வேளை, யாரையாவது தேடிச் சென்று ஓடிப் பிடித்துக் கொண்டு வந்திருப்பான். அதற்கு வாய்ப்பில்லாமல் அவனுக்குப் பதிலாக அம்மாவே தேடிச் சென்று, ஓடிப் பிடித்து மாலதியைக் கொண்டு வந்து விட்டாள். குழந்தையின் கண்களைப் பொத்தி, ''இட்டாச்'' காட்டி விட்டு மடியிலிருந்து இனிய பொருள் எடுத்துத் தருவது போல, மாமாவின் பெண் மாலதியே வந்த போது அவன் ஆச்சரியப் பட்டுப் போனான்.

சரியாக ஐந்து வயதில் அவளைப் பார்த்தது. அவனுக்கு நேற்று போல் இருந்தது. ''ஏண்டா பாலு, அப்படி விழிக்கிறே, நம் மாலதி தானடா இது!'' என்று அம்மா சொல்லியும் அவனால் அரைக்கணம் நம்பும்படியாக இல்லை. வியப்பு வானம் போல் வட்டமிட்டு விரிந்தது.

பூஜையறையில் ஏற்றி வைத்த பாவை விளக்கு போல் துளிர்த்து அசைவற்று அவள் சுடர் விட்டுக் கொண்டு நின்றாள். அதிசயக் கனவு கண்டு அதிலிருந்து இன்னும் மீளாத மாதிரி அவன் கண்கள் மயங்கி முறுவலித்தன. வான் மேகங்களிடையே நீந்தும் நிலவின் நீலத் தளிரொளி போல் துலங்கும் அவளிடமிருந்து தன் கண்களை எடுக்க அவனுக்கு இலேசில் மனம் வரவில்லை.

அம்மா அவளைப் புரிந்துகொண்டு கேலி செய்யத் தொடங்கி விட்டாள்.

மணமான பிறகு தான் சட்டென அவன் புரிந்து கொண்டான், மாலதி அரும்பாகவும் இல்லாமல், மலராகவும் ஆகாமல், மனத்தளவில் போதின் நிலை மாறாததை. உடல் வளர்ந்த பின்னும், அதே அளவுக்கு உள்ளம் வளர்ந்திருக்கவில்லை. வைகறையில் வெள்ளி முளைத்த பின்னும் இருள் நீங்காமல் சற்றே தேங்குகிற மாதிரி, புலர்ந்தும் புலராத நிலையது. வயசின் ஓட்டத்தோடு ஈடு கொடுக்க முடியாமல் அவள் எண்ணங்கள் வெகு தூரம் பின்தங்கி யிருந்தன.

அவர்கள் வீட்டில் அவள் செல்லப் பெண். அவளிடம் அவர்கள் காட்டிய பரிவு அளவுக்கு மீறிப் போய் விட்டது. பெற்றோர்களின் அரவணைப்பிலிருந்து ஒரு நிமிஷம் கூட நகர்ந்து நின்று அவளுக்குப் பழக்கமில்லை. அதனாலேயே அவளுக்கென்று ஒரு தனித்தன்மை ஏற்படவேயில்லை. இருட்டறைக்குள் வளர்ந்த பூங்கன்றைப் போல, இளமையும் விழிப்பும் அவள் உள்ளத்தில் சரியாக உருப்பெறவேயில்லை. எதையும் ஏனோ அச்சத்துடன் பார்த்து ஒதுங்கினாள்.—ஆரம்பத்தில் அவனையும் கூடத்தான்.

எடுத்த எடுப்பில் அவள் அவ்வாறு நடந்து கொள்ளும் விதம் அவனுக்கு விளங்கவில்லை. பதில் தெரியாத புதிர் போலப் புதிதாய் இருந்தது. விரல் பட்டாலே வதங்கி விடுவாளோ எனச் சிறு நடுக்கம் தோன்றியது. கானலைக் கண்டு சோலையென ஏமாந்து போனது போல் அவன் மனம் அடிக்கடி திகைத்து நிற்கும்.

இரட்டைப் பின்னல் மார்பில் மல்லிகைச் சரத்துடன் புரள ஜன்னல் விளிம்பில் ஒட்டியவாறு அவள் அமர்ந்திருப்பாள். ஜன்னல் கம்பிகளின் மேல் முகம் பதித்து கன்னப் பூரிப்பில் தடம் அழுந்தியிருக்கும். எல்லையற்ற எழில் துலங்கத் தன்னை அவள் மறந்த நிலையில் அவள் கன்னத்தைத் தொட்டுப் பார்க்க அவனுக்கு ஆசையாய் வரும். அதில் பதிந்திருக்கும் கம்பிகளின் பதிவை விரல்களால் உணரத் தோன்றும்; கன்னத்தின் வழவழுப்புக்காக, பூப் போன்ற அதன் மென்மைக்காக.

அரவம் கேட்டு, முகம் திரும்பி அவனைக் கண்டதும் அவள் தவித்துப் போவாள். தனக்குப் பழக்கமில்லாத சூழ்நிலையில் தனக்குப் புரியாத எண்ணங்கள் குமிழும் சுழலுமாய் வெளிப்படுகையில் தும்பியின் இறகுகள்போல் அவள் இமைகள் படபடக்கும். அவ்விடத்தை விட்டு எப்போது நழுவலாம் என்று கதவை நோக்கித் திரும்பியவாறு குதிகால் உயர்த்திக் காத்திருப்பாள். பாலுவின் மனம் அவளையும் மீறிப் பரிதவிக்கும்.

நாளடைவில் மெல்ல அவள் தன்னைத் தானே சமாளித்துக் கொண்டாள். இந்தத் தத்தளிப்புக்கும் அப்பால் உள்ளத்தில் ஓர் உண்மை புலருவது போல் இருந்தது. மாலதியின் மன இயல்பை எழுத்துக் கூட்டிப் பாடம் போல் படித்து விட்ட மாதிரி யிருந்தது.


அவளே பாடம் படிக்கிற சிறுமியாகத்தான் இருந்தாள். அதைத் தாண்டி அவள் நெஞ்சம் வளரவில்லை. அதோடு நின்று விட்டது. அதனால்தான் அவனையும் அவன் சொற்களையும் அவள் புரிந்து கொள்ளவில்லை. அதற்கான பக்குவம் அங்கேயில்லை. குற்றம் அவளுடைய இல்லை. வளர்த்த பெரியவர்களுடையது. போற்றுவதாக நினைத்துக்கொண்டு அவளைப் பூட்டியல்லவா வைத்து விட்டார்கள்?

வெளியுலகோடு அவள் தொடர்பு கொண்டதில்லை. பள்ளிக்கூடத்தில் கூடத் தன்னையொத்த பெண்களோடு அவள் சகஜமாகப் பழகியதில்லை. பள்ளிக்கூடம் விட்டதும் நேரே வீடு வந்து விடுவாள் என்று அவர்கள் பெருமையாகச் சொல்லிக் கொண்டனர். பாடத்தில் அவள் படித்ததெல்லாம் கூடப் பரீட்சையில் மார்க்கு வாங்கத்தான். பயிற்சி இல்லாத தேகம் நலிந்து நிற்பதைப் போல, அவள் உள்ளம் மடலவிழாமலே வாடுகிறது.

அம்மாதிரி அவள் நிராதரவாய் நெகிழ்ந்து நிற்கக் காண்கையில், பாலுவுக்குப் பரிதாபமாக இருந்தது. மெல்ல மெல்ல அவள் தன்னைத் தானே உணர்ந்து கொள்ள உதவுவதைத் தவிர வேறு வழி?


நெஞ்சில் விளக்குப் போட்டாற் போல் ஒரு புது வெளிச்சம். கொம்பில் சிக்கிய ஆடையைக் காற்றுவாக்கில் விட்டு இழுப்பதைப் போல அவளோடு தோழமை நடப்பது போன்றே தன் உறவின் உரிமையை உணர்த்த நினைத்தான்.

ஆனால் அந்த எண்ணத்தைச் செயலாக்குதல் எண்ணியவாறு எளிதாக இல்லை. சொல்ல வேண்டியவைகளை யெல்லாம் வெளிப்படச் சொல்ல முடியவில்லை; சொல்ல வரவில்லை. சொன்னதையும் அவள் சரியாக வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.



எப்படியும் அந்த முயற்சியில் அவனுக்கு ஓரளவு வெற்றி கிடைத்திருக்கும், அவளுடைய பெற்றோர்களின் குறுக்கீடு மட்டும் இல்லாதிருந்தால்.

அவளை அவர்களிடமிருந்து பிரித்து அழைத்துச் செல்ல இயலவில்லை. அப்படி ஒரு பேச்சு வந்தாலே அவர்களால் தாங்க முடியாது. மாலதியாலும் அந்தப் பிரிவைச் சகிக்க இயலும் என்ற நம்பிக்கையில்லை. கடைசியில் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி அவன்



தான் அவர்களோடு தங்கி விட்டான் நிரந்தரமாக.

மெல்லவும் இல்லை; விழுங்கவும் முடியவில்லை. தெங்குக் குழலில் தேன்குழல் சிக்கிய மாதிரி, தானாகக் கரைந்தால்தான் உண்டு. தானாகக் கரையுமோ? அதுவரையில் அவனால் காத்திருக்க இயலுமா?

சுபாவத்திலேயே அவனுக்கு எதிலும் ஒரு நிதானமில்லாத படபடப்பு; நில் கொள்ளாமல் ஓர் அவசரம். அப்படி நின்ற இடத்தில் ஒரு நிமிஷம்கூட நிற்காமல் ரீங்காரமிடுவதில் தான் அவனுக்கு விருப்பம் கூட. முறுக்கேற்றி நாணேற்றிய தந்தி போல் இளமையும் வேகமும் சேர்ந்து உள்ளத்தை அலைக்கழிக்கும் பருவம் இது.

ஆனால் இப்போது அவன் நிலை, காட்டு யானையைக் கட்டிப் போட்ட மாதிரிதான். உதறி எறியக் கூடிய துணிவில்லை. வளைந்து கொடுக்கவும் பழக்கமில்லை.

கல்யாணத்தின் போது பாதியில் நின்ற மாலதியின் கல்வி பின்னரும் மேலே தொடர்ந்தது. அவனுக்கு உள்ளூர இஷ்டந்தான், தனக்குச் சரியாய் இலக்கிய இன்பங்களைப் பகிர்ந்துகொள்ள அவள் தயாராவதில். கூடவே ஹாஸ்டலில் அவளைச் சேர்த்து விடலாம் என்று அவன் கூறக் காரணம் அங்கேதோழி

களின் உதவியால் அவன் தன்னுள் துளிர்த்திருக்கும் எண்ணங்களை அடையாளம் கண்டு கொள்ள வாய்ப்புகள் கிடைக்கும் என்ற எண்ணந்தான்.

அவன் சொன்னதன் அர்த்தம் அவனுடைய பெற்றோர்களுக்குப் புரிபடவில்லை. வெளிப்படையாக விளக்க அவனுக்கு என்னமோ போலிருந்தது. மாலதி கடைசியில் ஹாஸ்டலில் சேரவில்லை.

இதே போலத்தான் ஒவ்வொரு முறையும்: பெண்களின் மன இயல்பை ஆராயும் ஒரு சிறந்த தத்துவ நூல், புகழ் பெற்ற ஒரு மனோ தத்துவ நிபுணர் எழுதியது. ஆபீஸில் ஒரு நண்பனிடம் அதைக் கண்டதும், பாலுவின் கண்முன் மாலதிதான் வந்து நின்றாள். மாலையில் வீடு திரும்பியதும் மாலதியின் பார்வை எளிதில் படும் இடமாக அதை வைத்தபோது அவனுக்குத் திருப்தியாக இருந்தது. அவனுடைய கையிலேயே கொடுக்கத் தயக்கம்.

'பார்த்த பின் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் வராமலா போய்விடும்?'

மாலதியின் பார்வை அதில் படும் முன்பே அவனுடைய தந்தையின் பார்வை அதில் விழுந்து விட்டது. ''என்ன பாலு! இது மாதிரிப் புத்தகமெல்லாம்? அதுவும் நாலு சிறுசுகள் இருக்கிற இடத்தில்!....'' என்ன பதில் சொல்வான், எப்படிச் சொல்வான் அவன்? பிறகு, அந்தப் புத்தகம் அவன் கண்ணிலேயே படக் காணோம்.

இன்னொரு சமயம், எல்லோருமாகச் சேர்ந்து கடற்கரைக்குச் சென்றனர். முழு நிலவு நாள் அது.

அலை பொங்கியெழுந்த வேகத்துடனே கரை மேல் நுரை சிதறிப் பின்வாங்குகையில் காலடியில் குறுகுறுவென்று மணலைப் பறித்து அவளுக்குச் சிரிப்பை மூட்டி விட்டது. அந்த விளையாட்டின் விவரிக்கவொண்ணாத இன்பத்தில் அவனும் அவளோடு சேர்ந்து கொண்டான், அவனையேயறியாமல். கனவு மயக்கத்தில் ஜோடியாய்ச் செருகும் இரு ஜோடிக் கண்ணிமைகள்.

இருவருக்கும் சுயநினைவு சற்று நேரம் அற்று விட்டது. அலைக்குப் பின் அலை வந்து நீர் மட்டம் உயர்ந்து விட்டது. எதிர்க்காற்றின் முன் தள்ளிக்கொண்டு, கைகளோடு கைகளைப் பிணைத்துக் கொண்டு, அலைகளிடையே இழுத்துக் கொண்டு நடந்து செல்கையில் —

ஐந்து தலை ஆதிசேஷன் படம் பிரித்து பாய்வது போல் பிரம்மாண்டமான ஓர் அலை பேரிரைச்சலோடு வருவதைக் கண்டதும்—

அவள் கண்கள் களிப்பின் வெறியில் பொருத்திய மெழுகுவர்த்தியைப் போல் சுடரிட்டன.

''....மாலதி ....மாலதி....அப்படியே, அப்படியே நில்லேன்....'' அவன் கைகள் அவளைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டன. தனக்கு ஆதரவாகவா? அல்லது அவளுக்கு ஆதாரம் தரவா?

இரண்டுமில்லை. ஜோவென அடித்த அலையின் கொந்தளிப்பில் ஈடு தர முடியாமல் இருவருமே சரிந்தனர். சட்டென அவளைத் தாங்கிக் கொண்டு லாகவமாய் நீந்தி வந்து கரை சேர்ந்தான். அவனுக்கு அதில் எல்லையற்ற மகிழ்ச்சி, புதிதாக ஒரு ராகத்தைத் திறம்படப் பாடி முடித்த கலைஞனைப் போல.

கரையை அடைந்ததும் நீரின் தண்மையையும் மீறிக் கொண்டு குப்பென்று வெப்பம் அவனை ஊடுருவித் தகித்தது. மாமா முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க அவனையே பார்த்தபடி நின்றிருந்தார். சினத்தோடு இலேசான அருவருப்பும் கூட. அவன் தலை நிமிரவில்லை. அந்தப் பார்வையைச் சந்திக்கத் திடமிலாயிருந்தது.

அதற்குப் பின்னர் மாலதியை அவனோடு கடற்கரைப் பக்கம் அவர் அனுமதிப்பதில்லை. ஏன், இருவருமாக வெளியே செல்லவே ஒப்புவதில்லை. கோவிலுக்கு அவர்கள் கூடவே டிரைவர் வருவான்.

அவனுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. இணைந்த பின்னும் இருவரிடையே ஏன் இப்படி நீக்க முடியாமல் எத்தனையோ திரைகள்? காவலில் சிறையிட்டாற் போல் இதென்ன வேடிக்கை? 'மாலதியின் மேல் அன்பும், உரிமையும் அவர்களுக்கு மட்டும் தான் என்ற நினைப்பா? அப்படியென்றால், மகளை மடியிலேயே வைத்துக் கொள்ளாமல் எதற்குத் திருமணம் செய்து வைக்க வேண்டுமாம்?"

தனக்குத் தானாகக் கேட்கும் இக்கேள்விகளை மாமாவையே கேட்க அவனுக்குத் தோன்றாது. நேரில் அவரைக் காண்கையில் நெஞ்சு சுருங்கி வாயடைத்து விடும். மாமாவின் தோற்றத்தில் அப்படியொரு பிரசன்னம்!

ஓரோரு சமயத்தில் அவன் தனக்குள்ளாகவே வேதனையோடு வேடிக்கையாகவும் நினைத்துக் கொள்வான். ஒரு சிறு நிகழ்ச்சிக்கே இத்தனை தடையுத்தரவுகள் என்றால், தன் ஆசைகளையெல்லாம் அவன் செயல்படுத்த முனைந்தால் என்ன நேரும்?

அவன் ஆசைகள் எல்லாமே அதனதன் வகையில் அசாதாரணமானவை. கொட்டுகிற மழையில் வெட்ட வெளியில் அவளோடு குளிரக் குளிர நின்றவாறு கொடி மின்னல்கள் தலைக்கு மேல் தலை தெறிக்க நாலாபுறமும் சிதறி ஓடுகிற விநோதத்தை ரசிக்க அவனுக்கு ஆசை..... ஊர்க் கோடியில் உள்ள தனியான குன்றின் மேல் புதிதாக ஒரு வழியாய்ச் செங்குத்தாக ஏறி, அதன் உச்சியிலிருந்து சூரிய அஸ்தமனத்தின் வண்ண ஜாலத்தை அவளுக்குக் காண்பிக்க ஆசை....

என்னென்னவோ ஆசைகள். அத்தனையும் வாடிப் போன ரோஜா மாலை போல் பொலிவிழந்து விட்டாற் போல் அவன் மனம் குமைந்தது. அதைச் சுற்றிக் கட்டிய ஜிகினாவும் பதக்கமும் நாருடனும் நூலுடனும் சேர்ந்து சிக்கிக்கொண்டு அர்த்தமற்று டால் அடிப்பது போல், அவனைப் பெரும் ஓய்ச்சல் சூழ்ந்து விட்டது.

அப்போதுதான் சொல்லி வைத்தாற்போல் மாலதியின் பரீட்சை முடிவுகள் வெளிவந்தன.

அவளுடைய பெற்றோர்களுக்கு அளவில்லாத மகிழ்ச்சி, அவள் அவ்வளவு நிறைய மார்க்குகள் வாங்கி முதல் வகுப்பில் தேறியதில். அவள் முகத்தில் கூட ஒரு மெருகு ஏறியிருந்தது, வெற்றிப் பெருமிதத்தில். இத்தனை கோலாகலங்களிடையே, நீரில் சிந்திய நெய்த்துளியாய், அவன் தான் ஒதுங்கி நின்றான், எதிலும் பங்கு கொள்ளாமல். அவளுடைய வெற்றியே தன்னை ஏளனம் செய்கிறாற் போல் அவனுக்குப் பட்டது.

மேற்கொண்டு அவள் படிக்க வேண்டும் என்று அவர்கள் பேசிக் கொண்டதும் அவளை எட்டியது. இம்சையான மௌனம் அவள் இதயத்தில் தேங்கியது.

அன்றிரவு சாப்பாட்டுக்குப் பிறகு அவன் தன்னறையில் போய் அமர்ந்தான். ஈஸிசேரில் சாய்ந்ததுமே மேஜை விளக்கை அணைத்து விட்டான். சுவரில் மாட்டியிருந்த சுவாமி படத்தின் மேல் ஒளி மொட்டுக்கள் போல் சின்னஞ்சிறியதாய் இரு விளக்குகள் அடக்கமாகப் பிரகாசித்தன. இருளுமில்லாத ஒளியுமல்லாத இந்தச் சூழ்நிலை ஏதோ ஒருவகையில் மனத்துக்கு இதமாய் இருந்தது.

காலடியின் மெத்தென்ற அரவம்; கதம்பம் சூடிய குழலிலிருந்து வரும் தாழை மணம்.

அவன் பார்வை கதவின் வழி திரும்பியது. மினுக்கென்று எரியும் சுவாமி விளக்கிலிருந்து குதித்து எழுந்து வருவதைப் போல் மாலதி பொன்னொளி துலங்க நுழைகையில் பஞ்சில் பொறி வைத்த மாதிரி அவன் நெஞ்சை என்னவோ செய்தது.

அசைந்தாடி வந்தவள் அவனருகே நின்றாள். மனம் தவித்தது. குரல் கமறினாற் போல் ஒரு முறை மெல்லக் கனைத்து விட்டுக் கொண்டான். நெஞ்சக் குழலை விரலால் வருடிக் கொண்டாள். அதற்கு மேல் பாவனை காட்ட அவனுக்குத் தெரியவில்லை. அவள் கைகளை ஆவலாய், எடுத்துத் தன் கைகளிடையே வைத்துக் கொண்டான். மருதாணி விளிம்பிடும் பட்டுக்கைகள்.

மேஜை விளிம்பில் முழங்கைகளை ஊன்றிய வாறு சாய்ந்தாற் போல் அவள் குனிந்து நின்றாள். மெல்ல விரல்களால் மேஜை விளக்கை ஏற்றி அணைத்துத் திரும்பவும் ஏற்றினாள். ''....நான் உங்களிடம் ஒன்று கேட்கப் போகிறேன். செய்வீர்களா?....''

சட்டென்று மலர்ந்த அவன் புன்னகையில் யோசனை பரவிற்று. கேள்வியோடு அவன் முகம் நிமிர்ந்தது.

'' .... அப்பா என்னை மேற்கொண்டு பி.எஸ்ஸி.யில் சேர்ப்பதைப் பற்றிக் கேட்டால் அதில் உங்களுக்கு இஷ்டமில்லை என்று கண்டிப்பாகச் சொல்லி விடணும்....''

''ஏன், மாலதி?'' என்றான் அவசரமாய்.

ஒரு கணம் மௌனமாய் இருந்தது. மெல்ல அவள் குரல் தம்பூரைப் பூட்டினாற் போல் சன்னமாய் எழுந்தது.

''....எனக்கு மேலே படிக்க ஆசையில்லை. அதனாலே ஒரு பிரயோசனமும் இல்லை என்று தோன்றுகிறது. நான் தெரிஞ்சுக்க எத்தனையோ இருக்கு. அதையெல்லாம் படிச்சுத் தெரிஞ்சுக்க முடியாது என்று நினைக்கிறேன்.''

அவனுக்கு மயிர்க் கூச்செறிந்தது. ஆனால் அவள் சொன்னது புரியாத மாதிரியும் இருந்தது. தனக்குச் சொல்கிறாளா? தனக்குத் தானே சொல்லிக் கொள்கிறாளா?

''எனக்கு எதுவுமே புரியவில்லையே!''

அவள் முகம் மெதுவாய் அவன் பக்கம் சாய்ந்தது.

''....எனக்குப் புரியும்படியாகச் சொல்ல முடியவில்லை. ரொம்ப நாட்களாகவே சொல்ல வேண்டும் என்றுதான். பரீட்சை யெல்லாம் முடியட்டும் என்று இருந்தேன். எனக்கு ஏனோ வேதனையாய் இருக்கிறது. உங்களை இதுவரை நான் புரிந்து கொள்ளவேயில்லை. அதற்குச் சந்தர்ப்பமேயில்லை. பாதிப் படிப்பில் நிறுத்தக் கூடாது என்று ஒதுங்கி இருந்தாயிற்று. இனிமேலும் அந்தப் படிப்பு வேண்டாம் என்று பார்க்கிறேன்.''

அவள் அவ்வளவு நிதானமாகச் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் அவன்மேல் நாகம் போல் ஏறி அவனைக் கவிழ்க்கச் சுற்றியது போலிருந்தது. கூடவே வரும் சுருதியோசை நெஞ்சில் ஏறி மூச்சுத் திணறியது.

''மாலதி!''

அவள் நிறுத்தவில்லை. கைகள் மட்டும் பின்னலைப் பிரித்துத் திரும்பவும் பின்னியபடி வேலையாயிருந்தன.

''....நான் இன்னொன்று கூடச் சொல்லப் போகிறேன். சென்னையைவிட்டு நீங்கள் மாற்றல் வாங்கிக் கொண்டால் தேவலை. கொஞ்ச நாட்கள் என்னுடைய அம்மா, அப்பாவை யெல்லாம் பிரிந்து நாம் இரண்டு பேருமாக இருந்தால் ஒருத்தரை ஒருத்தர் சீக்கிரமாகப் புரிந்து கொள்ளலாமோ, என்னவோ? ஆரம்பத்தில் தப்பும் தவறுமாக நிறைய இருக்கலாம். ஒரு இழையில் அதெல்லாம் நமக்கு அநுபவம்தான். நிழலிலே வைத்த செடி வளராது, இல்லையா?''

அவனுக்கு மேனி சிலிர்த்தது. திகைப்புற்று அவன் விழிகள் தெறித்து விடுவன போல் பிதுங்கின. பேசுவது மாலதிதான் என்று அவனால் நம்ப முடியவில்லை. அவள் மெல்ல மெல்ல இத்தனை தூரம் தெரிந்து கொண்டு விட்டதை அவன் இவ்வளவு நாட்களாய்த் தெரிந்து கொள்ளவில்லையா என்ன?

''....நான் உன்னைச் சின்னக் குழந்தை என்று நினைத்தேன், மாலதி....'' என்று சொல்கையில் அவனையறியாமல் அவன் நாத் தழுதழுத்தது.

அவள் மனம் கனிந்து புன்னகை செய்தாள். சுவரங்களில் விளையாடும் ராகம்போல் ஒவ்வொரு அக்ஷரமும் ஒவ்வொரு புதுமையாய் இதழ்களில் உதிர்ந்தது.

''....எத்தனை நாளைக்குச் சின்னக் குழந்தையாய் இருக்கிறது? இன்று இளமையிலே கிடைக்காத அநுபவம் இனிமேல் என்றைக்கு வரப் போகிறது? எனக்குப் பாடத்திலே அநுபவத்தைப் பற்றி ஒரு சுலோகமே வந்திருக்கு. வெள்ளத்தோடு சேர்ந்து காட்டிலும் மேட்டிலும் உருண்டால்தான் கருங்கல் கூழாங்கல் போல், அழகாய் ஆகிறதாம்; பூமிக்கடியிலே புதைந்து சூட்டிலும் சுமையிலும் இருந்தால் தான் நிலக்கரி கூட வைரமாய் ஆகுமாம்....''

அவள் முடிக்கவில்லை. அவனால் ஆவேசத்தை அடக்க முடியவில்லை. அப்படியே அள்ளி அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். என்று, எப்படி தன் மாலதியால் இவ்வளவு தூரம் சிந்திக்க முடிந்தது என்ற ஆச்சரியமே கண்களில் முத்து முத்தாய் அரும்பிற்று.


இவள் அப்படியானால் அரும்பா, மலரா? புதிரா, விடையா? பெண்மையே ஒரு புதிர் தானோ; தெளிவான பதிலைத் தன்னுள் அடக்கிய புதிரோ? முத்தும் சிப்பியும் போலவோ?

அவன் பேச முயலவில்லை; அவளும் மேலே பேசவில்லை. மடல்களுக்குள் அடங்கிய தாழையின் மகரந்தக் கதிர்கள் போல் அவனுள் சொகுசாய் ஒடுங்கினாள். பேச்சுக்கு அங்கே இடமில்லை.



'சுழன்று சுழன்று சுற்று என் சக்கரமே'
ராஜஸ்தான் கற்பனைக் கதைகள் நிறைந்த மகாராஜாக்களின் நாடாக இருக்கலாம்; ஆனால் மற்ற விஷயங்களில் போலவே, மண்பாத்திரங்கள் செய்வதில் அதன் சிறப்பு இன்னும் மங்காமல் இருக்கிறது. வெறும் களி மண்ணிலிருந்து அற்புத அமைப்புகளையும், உருவங்களையும் சிருஷ்டிக்கும் பொழுது அடக்கமான குயவர்கள் 'சுழன்று சுழன்று சுற்று என் சக்கரமே' என்று பாடுவார்கள். மகாராஜாக்களானாலும் சரி, சாதாரண குயவர்களானாலும் சரி, அவர்களுடைய துணித் தேவையை வெறும் பருத்தியிலிருந்தே தயாரிக்கப்பட்ட அரவிந்த் ஆடைகள் சிறப்பாக பூர்த்திசெய்கின்றன.
பாப்லின்கள்
வேஷ்டிகள்
லான்கள், ட்வில்கள், கேம்ப்ரிக்குகள்
எவரெஸ்ட் : 5531
பிரிண்டுகள்
சேவைப் புட்டாக்கள்
Arvind Quality Fabrics
அரவிந்த் மில்ஸ் லிமிடெட் அஹமதாபாத்-2
'SANFORIZED'


அனைவரும்
விரும்புவது
கிருஷ்ண மிட்டாய்கள்.
கிருஷ்ண மிட்டாய்கள் சுகாதார முறைப்படி கைபடாமல் கரும்புச் சாற்றிலிருந்து தயார் செய்யப் பட்டது. குழந்தைகளுக்கு அதிக மகிழ்ச்சியை அளிக்கிறது.
குழந்தைகள் விரும்புவது
பெரியவர்கள் புகழ்வது
கிருஷ்ண மிட்டாய்களே.
K C P
Krishna
SWEETS
தயாரிப்பவர்கள்:
தி கே. ஸி. பி. லிட்.
38, மவுண்ட் ரோடு, சென்னை-6


ஸ்லோன்ஸ்
பாம்
உபயோகித்து
வலியை
உடனே
நிறுத்துங்கள்
"எந்த வலிக்கும் ஏற்ற மருந்து"
SLOAN'S BALM
TRADE MARK
KILLS PAIN
TRADE MARK OWNED BY STANDARD LABORATORIES INC. U.S.A.
கீல் வாதம் ★ சுளுக்குகள் ★ தசைவலிகள் இவற்றிற்கு ஏற்றது.


"சார்! அடுப்பை நன்று எரிய விட்டுத் தண்ணீரைக் காய்ச்சிச் சாப்பிடணும். காய் கறிகளை நன்கு வேக வைத்துச் சாப்பிடணும்!"
"அப்படியா? நீங்க சுகாதார இலாகாவில் இருக்கிறீங்களா?"
"இல்லே நான் விறகுக் கடை வைத்திருக் கிறேன்."
"தாய் தகப்பன் செய்யறது பாவங்கள் பிள்ளை கள் தலைமேல் விடியுமாமே! உண்மையா?"
"ரொம்ப உண்மை. என் வீட்டுக் கணக்கைத் தப்பா போட்டு விட்டார் அப்பா. அதுக்கு வாத்தியார் என் தலைமேல் ஒரு குட்டு குட்டினார்!"
பயில்வான் ஜம்பு
"புத்திமான் பலவான்னு பெரியவங்க சொல்லியிருக் காங்க!"
"எதையும் இடமறிந்து பேசணும்னு பெரியவங்க சொல்லியிருக் காங்க."
"ஏண்டா! இப்படி ராட்சஸனா பிறந்தி ருக்கே! பிரஹலாதன் மாதிரி பிறந்திருக்கக் கூடாதோ?"
"அப்ப நீ ராட்சஸனா பிறக்கணுமே, அப்பா!"
"வாசலில் பாடிக் கொண்டு ஒருவர் யாசகம் கேட்கிறார்! ஏதேனும் கொடுங்கோ!"
"என் சொந்த சாகித்தியத்திலே இரண்டு கொடுத்து அனுப்பு!"
சாமா


ஓட்டப்பந்தயம் 8
கதை: ஏ. எஸ். சுந்தரராஜன்
ஓவியம்: செல்லம்
நாற்காலியோடு உயர்ந்த கை அடுத்தகணமே தாழ்ந்தது...
ஹலோ ஆறுமுகமா? உங்கள் 'பிரண்ட்' பஞ்சு இங்கே வந்து வசமாக மாட்டிக்கொண்டார். அவர் என் மண்டையை உடைப்பதற்குள் சீக்கிரமாக வாருங்கள்.
மாலதி... போலீஸுக்குத் தான் 'போன்' பண்ணுகிறாய் என்று...
அப்படிச் செய்யலாம்தான்... ஆனால் என் எதிர்காலக் கணவரின் நண்பரல்லவா நீங்கள்?
சற்று நேரத்தில்...
ஆறுமுகம்...
பஞ்சு...
பஞ்சு, இதென்னடா வேஷம்? ஒரு மாதத்தில் ஆளே மாறிவிட்டாயே?
இன்னும் போடவேண்டிய வேஷம் நிறைய இருக்கிறது. அது சரி, மாலதியை எப்படி அழைத்து வந்தாய்?
சரிதான்! இவரா என்னை அழைத்து வந்தார்? பசுபதி என்னைப் போலீஸில் பிடிக்க நான் உண்மையான நர்ஸ் என்பதைப் போலீசாரிடம் நிரூபித்துவிட்டு நானல்லவா இவரைத் தேடி அழைத்து வந்தேன்!
இல்லாவிட்டால் சென்னைக்கு வர வழி தெரியாமல் சிங்கப்பூருக்குப் போய்விடுவேனாக்கும்.
ஆறுமுகம்!
டாக்டர் சேகர் உயிரோடுதான் இருக்கிறார்.


ஆறுமுகம்... நீ டாக்டர் சேகரைப் பார்த்தாயா?
டேய்... டேய்... விடடா! சேகரை நானும் பார்த்தேன் மாலதியும் பார்த்தாள்!
மாலதி, சொல்... அவர் எங்கே இருக்கிறார்?
பயப்படாதீர்கள், மேல் மாடியில்!
இதுதான் சேகருடைய வீடா?
இல்லை. இது ஒரு பிரை-வேட் நர்ஸிங் ஹோம். ரயிலிலிருந்து கீழே விழுந்ததால் ஏற்பட்ட காயத்துக்குச் சிகிச்சை செய்யச் சேகரைப் போலீசார் இங்கு ரகசியமாக வைத்திருக்கிறார்கள்.
சேகர் உயிரோடு இருக்கும்போது ஏன் போலீசார் அவர் இறந்ததாக வதந்தியைக் கிளப்பி விட வேண்டும்?
அதுதான் ரகசியம்... சேகரை யாரோ ரயிலிலிருந்து தள்ளிவிட்டதாகப் போலீசாருக்குச் சந்தேகம்.
டாக்டர் உயிர் தப்பினாலும் அதிர்ச்சியில் அவருக்குப் புத்தி சுவாதீனம் இல்லாமல் போய்விட்டது.
டாக்டர் உயிரோடிருப்பது தெரிந்தால் அவர் விரோதிகள் மீண்டும் கொலை செய்ய முயலலாம் அல்லவா?
ஆகவே அவருக்குச் சித்தம் சுவாதீனத்துக்கு வரும்வரை மறைத்து வைக்க வேண்டுமென்று...
மூவரும் சேகரைக் காண மாடிக்குச் செல்கின்-றனர். பதுசலைக் கண்ட சேகர்...
ஆ! இவன்தான். இவன்தான் கொலைகாரன்...
ஆறுமுகம்...!


அதேசமயம் நர்ஸிங்ஹோம் டாக்டர் நரஹரி சேகரின் மனைவியுடன் வரவே...
நர்ஸ்! யார் இவர்களெல்லாம்? உன்னால் எல்லா ரகசியமும் கெட்டுத் தட்டிச் சுவராகி விடும் போலிருக்கிறதே!
டாக்டர் நாங்கள் எதிரிகளல்ல. உங்கள் உதவிநாடி வந்துள்ள அப்பாவிகள்!
சொல்ல வேண்டியதைக் கீழே வந்து சொல்லுங்கள். சேகருக்குத் தொல்லை தரவேண்டாம்.
பத்துவும் இருமுகனும் தங்கள் நிலைமையை விளக்கினார்கள்.
சேகரின் வைத்தியம் தெரிந்து, நான் எப்படி யாரால் தள்ளப்பட்டார் என்பதற்கு சாட்சியும் கொடுத்தால் தான் எங்களுக்கு விடுதலை.
சேகரைக் குணப்படுத்து- -வதை என் தொழி- -லின் வெற்றியாகக் கருதுகிறேன்.
அதேசமயம்
அப்பா!
வா... காமினி...
ஆ! காமினி இருமுகனுடைய மகளா?
எப்போது வந்தீர்கள், சந்தானா?
சந்தானா? உன்னைத் தூணில் கட்டிப்போட்டுவிட்டு ஓடிவிட்டதாகச் சொன்னார்களே, சாந்தப் பத்து இவன் தானா?
வேப்பம்பூப் பச்சடியில் விளக்கெண்ணெயைக் கலந்து சாப்பிட்டமாதிரி விழித்தான் பத்து!

தொடரும்



சென்ற ஆகஸ்டு மாதம் இறுதியில் சென்னையில் ஸமஸ்கிருத ரங்கத்தினால் ஓர் அரிய கலை விருந்து ரஸிகர்களுக்கு அளிக்கப்பட்டது. நாடகக் கலையிலும், ஸம்ஸ்கிருதத்திலும் ருசி உள்ளவர்கள் கேரள தேசத்திலிருந்து சென்னைக்கு முதல் தடவையாகக் கொண்டு வரப்பட்ட 'கூடியாட்டம்' என்ற ஸம்ஸ்கிருத ஆட்டத்தை மூன்று நாட்கள் கண்டு களித்தனர். தென்னாட்டில் பண்டைக்காலம் தொட்டே ஸம்ஸ்கிருத நாடகங்களை நடிக்கும் பழக்கம் இருந்து வந்தது. தமிழ் இலக்கியத்திலும், சோழர் கல்வெட்டுக்களிலும் இது 'ஆரியக் கூத்து' என்று வழங்கப்பட்டது. ஆனால் இன்று இந்தியாவிலேயே கேரள தேசம் ஒன்றிலேதான் பண்டைய மரபை ஒட்டி ஸம்ஸ்கிருத நாடகத்தைப் பழைய ரீதியில் ஆடிக் காண்பிப்பது என்ற மரபு நசித்துப் போகாமல் இருந்து வருகிறது. இம்மரபுக்கே 'கூடியாட்டம்' என்று பெயர்.

காலக் கணக்குப்படி கதகளிக்கு முற்பட்டது 'கிருஷ்ணாட்டம்.' அதற்கும் முற்பட்டது 'கூடியாட்டம்'. நமக்குத் தெரிந்த வரையில் கி. பி. பத்தாவது நூற்றாண்டிலிருந்து 'கூடியாட்டம்' கேரளத்தில் நடந்து வருகிறது. கி. மு. மூன்றாவது நூற்றாண்டில் தோன்றிய 'பாஸ நாடகம்' முதலாகப் பதின்மூன்று பழம் ஸம்ஸ்கிருத நாடகங்களைக் கூடியாட்டத்தில் கையாளுகிறார்கள். இந் நாடகங்களை நடிப்பவர்களுக்கு 'சாக்கியார்' என்று பெயர். முன்பு பதினெட்டு சாக்கியார் குடும்பங்கள் இருந்தன. இன்றோ ஆறு குடும்பங்களே உள. இவற்றுள் பைங்குளம் ராம சாக்கியார், மாணி மாதவ சாக்கியார் இவ்விருவர்களுடைய குழுவினர் செய்யும் கூடியாட்டத்தையும் நான் பார்த்திருக்கிறேன். கூடியாட்டத்தைப் பார்ப்பது எளிதல்ல. ஸம்ஸ்கிருதம் படித்த பல மலையாளிகள்கூட அதைப் பார்த்ததில்லை. கோவில் சம்பந்தமாகவே வளர்ந்த கலை இது. ஆனால் இது சென்னை ஸம்ஸ்கிருத ரங்கத்தின் பெருமுயற்சியினால் முதன் முதலாகக் கேரளத்துக்கு வெளியே அழைத்து வந்து காண்பிக்கப்பட்டது.

பத்தாவது நூற்றாண்டில் கேரளத்தில் ஆண்ட குலசேகர வர்மனின் 'ஸுபத்ரா தனஞ்சயத்'தின் முதல் அங்கத்தின் முதல் பாகம், மிகப் பழைய கவியான பாஸவின் 'அபிஷேக நாடக'த்தில் ராவண—ஹனுமார் சந்திப்பு, ஏழாவது நூற்றாண்டில் கான்யகுப்ஜத்தின் ஆண்ட ஹர்ஷ மகாராஜாவின் 'நாகாநந்த'த்தின் இரண்டாம் அங்கத்தின் முதல் பாகம் — ஆகிய இம்மூன்று பகுதிகளும் மூன்று நாட்களில் ஆடி, அபிநயித்துக் காட்டப்பட்டன. இரண்டாம் நாள் சென்னை கவர்னர் ஸ்ரீ மேதி அவர்கள் தலைமை தாங்கி ஸம்ஸ்கிருத ரங்கத்தின் சார்பாக மாணி மாதவ சாக்கியாருக்கும், 'முழவு' வாத்தியம் வாசித்த அவர் மைந்தருக்கும் நன்கொடை வழங்கினார்.

கூடியாட்டத்தில் கவி எழுதிய ஸம்ஸ்கிருதம், ப்ராக்ருதம், செய்யுள், உரை இவை எல்லாம் பேசப்படுவதோடு பதம் பதமாக அபிநயத்தாலும் காட்டப்படும். சில முக்கிய ச்லோகங்களைக் கற்பனையாகவே ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் அபிநயிப்பார்கள். இவ்வாறு ச்லோகங்களை அபிநயிக்கும் பொழுது ரஸபாவங்களை முதலில் கண்களின் அபிநயம் ஒன்றினாலேயே இவர்கள் காட்டுவது வியக்கத் தக்கது. இந்தக் கண் அபிநயத்தில் சென்னைக்கு வந்த மாணி மாதவ சாக்கியார் தம் திறமையை நன்றாகக் காட்டினார்.

கூடியாட்டத்தில் விதூஷகன் ஒரு தனி விசேஷம். இவன் ஸம்ஸ்கிருதம், ப்ராக்ருதம், எல்லாவற்றிற்கும் அவ்வப்போது மலையாளத்தில் வியாக்கியானம் செய்து கொண்டே போவான். நடுநடுவே 'சாடு' ச்லோகங்கள், நகைச்சுவை, உலகவியலைப் பற்றிய கருத்துக்கள் இப்படி ஏராளமாகக் கைச்சரக்குகளைச் சேர்த்து நாடகத்துக்கு ஒரு சிறப்பைக் கொடுப்பதோடு மக்களுக்குப் பொது அறிவு, ஸம்ஸ்கிருதப் பயிற்சி — இரண்டையும் உண்டாக்க இன்றியமையாத கருவியும் ஆவான்.

தேவாரம் பாடப்பட்ட பழங்காலத்தில் கையாளப்பட்ட பல ராகங்களும் பண்களும் கூடியாட்டத்தில் கேட்கலாம். ஆனால் இப்போது அவற்றைப் பாடுபவரில்லை. இவ்வாட்டத்துக்கு பக்கவாத்தியங்கள் இரு 'முழவுகள்', ஒரு 'இடக்கை'; இவை நாடக ஆரம்பத்திலும் நடுநடுவேயும் வாசிக்கப்படும். 'நங்கையார்' என்ற பெண்மணி 'குழித்தாளம்' போட்டுக் கொண்டு வருவாள். கூடியாட்டம் பழம் பெருமையின் சிறப்புக்கு எடுத்துக் காட்டாகும். தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றி அதிகமாகப் பேசப்படும் இந்நாளில் இம்மாதிரி கலை நிகழ்ச்சிகள் இந்த லட்சியங்கள் கைகூட உதவுகின்றன.

காலத்தின் விதி

சேத்தூர் கூத்தன்

அழகிய விநாயகர் ஆலயத்தில் அதி காலை பூசைக்குரிய வெள்ளிமணி கிணு கிணுக்கிறது. தோட்டத்து வாதுமை மரத்தில் வதியும் சில பழந் தின்னும் வெளவால்கள் சிறகடித்து ஆரவாரிக் கின்றன. வாசல் கொட்டிலில் கட்டி யிருக்கும் மகிஷங்கள் தங்கள் கொம்பு களை மோதி ஒலி உண்டாக்குகின்றன.

ராஜியின் காதுகளில் இவை விழுகின் றன. பொழுது விடிவதற்குரிய அறி குறிகள் தாம் இவை என்று அவளுக்குத் தெரிகிறது. இருந்தாலும் எழுவதற்கு மனமின்றிப் பாயிலேயே புரண்டு புரண்டு படுக்கிறாள்.

''பொழுது விடியப் போகிறதே? எழவில்லையா?'' என்று அவளுடைய உள் மனம் உசுப்புகிறது. அதைத் தொடர்ந்தாற் போலவே, ''யாருக்கு விடிகிறது? ஊருக்கும் உலகத்துக்கும் விடிகிறது. உனக்கா விடிகிறது?'' என்ற கேள்வியையும் எழுப்புகிறது.

மறுபடியும் புரண்டு படுக்கிறாள். நெஞ்சம் ஒரு கட்டுக்கடங்க மறுக்கிறது, எதை எதையோ நினைக்கிறது:

நாளை வதுவை மணமென்று நாளிட்டுப்
பாளைக் கமுகுப் பரிசுடைப் பந்தற்கீழ்
கோளரி மாதவன் கோவிந்தன் என்பா
ளோர்
காளைப் புகுதக் கனாக்கண்டேன் தோழீ
நான்

என்ற நாச்சியாரின் பாசுரம் அவள் நினைவில் கமழ்கிறது. திடீரென்று அவள் நெஞ்சம் விம்முகிறது. வேதனைக் கண் ணீர் பெருகி ஓடுகிறது. அவளுடைய ராஜாவுக்குப் பிடித்தமான அந்த அற்புதப் பாசுரம் இப்பொழுது ஏன் நினைவுக்கு வருகிறது?

''ராஜி! ராஜி!! ராஜா வந்திருக் கிறான். இதோ பாரேன்; உனக்காக என்னவெல்லாம் வாங்கி வந்திருக் கிறான்! உனக்குப் பிடித்தமான பாம்பே வளையல், பவானி ரிப்பன், சந்தனப் பௌடர், ஜவ்வாது சாந்து....''— ராஜி திடுக்கிட்டு எழுகிறாள். கண்ணைக் கசக்கிக் கொண்டு சுற்றுமுற்றும் பார்க் கிறாள். எதிரே ஒருவரையும் காணோம். எல்லாம் வெறும் பிரமை என்று தோன்றுகிறது. என்றோ எப்பொழுதோ நடந்த ஒரு நிகழ்ச்சியின் சிறல் என்பதை அவள் உணர்கிறாள்.

அவள் கண்களில் தாபம் பொங்கு கிறது. அருகில் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கும் அன்னையைப் பார்க் கிறாள். அவளுக்காகவே வாழும் அந்த ஜீவனைப் பார்க்கும்பொழுது நின்ற அழுகை மீண்டும் வருகிறது.

கஷ்டப்பட்டு அழுகையை அடக்கிக் கொள்கிறாள். பாயைச் சுற்றி வைத்து விட்டுத் தோட் டத்துக்குள் நுழைகிறாள். மங்கிய உதயத் தின் பிரகாசத் தில் தோட்டம் 'பசேல்' என்று தோன்றுகிறது.

எல்லாம் அவ ளும் ராஜாவும் வைத்த செடி கள் தாம். அவர் களிருவரும் சேர்ந்து நட்ட பதியன்கள் தாம். வேராகவும், தண்டாகவும் இருந்தவை, இன்று செடியாகவும் கொடியாகவும் பூவாக வும் பிஞ்சாகவும் மாறி விட்டன. ஆனால் ராஜி?

சிலையாக மாறி நின்றவள் 'ராஜி' என்ற குரல் கேட்டுத் திரும்புகிறாள். அம்மாதான் அழைத்துக் கொண்டே தோட்டத்துக்குள் நுழைகிறாள்.

''இதோ வந்துட்டேம்மா!'' - தாவி ஓடியவள் அப்படியே தாயைக் கட்டிக்கொள்கிறாள். பாசம் பொங்கி வழிகிறது.

''காப்பி ஆறுதே குழந்தை?....''

''சாப்பிட்டுடறேனே அம்மா, நொடியில்....''

''என் சமர்த்து....''

''நிஜமாத்தானே அம்மா சொல்றே?''

''நிஜமாத்தான் சொல்றேன். ஆனால் எல்லாத்துலேயும் இப்படி இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கும்.''

''எதையம்மா சொல்லறே?....''

''ஒண்ணும் தெரியாதவ போல் கேட்கிறாயே! ராஜா வருவான் என்கிற நம்பிக்கை இன்னமும்... உனக்கு...''

ராஜி பாய்ந்து ஓடி அவள் வாயைப் பொத்துகிறாள். ''அப் படிச் சொல்லாதே அம்மா. ராஜா வருவார்; நிச்சயம் ஒருநாள் வரு வார். நீவேண்டுமானால் பாரேன்..''

அன்னை கலங்கிய கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்.

ராஜியின் தலையில் தோட்டத்தில் பூத்த பூ முழுதும் காட்சி அளிக்கிறது. பெட்டியிலிருந்த ஆபரணமெல்லாம் அவள் மேனியில் பூட்டியதால் மேலும் அழகு பெறுகின்றன. சூடிக் கொடுத்த சுடர்க் கொடியைப் போல் அவள் சுடர் விட்டுப் பிரகாசிக்கிறாள்!

தாய் திருஷ்டி சுற்றுகிறாள். 'தன் வயிற்றில் பிறந்த பேரழகா?' என்று

வியக்கிறாள். ராஜாவின் படத்துக்கு எதிரே நின்று கண் கலங்கும் மகளைக் கண்டு தானும் கண் கலங்குகிறாள்.

மெல்ல அவள் அருகே சென்று செல்லமுடன் அவள் முகத்தைத் திருப்புகிறாள்.

''ராஜி! எவ்வளவு காலத்துக்கு இப்படி அழுது அழுது..''



''ராஜா வரும் வரையில் இப்படியே..... அழுது அழுது....'' கேவிக் கேவிக் கூறி முடிக்கிறாள் ராஜி.

எவ்வளவோ நாட்கள் ஓடி விடுகின்றன. தோட்டத்துச் செடிகளெல்லாம் இப்பொழுது இலையுதிர்ந்து மொட்டையாய் நிற்கின்றன.

ராஜி சிதைந்த சித்திரம் போல் அமர்ந்திருக்கிறாள். கிண்ணத்திலிருக்கும் மருந்தைப் பஞ்சில் துவைத்து, அன்னையின் நெற்றியில் பிழிகிறாள். கொதிக்கும் ஜுரத்துடன் முனகிக்கொண்டிருக்கும் அன்னை மெள்ளக் கண்களைத் திறக்கிறாள். ''ராஜி!.. இன்னுமா நீ தூங்கவில்லை?''

''பரவாயில்லே; நீ தூங்கு. பொழுது விடியப் போகுது.''

''யாருக்கம்மா விடியப் போகிறது? என் ராஜிக்கா விடியப் போகிறது?...''

''ஆமாம்மா; இன்னும் கொஞ்ச நாளில்....நீ வேண்டுமானால் பாரேன் ''

''போதும். இத்தனை காலமும் பார்த்தது போதும். ஊம்; ராஜா வருவான்னு இன்னமும் நினைக்கிறயே? அவன் உயிரோடு இருந்தால்கூட இனி மேல் வரமாட்டான்....''

''அப்படிச் சொல்லாதே அம்மா. ஆயிரமாயிரமா சம்பாதிச்சால்தான் ராஜி கிடைப்பான்னு நீதானே அம்மா அவரை விரட்டினே? நீ சொன்ன படியே சம்பாதிச்சிண்டு நிச்சயம் ஒருநாள் வரப் போகிறார்.''

''நான்தான் விரட்டினேன். சாதாரண மனஸ்தாபத்துக்காகத் தம்பி என்றும் பாராது விரட்டினேன். ஆனால் அவனாவது அக்காதானே என்று பொறுத்துக் கொண்டானா? இவ்வளவு காலமாகியும் திரும்பி வந்தானா? ராஜி! அழறியா? .... நான் சொல்றது வருத்தமாப் படறதா? அப்படின்னா நான் சொல்லலேம்மா....''

''இல்லேம்மா; நீ சொல்லு. உன் மனத்திலுள்ளதையெல்லாம் சொல்லு. நான் வருத்தமே படமாட்டேன்.''

''சொல்லத்தான் நினைக்கிறேன். ஆனால்.... ஆனால்....''

''ஆனால் என்னம்மா?''

''சொல்கிறேன் ராஜி. அதை நீ தட்டாமல் நிறைவேற்றுவாயா?....''

''உன் மனசுக்கே சரி என்று பட்டால் அதைத் தட்ட மாட்டேன் அம்மா.''

''ராஜி! எனக்கு நல்லாத் தெரிகிறது; இன்னும் நான் கணக்கிலேதான் நான் உயிருடன் இருப்பேன் என்று. அதற்குள்...ராஜி! என் கடைசி ஆசை உன்னை மணவறையில் உட்கார வைத்து, மங்கல ஆரத்தியுடன் பார்த்து விட வேண்டும் என்பது....''

ராஜி பதிலேதும் சொல்லாது சிலை போல் அமர்ந்திருக்கிறாள். அவள் மலர் விழிகளிலிருந்து பொட்டுப் பொட்டாக நீர்த்துளிகள் சிதறுகின்றன. அன்னையின் கண்களிலிருந்தும் மழை பொழிகிறது.

''ராஜி! சொன்னால் வருந்த மாட்டேன் என்றாயே! இப்போது....நான் சொன்னதைக் கேட்டு....''

''ஐயோ, அம்மா! அப்படியெல்லாம் சொல்லாதே அம்மா. ராஜு வருவாரென்கிற நம்பிக்கை எனக்குக் குறையவே இல்லையம்மா. இருந்தாலும்... நீ சொன்னதைத் தவறாகவே நினைக்கலே. உன் விருப்பப்படியே சம்மதிக்கிறேன்.''

அன்னையின் உடம்பு பாதி குணம் அடைந்து விட்டதைப் போல் தோன்றுகிறது. பத்து நாட்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தாள். திடீரென்று எழுந்து உட்கார்ந்து ராஜியைக் கட்டிக் கொள்கிறாள். எத்தனையோ காலத்துக்குப் பிறகு மகளைச் சம்மதிக்க வைத்து விட்ட பெருமிதம் அவள் முகத்தில் பிரகாசிக்கிறது.

அழகியவிநாயகர் ஆலயத்தை அடைத்துப் பந்தல் போடப்பட்டிருக்கிறது. பந்தல் நிறைய ஊர் மக்கள் குழுமியிருக்கிறார்கள். சந்தனமும் பன்னீரும் வாச மணம் பரப்புகின்றன; ஹோம குண்டம் புகைகிறது. வேதியரின் மந்திர ஒலி எழுகிறது. கெட்டி மேளத்தின் இடையே ராஜியின் கழுத்தில் மஞ்சள் அணி ஏறுகிறது.

''எவ்வளவு சீக்கிரம் வரன் குதிர்ந்து எவ்வளவு சீக்கிரம் மணமும் முடிந்து விட்டது, பார்த்தாயா!....'' என்று ஊர்ப் பெண்கள் பேசிக்கொள்கிறார்கள்.

பொழுது சாய்ந்து கொண்டிருக்கிறது. இராகு காலம் வருவதற்குள் பெண்ணும் பிள்ளையும் புறப்பட வேண்டுமென்று துரிதப்படுத்துகிறார்கள்.

வாசலில் 'மேற்கத்தி'க் காளை பூட்டிய 'வில்' வண்டி வந்து நிற்கிறது. ராஜியின் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் கொட்டுகிறது. அன்னை அடக்க முடியாத அழுகையை அடக்கி அவளை அன்புடன் அணைத்து உச்சி முகர்ந்து வண்டியில் ஏற்றுகிறாள்.

''ஜல்....ஜல்....'' என்ற சதங்கை ஒலி பந்தல் முழுதும் எதிரொலிக்கிறது. புழுதியைக் கிளப்பிக் கொண்டு வண்டி விரைந்து தெருக்கோடியில் திரும்புகிறது. அன்னை வெடிக்கும் நெஞ்சத்துடன் உள்ளே திரும்ப யத்தனிக்கிறாள்.

அப்போது தெருவில் விரைந்து வந்த 'பளபள'க்கும் கார் ஒன்று வெறிச்சோடிக் கிடக்கும் பந்தலுக்குள் நுழைந்து நிற்கிறது.

கண்ணீர் வழியும் கண்களைத் துடைத்துக் கொண்டு அன்னை நிமிர்ந்து பார்க்கிறாள். காரின் கதவைத் திறந்து கொண்டு ஓர் இளைஞன் வருகிறான்.

அன்னை மறுபடியும் கண்களைத் துடைத்துக் கொண்டு பார்க்கிறாள்.

''என்னைத் தெரியவில்லையா அக்கா? நான்தான் ராஜூ வந்திருக்கிறேன். ஆயிரமாயிரமா சம்பாதிச்சால்தான் ராஜி கிடைப்பான்னு சொன்னாயே; அதன்படியே வந்திருக்கிறேன். அது சரி; ராஜி எங்கே? பந்தல் பிரமாதமா இருக்கே! யாருக்குக் கல்யாணம்?....''


அன்னையின் கண்கள் இருளடைகின்றன. கால்கள் தொய்ந்து உடல் நிலத்தில் சாய்கிறது. ''ராஜூ.....ராஜி...'' என்று ஏதோ சொல்ல வாயெடுத்தவளுக்கு மேலே சொல்ல முடியாது தொண்டை அடைக்கிறது.

ராஜூ எல்லாவற்றையும் புரிந்து கொள்கிறான். தமக்கையின் பாதங்களைத் தொட்டு நமஸ்கரித்து விட்டு மெல்லத் திரும்புகிறான்.

காரின் கதவுகள் திறந்து மூடப்படுகின்றன. வெகு தூரத்தில் ஓடிக்கொண்டிருக்கும் வில் வண்டியின் ''ஜல், ஜல்'' என்ற ஒலி வெகு நேரம் வரை கேட்டுக் கொண்டே யிருக்கிறது.

பெண்

கிணஜா



டாக்டர் ரேணுகாவின் மனம் கொதித்துக் குமுறியது. அறையின் நீளத்தை அளப்பவள்போல் உலவிக் கொண்டிருந்த அவள் தன் மனக் குமைச்சலைத் தாள முடியாமல் தவித்தாள். அன்று வரை அமைதியாக இருந்த அவளது மனம் அன்று காலை நேர்ந்த எதிர்பாராத சம்பவத்தால் தாக்குண்டு தவித்தது. ரேணுகா உணர்ச்சி வசப்படாத ஒரு டாக்டர் தான். அன்று வரை எந்த உணர்ச்சிக்கும் இடம் கொடுத்து மனம் தவித்ததில்லை....ஆனால் அன்று?

வாழ்வதற்கும் இன்ப துன்பத்தை ஏற்பதற்கும் எவர் நினைவைப் பற்றுக்கோலாகப் பற்றி நின்று முன்னேறினாளோ, அவரே இன்று அவள் முன் துரோகமிழைத்து நின்றால் அவள் மனம் குமுறாமல் என்ன செய்வாள்?

''சே! இத்தனை கிராதக மனிதரா அவர். அன்று எத்தனை உறுதியாகப் பேசினார்! அன்பு, பாசம், சொன்ன சொல், மனைவி என்ற உரிமை இத்தனையையும் வேரோடு பிடுங்கி எறிந்துவிட்டு மனத்தைத் துடைத்துக் கொண்டு விட்டாரா? என் வாழ்வைப் பாழ் செய்து இன்னொருத்தியுடன் வாழ அவருக்கு எப்படித் துணிவு ஏற்பட்டது? சே! சே ! ஆண் வர்க்கம் இத்தனை மோசமானதா? துரோகமே உருவான மிருகங்களா அவர்கள்?'' என்று எண்ணி எண்ணி மனம் கசந்து வெதும்பினாள் டாக்டர் ரேணுகா.

நீதி மன்றம் ஏறிக் கணவனைப் புறக்கணிக்கும் முற்போக்கையும் டாக்டர் ரேணுகாவின் மனம் ஏற்றதில்லை. அதே போன்று, 'காதலி வீட்டுக்குக் கணவனைச் சுமந்து செல்லும்' பிற்போக்கையும் அவள் மனம் ஏற்றதில்லை. சீதா ராமனைச் சுமக்கும் காவியம் பிறந்து வளர்ந்த நாட்டில், ஆண், பெண் இருபாலாருக்கும், 'நீதி' ஒன்றுதான் என்பது அவளது திடமான நம்பிக்கை. அந்த நம்பிக்கை இன்று ஆணிவேருடன் உலுக்கப்பட்டு விட்டது...நாட்டின் நீதிக்குக்கூட இத்தனை பாரபட்சம் உண்டு என்பதை அவளால் இன்றுதான் உணர முடிந்தது.

கால் ஓய்ந்து உட்கார்ந்த ரேணுகா ஓயாத மனத்தை மெல்லப் பின்னோக்கிச் சுழற்றினாள்:

'அழகி' என்பதில் உயர்ந்து நின்ற ரேணுகா அறிவிலும் மிக உயர்ந்தே நின்றாள். அப்படிப்பட்ட அவளது அறிவைத் தேக்கி விடாமல் அவளது தந்தை அவள் விருப்பத்துக்குப் படித்துக் கொண்டு போகச் சகல வசதிகளும் செய்து கொடுத்தார். அவள் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த நாட்களில் தான் ஏரு ராமனைச் சந்திக்க நேர்ந்தது. அந்தச் சந்திப்பை இன்று நினைத்தாலும் அவளது மனம் இனிக்கத்தான் செய்கிறது.

அன்று ஆசிரியை கொடுத்த சிறு வேலையை முடித்து விட்டு வெளிவரும்போது நேரம் கடந்து அஸ்தமன சமயம் நெருங்கி விட்டது. கட்டடத்தின் படிகளைக் கடந்து, கேட்டை நோக்கிச் சென்று கொண்டிருந்தவள், எதையோ எடுப்பதற்காகக் கைப்பையை எடுத்துத் துழாவினாள். அதே சமயம் கீழே விழுந்து, உருண்டு செல்லும் ஓர் எட்டணா நாணயத்தைக் கண்டு, அதை எடுப்பதற்காகக் குனிந்தாள். தாழ்ந்த அவள் கரத்துடன் அதே நாணயத்தை எடுக்க மற்றொரு கரம் தாழவே திடுக்கிட்டு நிமிர்ந்தாள் ரேணுகா. அதே சமயம் அந்தக் கரத்துக்கு உடையவரும் காசை எடுக்காமலே நிமிர்ந்து விட்டார். பளிச்சென்று ஒளிபரப்பிய மின்சார ஒளியில் நிமிர்ந்தவர் கையிலும் திறந்த மணிபர்ஸ் இருப்பதைக் கண்டாள் ரேணுகா.

''உங்களுடையதா? மன்னித்து விடுங்கள்'' என்று ரேணுகாவின் வாயிலிருந்து புறப்பட்ட அதே வாக்கியம், அவர் வாயினின்றும் புறப்பட்டுச் சேர்ந்து ஒலித்தது. 'களுக்'கென்று சிரித்து விட்டாள் ரேணுகா. அவர் சிரிக்க வில்லை. வியப்பால் விரிந்து நின்ற அவரது விழிகளைக் கண்டதும் ரேணுகாவுக்கு முகம் சிவந்தது. முதன் முறையாக அவள் சிரம் தாழ்ந்தது. 'அழகு என்னும் சொல் பெண்களுக்காகவே பிறந்துள்ளது' என்று அன்று வரை எண்ணியிருந்த ரேணுகா, அச்சொல், 'ஆண்களுக்காகவே பிறந்திருக்கலாமோ!' என்று அந்த நிமிஷம் சந்தேகித்து வியந்தாள்.

''நான் பர்ஸைத் திறந்ததும் அது உருண்டு செல்வதும் சரியாக இருந்ததால் என்னுடையது என்று எடுக்க வந்து விட்டேன். நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றார் அவர்.

மனத்தைத் திடம் செய்து கொண்டு விட்ட ரேணுகா, ''இல்லை, இல்லை. நான் கைப்பையைத் திறந்ததும், அது உருண்டோடியதும் சரியாக இருந்ததால், என்னுடையதுதான் என்று எடுக்க வந்து விட்டேன்'' என்றாள்.

''உருண்ட நாணயம் உங்களுடையதாகத் தான் இருக்கும்'' என்றார் மீண்டும் அவர்.

''இருக்காது; உங்களுடையதாக இருக்கலாம். எடுத்துக் கொள்ளுங்கள்'' என்றாள் ரேணுகா சற்றுத் தைரியமாகவே.

''உங்கள் கைப்பையில் உள்ளதை எண்ணிப் பார்த்தால் தெரிந்து விடுமே?''

'உங்கள் பர்ஸில் உள்ளதை எண்ணிப்பார்த்தாலும் அது தெரியுமே' என்று சொல்லவே விரும்பினாள் ரேணுகா. ஆனால் சொல்லவில்லை. காரணம் புதிதாக அந்தக் கல்லூரி ஆசிரியப் பதவியை ஏற்றுள்ளவரைப் பற்றித் தோழிகள் மூலம் அவள் நிறையக் கேள்விப்பட்டிருந்தாள். ஆனால் பார்த்ததில்லை. 'இது அவராக இருக்குமோ?' என்பதே.

அவள் மௌனத்தைக் கண்ட அவர், ''பையைத் திறந்து பார்க்கச் சிரமமாக இருந்தால் இப்படிக் கொடுங்கள், பார்க்கிறேன்'' என்றவர் மெல்லத் தம் கையையும் நீட்டினார்.

திகைத்து விட்ட ரேணுகாவுக்குக் கோபமே வந்தது. ''வீண் வம்பு எதற்கு; அந்த நாணயம் யாருடைய நாணயமாக வேண்டுமானாலும் இருக்கட்டும். அதை நான் எடுக்கப் போவதில்லை'' என்று சொன்னவள் முன்னே செல்ல ஓரடி எடுத்து வைத்தாள். அடுத்த அடி எடுத்து வைக்குமுன் அவர் சொன்னார்:

''அப்படி நான் விட்டுவிடப் போவதில்லை. அதை எடுத்துப் பிள்ளையார் உண்டியலில் போட்டு விடுகிறேன். அது யாருடையதோ அவர்களுக்குப் புண்ணியம் வேண்டாம் என்றாலும் விடாமல் வந்து சேரும்'' என்று சொன்னவர், அந்த எட்டணாவையும் எடுத்துப் பையில் போட்டுக் கொண்டு விட்டார்.

திகைத்து நின்ற ரேணுகா தன் நீள் விழி அகல வியப்புடன் அவரை நோக்கினாள்.

வீடு திரும்பும் போது ரேணுகாவுக்கு உடல் கனமின்றிக் காற்றில் பறப்பது போல் இருந்தது. கால் பூமியில் பாவவில்லை. உடல் கனம் குறைந்த அதே சமயம் உள்ளத்தின் கனம் அதிகரித்து விட்டதையும் அவள் உணராமல் இல்லை. இப்படித்தான் அவர்களது முதல் சந்திப்பு நேர்ந்தது. அந்தச் சந்திப்பை இன்று நினைக்கும் போதும் டாக்டர் ரேணுகாவின் முகத்தில் அசாதாரண மலர்ச்சி ஏற்படத்தான் செய்கிறது.

அந்த முதல் சந்திப்பு அப்புறம் பல சந்திப்புக்களாக மலர்ந்து விரிந்தது. நடையிலே துள்ளலும், உடலிலே பூரிப்பும் கடலனைய கண்களிலே நிறைத்துக் கொண்டிருக்கும் விஷமத்தையும் கொண்டு பூரித்து நிற்கும் பெண்ணின் நிலை கண்டு அதைப் புரிந்து கொள்ளாத பெற்றோர்களும் உண்டா? அதுவும் ஒரே செல்வ மகளாக ரேணுகாவைப் பெற்ற அவளது தந்தைக்கு இது விஷயம் மிக்க மகிழ்ச்சியையே அளித்தது.

மகளின் மனம் தெரிந்து, மற்றும் யார் யாரை எப்படி எப்படிச் சந்தித்துக் கேட்க வேண்டுமோ அப்படி அப்படி சந்தித்துக் கேட்டுக் கொடுக்கும் இடத்தில் கொடுத்து, திருப்திப்படுத்த வேண்டியதைத் திருப்திப்படுத்தித் தன் செல்வியின் மனம் கவர்ந்தவனையே அவளுக்கு வரனாகவும் முடித்து வந்து விட்டார் ரேணுகாவின் தந்தை. ரேணுகாவின் மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. தந்தைக்கு ஒரு சிறு சந்தேகம். அதை அவளிடமே கேட்டும் விட்டார். ''ரேணுகா! உன் அன்புக்குரிய அப்பையன் கெட்டிக்காரர், லக்ஷணமானவர். எல்லாவற்றிலும் உனக்கு ஏற்றவரே. ஆனால் பெரிய குடும்பத்தின் மூத்த பையனை அவர் தம் உதவியை என்றென்றும் குடும்பத்துக்கு அளித்து வரவேண்டும்; இதையும் நீ கவனிக்க வேண்டும், அம்மா'' என்றார்.

அன்பரைப் பற்றிய புகழுரை அப்பாவின் வாயிலிருந்து புறப்பட்டதுமே தன் பஞ்சேந்திரியங்களை, ''அவர்'' இருக்கும் இடத்துக்கு அனுப்பிவிட்ட ரேணுகா, ஆனாலுக்கு அப்புறம் அப்பாவின் வாயிலிருந்து புறப்பட்ட வார்த்தைகளைக் கேளாததும் வியப்பல்ல... மகளின் மகிழ்ச்சியும், மௌனமுமே சர்வ சம்மதம் என்று தந்தை எடுத்துக் கொண்டு உடன் முகூர்த்த நாளைக் குறிப்பிட்டதும் வியப்பல்ல.

அக்கினியை வலம் வந்து அவரது கையை உறுதியுடன் பற்றிய அப்பொன்னாளை நினைத்து மனம் பூரிக்காத நாளே டாக்டர் ரேணுகாவின் வாழ்வில் இல்லை. ஆனால் இன்று....? கொதிக்கும் மனத்தை இழுத்து நினைவில் ஆழ்த்தினாள்.

''அன்பன்'' என்ற உறவு இறுகிக் கைப்பற்றிய ''கணவன்'' என்ற உரிமையில் சந்திக்கும் கட்டம், படித்துப் பட்டம் பெற்றும்

படபடக்கும் மனத்தை அடக்கும் திடம் மட்டும் கிடைக்கத்தான் இல்லை. அறையில் உள்ள அத்தனை வஸ்துக்களும் ''அவர்'' உருவாய்த் தெரிந்தது. அவளுக்கு மெல்ல அருகில் வந்த அன்பு உருவம் தன் கரத்தை அவள் முன் நீட்டவே, வியப்புடன் விழியைச் சற்று உயர்த்தினாள். என்ன விந்தை! முதல் சந்திப்புக்குக் காரணமாக இருந்த அந்த எட்டணா நாணயம்! வியப்புடன் மேலும் தன் விழிகளை உயர்த்தி அவர் விழிகளை விழுங்கிய அரணங்கு தன் பவழ உதட்டைப் பிரித்து, ''அதைப் பிள்ளையார் உண்டியலில் நீங்கள் போடவில்லையா?'' என்று கேட்டாள்.

கண்களில் குறும்பு துள்ளச் சிரித்தான் ரகு. ''போட்டேன். எட்டணாவுக்கு ஒரு ரூபாயாகப் போட்டு என் புண்ணியத்தையும் பிணைத்து உனக்கு அனுப்பினேன். உன் கை பட்ட எட்டணாவை என்னிடமே வைத்துக் கொண்டு விட்டேன்! ஏன் தெரியுமா ரேணு?''

அவன் நிறுத்தி விட்டு அவளைக் குறும்புடன் பார்த்தான். அவளுக்கு உடல் முற்றும் சிரித்தது. அவன் மீண்டும் தொடர்ந்தான்: ''உன்னை மறுதடவை சந்திக்கும்போதே 'ரேணுகா!' என்று கூப்பிட்டு விட்டேன். நீ வியப்புடன் என்னைப் பார்த்தாய், உன் கரு விழிகள்தான் கேள்வியைக் கேட்டன. வாய் திறக்கவில்லை. 'என் பெயர் எப்படித் தெரிந்தது?' என்று அன்று ஆச்சரியப்பட்டாயல்லவா? இதோ பார்!'' என்றவர் அந்த எட்டணாவைக் கண்டுபிடித்து மீண்டும் அவள் முன் நீட்டினார்.

அந்த எட்டணாவில் அவர் காட்டிய பக்கத்தில் பளிச்சென்று தன் பெயர் — தன் கையெழுத்து தெரியவே ரேணுகாவுக்கு வியப்பும் வெட்கமும் ஏற்பட்டது. அவளுக்கு ஒரு பழக்கம், எதைப் பற்றியாவது யோசிக்கும் பொழுதெல்லாம் அவள் கை சும்மா இராது. பேனாவினால் நோட்டு, புத்தகம், எதன்மீதா



வது தன் பெயரை எழுதிக் கொண்டேயிருப்பாள். அன்றும் அப்படித்தான் எதேச்சையாகக் கையில் வைத்துக் கொண்டிருந்த எட்டு அணுவில் ஆலோசித்தபடி தன் பெயரை இரண்டு இடங்களில் வரைந்து கொண்டிருந்தாள். அது அவன் நினைவுக்கு வரவே, அன்று அது தன்னுடையது அல்லவென்று வாதிட்டதெல்லாம் நினைவுக்கு வர, முகம் சிவக்கத் தலை கவிழ்ந்தாள். பெயர் அழியாமல் அதைப் பத்திரப்படுத்தி வைத்திருக்கும் அவர் அன்பு அவளை உலுக்கியது.

அந்த இன்ப நன்னாளை இன்று நினைத்தாலும் உடல் பூரிக்கிறது. 'மறக்க முடியாத அந்தப் பொன்னாளைக் கூடவா அவர் மறந்து விட்டார்! சே! சே! அவர் மனம் அத்தனை கடினமானதா....?'

டாக்டர் ரேணுகா உதட்டை அழுக்கித் தன் ஆத்திரத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டாள். மனத்தை மாற்ற — நினைவை மறக்க மீண்டும் பழைய சம்பவத்துக்கே மனத்தை இழுத்தாள்.

இன்பத்தின் ஊடே ஒரு வருடம் நொடி போல் ஓடி விட்டது. வெளியிலிருந்து வரும் போதே பெரும் மகிழ்ச்சியுடன் வந்த ரகு, "ரேணுகா! இன்று ரொம்ப நல்ல நாள். நெடு நாளைய முயற்சி இன்று கைகூடியது. இனி நம் குடும்ப கஷ்டம் விடிந்து நிம்மதி யடையும்" என்றார். அவளுக்குப் புரியவில்லை. கலவரத்துடன் அவனை நோக்கினாள்.

"ரேணு! என்னைத் திருச்சியில் வேலை ஏற்கும்படி அழைத்துள்ளார்கள். அம்மாவும் அப்பாவும் இதைக் கேட்டால் ரொம்பவும் மகிழ்வார்கள். 'மருமகள் ரேணுகா வந்த வேளை!' என்று பூரிப்பார்கள்." அவன் உற்சாகத்துடன் சொன்னான். அவளுக்குத் 'திக்' கென்று ஆகிவிட்டது.

கலியாணத்துக்குப் பின் அவள் கணவனுடன் இரண்டொரு தடவை புக்ககம் சென்றிருக்கிறாள். அந்தப்பெரிய குடும்பத்தின் சூழ்நிலை இரண்டொரு நாள் தங்குவதே கடினம் என்று ஆக்கி விட்டது. நிரந்தரமாகத் தங்குவது என்பதை அவள் கனவிலும் நினைக்க முடியாத அளவு அவள் சங்கடப்பட்டு விட்டாள்.

மனைவியின் இந்தப் பராமுகத்தை ரகுவும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவனுக்கும் அவள் மனம் முழுமையாக அன்றுதான் தெரிந்தது. 'இவ்வளவுதானா?' என்ற சலிப்பும் ஏற்பட்டது. ஆகவே அன்று முதல் அவர்களது இன்பத் தாம்பத்தியத்தில் பெரும் சலசலப்பே ஏற்பட்டது. அவன் அமைதியாகவே ஆனால் திடமான பிடிவாதத்துடன் நின்றான். அது தான் அவளுக்குப் பொறுக்க முடியாத ஆத்திரத்தைத் தந்தது.

பிரயாணத்துக்கான துணிமணிகளைப் பெட்டியில் அடுக்கிக் கொண்டிருந்தான் ரகு. அவனையும், அவன் செயலையும் பார்த்தபடி நின்றிருந்த ரேணுகா ஆத்திரத்துடன், "இவ்வளவு தீவிரம் கொண்டவர் கலியாணத்துக்கு முன்பே எல்லாவற்றையும் விளக்கமாகச் சொல்லியிருக்கலாம்" என்றாள். ஆத்திரத்தில் அவளுக்கு எதை எப்படிச் சொல்வது என்று தெரியத்தான் இல்லை.

ரகு பெட்டியை மூடிப் பூட்டி விட்டு நிதானமாக நிமிர்ந்து அவளைப் பார்த்தவன், "சொல்லியிருக்கலாம். சொல்லியிருந்தால் நீ இத்தனை மனக் கஷ்டத்தை அடைந்திருக்க வேண்டாம். வேறொருவனை மணந்து சௌக்கியமாக இருந்திருப்பாய் இல்லையா?" என்றான். 'ஏளனமா? இல்லை, அனுதாபமா?' என்று நிதானிக்க முடியாத அழுத்தத்துடன் வெளிவந்தன ரகுவின் வார்த்தைகள்.

"என்னை அத்தனை கேவலமாக நினைக்கத் தோன்றுகிறதா உங்களுக்கு? போகட்டும். இனியாவது உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள். 'சொல்லியிருந்தால்' நான் என்னுடன் உங்களைப் பிணைத்துக் கொள்ளாமல் இருந்திருப்பேன். நீங்களும் வேறொருபெண்ணை மணந்து அவளுடன் சேர்ந்து தாய் தந்தையரைத் திருப்திப்படுத்தலாம். அதற்கு முட்டுக் கட்டையாக இல்லாமல் இருந்திருக்கலாமே என்றுதான் சொன்னேன். கன்னியாகவே வாழ என்னால் முடியும். உலகமே எதிர்த்தாலும் நான் அசைய வேண்டிய அவசியமில்லை."

"ரேணு! பதற்றப்படாமல் கேள். புறப்படு முன் உன் வாயிலிருந்து நான் எதிர்பார்க்கும் பதில் வரவேண்டும் என்பதற்காகவே கேட்டேன். அத்துடன் நான் முன்னமே விளக்குவதும், அன்புக்குப் பேரம் பேசுவதாக இருக்கும். எனக்கும் வசதி உண்டு ரேணு. நீ ஓர் இடத்தில் மனத்தைக் கொடுத்த பிறகு அதை மீண்டும் எடுக்க நினைப்பது உண்மையான அன்புக்கு இழுக்கே. ஆண், பெண் இருபாலாருக்கும் நீதி மட்டும் ஒன்றுதான் என்பது என் உறுதி ரேணு. அதுவும் உன்னைப் பார்த்தபின் அவ்வுறுதி வலுப்பட்டு விட்டது. நீ மணக்க மறுத்திருந்தாலும் நான் வேறு விதமாக நடந்திருக்க மாட்டேன். ஆகையால் நீ வீணாக மனத்தை அலட்டிக் கொள்ளாதே. எத்தனை நாட்களானாலும் உனக்காகவே காத்திருப்பேன். உன் வீடும், உன் அன்பன் மனமும் இன்றுபோல் என்றும் உன் வருகைக்காகத் திறந்தே கிடக்கும்."

அழுத்தமும் அன்பும் கொண்ட கணவனது வார்த்தைகள் அவள் கோபத்தைச் சற்றே ஆற்றின. குரல் சற்று வாட அவள், "அப்படியென்றால் எனக்காக, அன்பு மனைவிக்காகச் சில விஷயங்களில் நீங்களும் விட்டுக் கொடுக்கக் கூடாதா? உங்கள் வருமானம் முழுவதையுமே அவர்களுக்கு அனுப்பிவிடுங்களேன்; நான் ஆட்சேபிக்கவில்லை. இங்கு நான் எப்படியோ சமாளிக்கிறேன்" என்றாள்.

ரகுவின் முகம் சிவந்தது. கணவன் முகத்தில் கோபத்தையே பார்த்தறியாத ரேணுகா சற்றுத் திடுக்கிட்டாள்.

"ரேணுகா! இதை நீ சொல்வதே தவறு. தனயனுடைய நல்வாழ்வுக்காக, அவனது முன்னேற்றத்துக்காகச் சகிக்க முடியாத துன்பங்களைக்கூட இன்பமாக ஏற்று அனுபவிக்கும் பெற்றோர்களுக்கு அப்போது பலம் தருவது எது? அன்புதான். அந்த அன்புக்கு ஈடாக அன்பைத்தான் யாரும் எதிர்பார்ப்பார்கள். பணத்தினால் அன்பை அடக்கிவிட முடியாது. அப்படி நினைப்பதுகூடப் பாவம், அவர்களுக்குப் பலம் தரும் அதே அன்பு நமக்கும் இருக்குமானால் எந்தக் கஷ்டமும் ஒரு பொருட்டாகத் தோன்றாது. உண்மை அன்புக்கு, 'முடியாது' என்ற ஆற்றாமையே ஏற்படாது" என்று கூறி நிறுத்தினான் ரகு.

தன்னை மறைமுகமாகக் குற்றம் சாட்டும் கணவனது பேச்சு ரேணுகாவுக்கு இறங்கியிருந்த கோபத்தை இரு மடங்காக ஏற்றியது.

"இருக்கலாம். அன்புக்கு ஆற்றாமை ஏற்படாமல் இருக்கலாம்; சரீரம் அப்படியல்ல; யந்திரமாக அதை இயக்கிவிட முடியாது. 'அன்பு, கடமை' என்று போற்றும் நீங்கள், மனைவிக்காகவும் சில கடமைகள் உண்டு என்பதையே மறந்து விட்டீர்கள்!"

சோபாவிலிருந்தும் எழுந்து விட்ட ரகு. "மறக்கவில்லை; மனைவியின் சுகத்துக்காகத் தன் எல்லாக் கடமைகளையும் விட்டு விடுபவனது அன்பு, "மோக மயக்கம்" என்றுதான் ஆகும். அம்மயக்கம் தெளியும்போது அவளுக்காக உள்ள கடமையையும் அவன் துச்சமாகக் கருதி விடுவான். வளர்த்துவானேன், இந்நிலையில் நான் செய்யக் கூடிய கடமை ஒன்றுதான்: கனவிலும் உன் நிலையை நிலையாக்கிக் கொண்டு, காலம் வரும் வரையில் உறுதியாகக் காத்திருப்பதுதான். ரேணுகா! அதுவரை நிச்சயம் என் உறுதி பிறழாது" என்று சொல்லிக் கொண்டே புறப்பட ஆயத்தமானான்.

ஆத்திரமும் கோபமும் குமுறிக் கொண்டு வந்தன ரேணுகாவுக்கு.

"இளமைத் துடிப்பில் காணும் ஆசைகளை அழித்து விட்ட பின் அன்புக் கடமைக்கு என்ன இருக்கிறது? வேண்டாம். கடந்த நாட்களின் இன்பத்தை நினைத்தே தனித்து வாழ முடியும் என்னால். எனக்காக நீங்கள் வீண் சிரமம் எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அதன் மூலம் என்னைச் சிரமப்படுத்த வேண்டாம். அவசியமும் இல்லை" என்றவள் தன் முகத்தை மறுபுறம் திருப்பிக் கொண்டாள்.

"நல்லது; ரேணுகா! என்னும் முடிந்த வரை எந்த விதச் சிரமமும் உனக்குத் தர மாட்டேன். வருகிறேன்" என்றவன் கையில் எடுத்த பெட்டியுடன் அறையைக் கடந்து வாயிலையும் கடந்து, அவள் கண்ணுக்கு முன்னால், தன்னந் தனியாக வீதியில் இறங்கி மறைந்தும் விட்டான். சிலையெனச் சமைந்து நின்றாள் ரேணுகா.

டாக்டர் ரேணுகாவுக்கு உடல் குப்பென்று வியர்த்தது. இருக்கையிலிருந்தும் எழுந்து உலவத் தொடங்கினாள். அவள் மனம் படபடத்தது. 'கடைசியாக அவரைப் பிரியுமுன் நான் அவ்வளவு கடுமையாகப் பேசியிருக்க வேண்டாம். அதற்காக இவ்வளவு பெரிய தண்டனையா?' மீண்டும் நினைவு சுழன்றது.

அவர் ஊருக்குப் போய் இரண்டு கடிதங்கள் அவளது தகப்பனாருக்குப் போட்டார். ஆனால் அவளுக்கு இருந்த ஆத்திரத்தில் அவள் தகப்பனார் பதில் எழுத விரும்பியதையும் தடுத்து விட்டாள். அதன் பிறகு அவரும் எழுதவில்லை. வீம்பின் மீது படிப்பில் முன்னேறி டாக்டரானாள். அதோடு 'சர்ஜரி'யில் கெட்டிக்காரி என்ற பிரபல்யத்தையும் அடைந்தாள். விரைவிலேயே டாக்டர் ரேணுகாவின் புகழ், திறமை, வளர்ந்து பல்கிப் பெருகியது. தூர தூர இடங்களிலிருந்தெல்லாம், 'கேஸ்கள்' அவள் இருக்கும் மருத்துவ நிலையத்தைத் தேடி வந்து சிகிச்சை பெற்றன. அன்றும் அப்படித்தான் அந்தக் கேஸ் வந்தது. அந்தக் கேஸைப் பரிசோதனை செய்த ரேணுகா பெரும் ஆலோசனையில் ஆழ்ந்தாள். கேஸ் ஒரு பெண். நோய் அவள் அழகிய உடலைப் பல விதத்திலும் பாழ் பண்ணி மேலும் வியாபித்து வந்து கொண்டிருந்தது. ரொம்பவும் பலவீனப்பட்டு நிற்கும் அந்தப் பெண்ணின் 'உடலுக்கு வலிவூட்டிப் பின் சிகிச்சையைத் தொடங்குவோம்' என்றால் அது வரை பரவி வரும் வியாதி சும்மா இராது. அப்பெண்ணின் உயிரையே பலி கொண்டு விடும். உடன் சிகிச்சையைத் தொடங்கவும் அந்தப் பெண்ணின் பலவீனம் பயமுறுத்தியது.

டாக்டர் ரேணுகா இவையனைத்தையும் நன்கு யோசித்தாள். இதற்கு முன் இத்தகைய கேஸ்களைத் தன் கைவண்ணத்தாலேயே குணம் செய்தும் இருக்கிறாள். ஆயினும் அப்பெண்ணின் பலவீனம் அவளை ஆலோசிக்க வைத்துவிட்டது. டாக்டர் ரேணுகாவின் புத்தி நுட்பம் விரைவில் ஒரு முடிவைக் கண்டது. அதன்படி 'வாழத் துடிக்கும் அவ்விளம் பெண்ணுக்கு வாழ்வளிக்கும் முயற்சியில் தீவிரமாக இறங்குவது; பிறகு இறைவன் விட்ட வழி' என்று முடிவு செய்த டாக்டர் ரேணுகா தன் முடிவைத் தலைமை டாக்டரிடம் தெரிவிக்க விரும்பி மிக சுறுசுறுப்புடன் கைகளைப் 'பேசினி'ல் கழுவித் துண்டில் துடைத்துக் கொண்டு டாக்டரின் அறையை நோக்கிப் புறப்பட்டாள்.

விரைந்து வந்த டாக்டர் ரேணுகா டாக்டரின் அறையுள் பேச்சுக் குரல் கேட்கவே வேகத்தைக் குறைத்துக்கொண்டு மெல்லத் திரையை விலக்கினாள். விலக்கியவள் அப்படியே திகைத்து நின்று விட்டாள். அறையுள் டாக்டருடன் சம்பாஷித்தபடி இருப்பவரைப் பார்த்த அவள் கண்கள் அப்படியே இமைக்க மறந்து நின்றன. பத்து வருஷங்களாக எவரை இரவும், பகலும் நினைத்து, நினைத்து மனத்தையும் உடலையும் வாடவைத்துக் கொண்டிருந்தாளோ அவரே! அவ்வறையில் தலைமை டாக்டருடன் சம்பாஷித்தபடி இருந்தார்! அவர் சம்பாஷணை....?

"...... எங்கள் பெரிய குடும்பத்துக்கு உழைத்து உழைத்தே உடலைப் பாழ்படுத்திக் கொண்டவள். அவள் உயிர் பிழைக்காவிடில் மன வேதனையே என்னைக் கொன்று விடும். பொருள் செலவைப் பற்றிக் கவலையில்லை. குழந்தைகளுக்குத் தாயாகவும் குடும்பத்தின் உயிர்நாடியாகவும் இருக்கும் அவளை எப்படியாவது காப்பாற்றித் தந்து விடுங்கள். உங்கள் வைத்திய விடுதியின் பெருமையும் பிரபல்யமுமே எனக்கு நம்பிக்கையளித்தன..."

பேரதிர்ச்சியால் தாக்குண்டு திகைத்த ரேணுகாவுக்குத் தான் நிற்கும் இடம் விளங்கவே சிறிது நேரம் சென்றது. பரிசோதனையின் போது அந்நோயாளிப் பெண், "எனக்காக இல்லாவிட்டாலும் என் அக்காளுக்காகவாவது என்னைக் காப்பாற்றி விடுங்கள் டாக்டர்...." என்று சொன்னதன் கருத்தும் ஒன்று சேர்ந்தால்.....? 'சே, சே! அவ்வளவு கிராதகரா அவர்?' என்று நினைத்த டாக்டர் ரேணுகாவுக்குக் குப்பென்று உடலெங்கும் அனல் பரவியது போலிருந்தது. அவள் ஆத்திரம் ஆயிரம் பங்கு அதிகரித்தது. அங்கு நிற்கவும் பிடிக்காமல் திரும்பிய டாக்டர் ரேணுகா தன் அறையை அடைந்து அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

அந்தப் பெண்ணைச் சேர்த்துக் கொள்வது பற்றிய அவள் ஆலோசனையைக் கேட்பதற்கு

அங்கு வந்த தலைமை டாக்டரிடம், உதட்டை அடக்கித் தன் நிலையைச் சமாளித்தபடி அந் நோயாளியின் நிலையை மெள்ள விளக்கித் தன் அபிப்பிராயத்தையும் சொல்லி விட்டாள். அதன் பிறகும் அங்கு இருப்புக் கொள்ளாமல், தலைமை டாக்டரிடம் ஏதோ சொல்லி விட்டு வீட்டுக்கு வந்து விட்டாள். இதன் பிறகே டாக்டர் ரேணுகா அறையில் உலவியபடி மனக் குமுறலைச் சமாளிக்கப் பழைய நினைவுகளில் மூழ்கினாள்.

தன்னை மீறி வந்த அசதியில் கண்ணயர்ந்து விட்ட ரேணுகா விழித்துக் கொண்டபோது பொழுது நன்றாக விடிந்து விட்டது. அன்று ஆபரேஷன் தினம் என்ற நினைவு வந்ததும் உடலில் சிறு நடுக்கமும், சோர்வும் ஏற்பட்டது. கடமையை எண்ணிக் கசப்புடன் எழுந்தவள் விரைவில் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள முனைந்தாள்.

வைத்திய விடுதிக்குச் செல்ல வேண்டிய நேரம் நெருங்க, நெருங்க, ஒருவித வெறியும், கசப்பும், வெறுப்பும் அவள் மனத்துள் எழுந்து ஒரேயடியாகக் கலக்கியது. 'அமைதியாக இருந்த மனம் இப்படித் தவிப்பதற்குக் காரணமானவர் மட்டும் தன் எதிரில் வந்தால்....?' பற்களைக் கடித்துத் தன் ஆத்திரத்தை அடக்கிக் கொள்ள முயன்றாள் டாக்டர் ரேணுகா. அதே சமயம் அவள் எண்ணியதன் எதிரொலியே போன்று. ''அம்மா! உங்களைப் பார்க்க வேண்டுமென்று முன் அறையில் ஒருவர் வந்து காத்திருக்கிறார்'' என்று வேலைக்காரி அறிவித்தாள்.

முன் அறையில் நுழைந்த ரேணுகா திடுக்கிட்டு நிமிர்ந்தாள். அவள் முகம் சிவந்தது. அரவம் கேட்டு நிமிர்ந்து டாக்டரைப் பார்த்த அவரும், ''நீய.... நீ.... நீயா?....'' என்றார் திகைப்புடன்.

''ஆம், நானேதான். அக்கினிசாட்சியாக மணந்து, கைவிடப்பட்ட உங்கள் மனைவியேதான். இல்லை, இன்னமும் நினைவுபடுத்த ஏதாவது அடையாளம் சொல்ல வேண்டுமா?''

ஆத்திரத்தைத் திரட்டிக் கொட்டிய டாக்டர் ரேணுகா சிறிது மூச்சு விடவே அவர் ஏதோ சொல்ல முனைந்தார். அதற்குள் அவரைத் தடுத்து விட்டு ஒலித்தது ரேணுகாவின் குரல். ''தேவையில்லை. உங்கள் சமாதானம் எதுவும் எனக்குத் தேவையில்லை. அதைக் கேட்க அவகாசம், ஆவல் இரண்டுமே எனக்கு இல்லை; என் கடமை எனக்குத் தலைக்கு மேல் காத்திருக்கிறது. நீங்கள் போகலாம்'' என்றவள் தன்சாமான்களை எடுத்துக்கொண்டு வேகமாக வெளியே வந்து விட்டாள். மூச்சு விடாமல் பேசியதால் உடல் தளர்ந்து வியர்த்தது. கைக் கடிகாரத்தைப் பார்த்தவள் பரபரப்படைந்து வேகமாக நடந்தாள். அதை விட வேகமாக அவள் மனமும் விரைந்தது.

'வியாதிக் கொடுமையிலிருந்து மீளத் துடிக்கும் ஓர் அபலைப் பெண்ணைச் சித்திரவதைக்கு உள்ளாக்குவதா? நேர்மையின் உருவான நீயா இந்த முடிவுக்கு வந்து விட்டாய்? இல்லை, வேண்டாம்.... என்னை வஞ்சித்தவரை வாழ வைத்து, இன்ப வெள்ளத்தில் ஆழ வைத்துப் பார்த்துக் கொண்டிரு... ஐயோ, இது என்ன கொடுமை....?' என்று



பேரன் : பாட்டி எனக்குத் தூக்கம் வரல்லே பாட்டி! ஏதேனும் கதை சொல்லு.

பாட்டி எனக்கும் தூக்கம் வரல்லே. தாத்தாவை எழுப்பு. அவரை விட்டுச் சொல்லச் சொல்லலாம்!

மனத்தைப் பிடித்துக் கொண்டு திணறினாள் டாக்டர் ரேணுகா. பவித்திரமான உள்ளம் பாவத்தைச் செய்யக் கூசியது. ஆத்திரமடைந்த உள்ளமோ அந்தக் கூச்சத்தைப் போக்கப் போராடியது.

விரைந்து வந்த ரேணுகா விடுதிக்குள் நுழையும்போது தலைமை டாக்டரின் குரல் ஓங்கி ஒலித்தது. ''நான் நேற்றே பல முறை சொன்னேனே. ஆபரேஷன் ஆரம்பிக்கும் முன் அப்பெண்ணின் கணவரது கைப்பட எழுதிய கடிதம் வேண்டுமென்று; நீ அவரிடம் வாங்கவில்லையா அதை!''

''அவரிடம் கேட்டேன் டாக்டர். இன்று காலை மெயிலில்தான் பேஷண்டின் கணவர் வருகிறாராம். வந்தவுடன் வாங்கித் தந்து விடுவதாகச் சொன்னார். ஏனோ இன்னும் அவர் வரவில்லை'' என்று பதில் அளித்தாள் உதவி டாக்டர் விமலா.

''என்ன பேஷண்டின் கணவர் மெயிலில் வருகிறாரா? அட்மிட் செய்தவர்...?'' – உள்ளே நுழைந்த டாக்டர் ரேணுகாவின் வாய்தான் இதைக் கேட்டது பரபரப்புடன்.

''அவர் என் மைத்துனர் டாக்டர்!'' கணீரென்று பதில் வந்தது. ஆபரேஷன் தியேட்டருக்குச் செல்லத் தயாராகக் கைவண்டியில் படுத்திருந்த அந்தப் பெண்ணிடமிருந்து.

'காலின் கீழ் உள்ள பூமி நழுவுகிறதா? கண் முன் உள்ள எல்லாம் இடம் பெயர்ந்து சுழலுகிறதா?' என்று தெரியாமல் பொறி கலங்கிக் கணநேரம் அசந்து விட்டாள் டாக்டர் ரேணுகா. இது கண நேரம்தான். அடுத்த கணமே சுதாரித்துக் கொண்டு விட்டவள், இரண்டு இனங்களாக இழந்து நின்ற நேர்மை, கம்பீரம் இரண்டையுமே தன் அழகிய முகத்தில் அள்ளிக் கொண்டு நிமிர்ந்தாள்.

ஆபரேஷன் ஆரம்பமாகி விட்டது. அதி துரிதமாக வேலை செய்யும் டாக்டர் ரேணுகாவின் கைகள் இன்று பம்பரமாகவே சுழன்றன. வெற்றி, தோல்வியை நிர்ணயம் செய்ய முடியாத ஆபரேஷனை வெற்றியுடன் செய்து முடித்த டாக்டர் ரேணுகா, தன் களைப்பையும்

பொருட்படுத்தாமல் ஆபரேஷனுக்குப் பிறகும் கவனித்துச் செய்யவேண்டிய சிகிச்சைகள் முழுவதையும் தானே முன்னின்று கவனித்துச் செய்து முடித்து விட்டுத்தான் வீட்டுக்குப் புறப்பட்டாள்.

மகா பயங்கரமான பாபத்தில் விழவிருந்த தன்னைச்சமயத்தில்காத்தருளிய இறைவனுக்கு வணக்கம் செலுத்தினாள் டாக்டர் ரேணுகா. களைப்புத் தாங்காது படுக்கையில் விழுந்தவள் குமுறி வரும் துக்கத்தைத் தாள முடியாமல் விம்மி, விம்மிக் குழந்தை போல் அழுதாள். 'அவர்' துரோகம் செய்யவில்லை என்று அறிந்த ஆனந்தம். மாசற்ற அவரைத் தாறுமாறாகப் பேசி அனுப்பி விட்டோமே என்ற வருத்தம் இரண்டும் அவளை விம்மி அழச் செய்தன. ஆத்திரப்பட்டுப் புத்தியிழந்து பேசி விட்டதை நினைந்து தன்னைத்தானே நொந்து கொண்டாள். 'என்ன நொந்து என்ன? கொட்டிய சொற்களை அள்ளமுடியுமா? இல்லை அவர்தான் மன்னிப்பாரா?' நொந்து, ஏங்கித் துவண்டு வாடினாள் டாக்டர் ரேணுகா.

நாட்கள் ஒன்றன் பின் ஒன்றாக மறைந்தன. ஒவ்வொரு நாளும் வழி மீது விழி வைத்துத் தவம் கிடப்பாள் ரேணுகா. அவள் கையால் குணங்கண்டு தேறி வரும் அந்தப் பெண்ணைப் பார்க்கப் பல உறவினரும் வந்து போனார்கள். ஆனால் அவள் எதிர்பார்த்த ரகு மட்டும் வரவேயில்லை. 'ஏன்? என்னைப் பார்க்கவே விரும்பவில்லையா அவர்?' மனம் நொந்து தவித்தாள் ரேணுகா.

'பட்டம், பதவி' என்பதற்காகப் பெண் தன் இயல்பை மறக்க முடிவதில்லை என்பதைக் கண்டாள் ரேணுகா. தான் ஒரு டாக்டர் என்பதையும் மறந்து அப் பெண்ணிடம் கேட்டாள்:— ''உங்களை அட்மிட் செய்தவர் பிறகு வரவில்லையா? அவர்தானே ரொம்பவும் கவலைப் பட்டார்'' என்றாள் மெதுவாக.

அப் பெண், ''ஆமாம், டாக்டர்; அவருக்காகவே நான் பிழைக்க வேண்டும் என்று வேண்டினேன். அவ்வளவு தங்கமான மனம் அவருக்கு. 'தாய், தந்தை, குடும்பம்' என்ற கடமையைச் செய்யவும் தவறவில்லை அவர்; தன் கஷ்டத்தில் பங்குகொள்ள மறுத்து உதாசீனம் செய்த மனைவிக்கும் துரோகம் செய்தவரல்ல. பாருங்கள் டாக்டர் என் ஆபரேஷன் அன்று இங்கு வந்து திரும்பியவர் என்னவோ ஒரே வேதனைப் படுகிறாராம். சரியாகச் சாப்பிடுவதும் இல்லையாம். நான் எழுந்ததும் முதல் காரியமாக அவர் மனைவியைத் தேடிப் பிடித்து அழைத்து வரப் போகிறேன்'' என்று பதிலளித்தாள். அந்தப் பெண்மணிக்குக் கண்ணில் நீர் கோத்து நின்றது.

பின்னும் பல விஷயங்களைக் கேட்கத் துடித்தது டாக்டர் ரேணுகாவின் மனம். ஆனால் திரண்டு எழுந்த துக்கத்தை அரும்பாடுபட்டு அடக்கிக் கொண்டவள் மெல்ல அவ்விடம் விட்டு அகன்றாள். அவள் மனம் கணவனது பாதங்களைத் தழுவத் துடித்தது.

அன்று நம்பிக்கையற்ற மனத்துடன் வேலியைப் பற்றி நின்றாள் ரேணுகா. அவளையும் மீறி அவள் விழிகள் வாசல் கேட்டின் பக்கமே திரும்பின. வியாதியஸ்தர்களைப் பார்த்துச் செல்லும் உறவினர் கூட்டம். அந்தப் பெண்ணின் கணவர், அண்ணன், தங்கை என்று பலர் வந்தார்கள். ஆனால் அன்றும் ரகு வரவில்லை. 'நாளை அப்பெண், 'டிஸ்சார்ஜ்' செய்யப் படலாம். அப்புறம், 'அவர்?' இனி அவரைப் பார்க்கும் பாக்கியம் கிடைக்காதா?' மனமும், உடலும் தள்ளாட வேலியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டவள், அதே சமயம் கேட்டில் நுழையும் உருவைக் கண்டு வியப்புடன் நிமிர்ந்தாள். சற்று வாடியிருந்தாலும் அந்தக் கம்பீரம் குறையாத முகம் அவள் உடலைச் சிலிர்க்க வைத்தது. கண்களைக் கசக்கிக் கொண்டு பார்த்தாள். வருபவர், 'அவர் அவரேதான்!'

வியப்பின் மேல் வியப்பு! ரேணுகாவுக்கு உள்ளம் படபடத்தது: கையில் பழங்கள் நிரம்பிய பையுடன் வந்தவர், அந்தக் கொடி வழியில் திரும்பி அவள் வீட்டை நோக்கியல்லவா வருகிறார்! நெஞ்சை விம்ம வைத்த விழி எடுக்காமல் பார்த்துக் கொண்டிருந்தவள் திடுக்கிட்டாள். மெதுவாக வந்து கொண்டிருந்தவர் நின்று ஒரு பெருமூச்சுடன் அவள் வீட்டைப் பார்த்தவர் ஏனோ மீண்டும் திரும்ப ஆரம்பித்து விட்டார்.

டாக்டர் ரேணுகாவின் கைகளுக்கு அத்தனை பலம் எப்படி வந்ததோ! மெல்லிய கருவிகளைப் பற்றி வேலை செய்யும் அவளது மென் விரல்கள் முள்வேலியை ஒரு நொடியில் முறித்து விட்டன! 'நில்லுங்கள்...!' என்றபடி பாய்ந்து வந்தவள், ''என்னை, மன்னிக்க மாட்டீர்களா?'' என்று கேட்டபடியே, துவண்டு விழும் கொடியென அவன் பாதங்களில் சுருண்டு விழுந்தாள்.

''அடடா! இதுவென்ன ரேணு! பிரபல டாக்டரான நீ இப்படிச் செய்யலாமா?'' என்றபடி குனிந்து அவளை ஆதரவுடன் தூக்கினான் ரகு. அவன் குனிந்த வேகத்தில் கைப்பை நழுவிப் பழங்கள் உருண்டன. பையிலுள்ள பர்ஸும் நழுவி விழுந்து சில்லறைகள் சிதறின. சில்லென்று அவள் கன்னத்தில் உராய்ந்து நின்றது அந்த எட்டணா நாணயம்.

''இல்லை; நான் டாக்டரில்லை! கணவன் அன்புக்காக, அவர் மன்னிப்புக்காக ஏங்கித் தவிக்கும் பெண்தான்'' என்றவள் அவனது பரந்த மார்பிலே தன் முகத்தைப் பதித்துக் கொண்டாள்.

''மன்னிக்க நீ செய்த குற்றம்?'' என்று கேட்டபடி அவள் அழகிய முகத்தை மெல்ல நிமிர்த்தினான் ரகு. ''அப்படியானால் இனி என்னை....'' என்று இழுத்த ரேணுகாவின் கேள்வியைத் தொடர்ந்து, ''ஒரு கணம்கூடப் பிரிய மாட்டேன் ரேணுகா!'' என்று முடித்த ரகு அவள் முகத்தை ஆர்வத்துடன் நோக்கினான். நோக்கியவன் திகைத்தான்.


பிரபல டாக்டரின் கம்பீரம், அமர்த்தல் இரண்டும் கலந்து ஒளிரும் டாக்டர் ரேணுகாவின் முகம் இல்லை. கணவன் அன்பில், அரவணைப்பில் விகசித்து மலர்ந்த பெண் என்னும் பொன் வண்ணம் ஒளிரும் ரேணுகாவின் முகமே இருந்தது. 'படித்தாலும், பட்டங்கள் பல பெற்றாலும் பெண் பெண்ணாகவேதான் இருக்கிறாள்' என்று பூரித்தான் ரகு.

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press Kilpauk Madras-10
Managing Editor T. Sadasivam.

அதிகரித்த பால்!
அதிகரித்த வனஸ்பதி!

எல்லாச் சத்துக்களும் உரிய அளவில் பெறுவதற்கு ஒவ்வொரு நபரும், மற்ற உணவைத் தவிர, தினசரி குறைந்த பட்சம் 280 கிராம் பால் அருந்த வேண்டுமென்று உணவு ஆராய்ச்சி நிபுணர்கள் கருதுகிறார்கள். புரதப் பொருள்கள், தாதுப் பொருள்கள், விட்டமின்கள் மற்றும் கொழுப்புச் சத்துக்கள் மிகுந்துள்ள பால் ஒரு பரிபூர்ண உணவாகும். சைவ உணவு சாப்பிடுபவர்களுக்கு ஜீவ சம்பந்தமான, அவசியமான, புரதப் பொருள்கள் பாலிலிருந்து மட்டுமே கிடைத்தாக வேண்டும். துரதிர்ஷ்டவசமாக, நம் நாட்டில், அருந்துவதற்கும் பாலிலிருந்து உண்டாக்கப்படும் பலவித பொருள்களைத் தயாரிப்பதற்கும் கிடைக்கக்கூடிய மொத்த பாலின் அளவு, தலைக்கு ஒரு நாளைக்கு 140 கிராம் மட்டுமே. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முடிவில் கூட கிட்டத்தட்ட 145 கிராம் பால் மட்டுமே கிடைக்கக்கூடும்.

போக்கு வரவு வசதிகள் பெருகுவதன் மூலமும் நல்ல நூதன பால் பண்ணைகளை அதிகமாக நிறுவுவதின் மூலமும் அருந்துவதற்குப் பால் இன்னும் கூடுதலாகக் கிடைக்கும். இது பொது மக்களுக்கு மட்டுமல்லாமல், பால்காரர்களுக்கும் நல்ல நிலையாகும். ஏனெனில், பாலிலிருந்து



தயாராகும் பொருள்களை விற்பதை விட பாலை விற்பனை செய்வதே பால்காரர்களுக்கு அதிக லாபகரமானது.

ஆனால், பால் பாலாகவே அதிகமாக அருந்தப்பட்டால் நெய்யின் உற்பத்தி குறைந்துவிடும். உலகத்தின் முற்போக்கு நாடுகளிலுள்ளதைப் போலவே, நம் நாட்டிலும், நெய்யைப் போன்ற விழுதான, கொழுப்புச் சத்தின் பெருகிவரும் தேவையை நாளடைவில் வனஸ்பதி பூர்த்தி செய்யும். பால் பண்ணைகள் மிக நூதன முறையில் அமைந்துள்ள, வெண்ணெய் ஏராளமாகக் கிடைக்கும் டென்மார்க், ஹாலந்து போன்ற நாடுகளில் கூட வனஸ்பதி போன்ற விழுதான தாவரக் கொழுப்பையே முக்கியமாக உபயோகிக்கிறார்கள். விட்டமின்கள் சேர்ந்த வனஸ்பதி பரிசுத்தமான வெண்ணெய்க்கும் நெய்க்கும் சரிசமமாக போஷாக்கு அளிக்க வல்லது. மேலும், எளிதில் கிடைக்கும் தாவர எண்ணெய்களிலிருந்து தயாரிக்கப்படுவதால் வனஸ்பதி உபயோகிக்க மிகச் சிக்கனமானது.

வனஸ்பதி மற்றும்
வனஸ்பதி போன்ற
கொழுப்புச் சத்துக்கள்
உலகமெங்கும்
உபயோகிக்கப்படுகின்றன

இதர விவரங்கட்கு கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்:-

தி வனஸ்பதி மான்யுபாக்சரர்ஸ் அஸோஸியேஷன் ஆப் இந்தியா
இந்தியா ஹவுஸ்,
போர்ட் ஸ்ட்ரீட், பம்பாய் 1

VMA: 3904

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

